28 °c
32 c
26 c
தெளிவான
காலநிலை
காணப்படும்

# உதயன்

பக்கம் 60

விலை: யாழ்.– 30/= வன்னி – 20/= கொழும்பு – 30/=

சுடர்: 29 கதிர்: 187 வள்ளுவர் ஆண்டு: 2045

வைகாசி 18, ஞாயிறு 01.06.2014

01 MAY 2014

**மஹிந்தவை வீட்டுக்கு அனுப்ப ஐ.தே. கவின் 'தலை' மாறவேண்டும்**



பக்கம் 14

# இம்மாத இறுதியில் வருகிறார் தென்னாபிரிக்க விசேட தூதுவர்

## கூட்டமைப்பு - அரசு பேச்சுக் குறித்து ஆராய்வதற்கு

கொழும்பு, ஜீன் 01

இலங்கை விடயங்களைக் கையாளும் தென்னாபிரிக்காவின் விசேட பிரதிநிதி சிறில் ரமபோஷா இந்த மாத இறுதியிலேயே இலங்கைக்கு வருகை தருவார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் இலங்கை அரசுக்கும் இடையிலான பேச்சுக்களில் அனுசரணையாளராகப் பங்கெடுப்பது தொடர்பில் ஆராய்வதற்காகவே, விசேட பிரதிநிதி சிறில் ரமபோஷா இலங்கைக்கு வருகை தரவுள்ளார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கடந்த நவம்பர் மாதம் தென்னாபிரிக்க ஜனாதிபதி ஜேக்கப் ஷூமாவிடம் விடுத்த வேண்டுகோளுக்கு அமைவாக, இலங்கை விவகாரங்களைக் கையாள்வதற்காக விசேட பிரதிநிதியாக சிறில் ரமபோஷா நியமிக்கப்பட்டார்.

அவர் இலங்கை அரசு தரப்பைத் தென்னாபிரிக்காவுக்குக் கடந்த பெப்ரவரி மாதம் அழைத்துப் பேச்சு நடத்தியிருந்தார். அதன் தொடர்ச்சியாக அவர் கடந்த ஏப்ரல் மாதம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பையும் தென்னாபிரிக்காவுக்கு அழைத்துப் பேசினார்.



சிறில் ரமபோஷா

இந்த நிலையில் இந்த மாதம் முதல் வாரத்தில் அவர் இலங்கைக்கு வருவார் என்று முன்னர் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இருப்பினும் தென்னாபிரிக்கத் தேர்தல்கள் காரணமாக அவரது பயணம் பிற்போடப்பட்டிருந்தது. இந்த மாத இறுதியில் அவர் இலங்கைக்குப் பயணம் செய்வார் என்று அரசு மற் றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு உத்தியோகபூர்வமற்ற முறையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கைக்குப் பயணம் செய்யும் ரமபோஷா, வடக்கு - கிழக்கு மாகாணங்களையும் நேரடியாகப் பார்வையிடுவார் என்பது குறிப்பிடத்தக்கது.

(த-5)

## தெற்கு மீனவர் அத்துமீறி கடலட்டை பிடிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 01

யாழ்.மாவட்டத்தில் கடல் அட்டை பிடிப்பதற்கு எந்தவொரு சங்கங்களும் அனுமதி வழங்காத நிலையிலும், தென்னிலங்கையைச் சேர்ந்த மீனவர்கள் முல்லைத்தீவு மாவட்டத்திலிருந்து கடல் வழியாக யாழ்.கடற் பரப்புக்குள் அத்துமீறி நுழைந்து சட்டவிரோதமான முறையில் கடல் அட்டை பிடிப்பதில் ஈடுபட்டு வருகின்றனர்.

கடந்த வருடம் வடமராட்சி கிழக்கு சுண்டிக்குளம் சங்கத்தின் அனுமதியுடன் தென்னிலங்கையைச் சேர்ந்த மீனவர்கள் இங்கு வந்து தங்கி நின்று தொழில் நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். இவர்களுக்குச் சீருடையினரும் முழுமையான ஒத்துழைப்பை வழங்கியமையினால் அனுமதிக்கப்பட்ட அளவுக்குஅதிகமான தென்னிலங்கை மீனவர்கள் கடலட்டை பிடிப்பதில் ஈடுபட்டனர்.

இந்த ஆண்டு வடமராட்சி கிழக்கிலுள்ள எந்தவொரு சங்கமும் தென்னிலங்கையைச் சேர்ந்த மீனவர்களுக்குக் கடல் அட்டை பிடிப்பதற்கான அனுமதியை வழங்கவில்லை. இருப்பினும் தென்னிலங்கையைச் சேர்ந்த நிறுவனமொன்றுக்குக் கடல் தொழில் நீரியல் வள அமைச்சு யாழ்ப்பாணத்திலும், முல்லைத் தீவிலும் மீன்பிடியில் ஈடுபடுவதற்கு நிபந்தனையுடன் அனுமதி வழங்கியுள்ளது.

29ஆம் பக்கம் பார்க்க

# முதல் வெளிநாட்டு பயணமாக இலங்கைக்கு வருகிறார் மோடி

## அதற்கு முன் வருவார் சுஷ்மா சுவராஜ்

புதுடில்லி, ஜீன் 1

மூன்று மாதங்களுக்கு வெளிநாட்டுப் பயணங்கள் எதனையும் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி மேற்கொள்ளமாட்டார் என்றும் அதன் பின்னர் அவர் மேற்கொள்ளும் முதலாவது வெளிநாட்டுப் பயணம் இலங்கைக்கானதாக இருக்கும் என்றும் இந்திய இராஜதந்திர வட்டாரங்களை மேற்கோள்காட்டித் தகவல்கள் வெளியாகியுள்ளன.



பிரதமர் மோடி

இருப்பினும் பிரதமர் மோடியின் இலங்கைப் பயணத்துக்கு முன்னதாகவே, வெளிவிவகார அமைச்சர் சுஷ்மா சுவராஜ் இலங்கைக்குப் பய

29ஆம் பக்கம் பார்க்க

# அனானை நாட்டுக்குள் அனுமதிக்க வேண்டும்

## அரசில் ஒரு தரப்பினர் விருப்பம்

கொழும்பு, ஜீன் 01

ஐக்கிய நாடுகள் சபையின் விசாரணைக் குழுவின் தலைவராகக் கோபி அனான் நியமிக்கப்படுவார் என்று எதிர்பார்க்கப்படும் நிலையில், அவரை விசாரணை மேற்கொள்ள இலங்கைக்குள் அனுமதிக்க வேண்டும் என்று அரசின் ஒரு தரப்பினர் தெரிவித்துள்ளனர்.

ஐ.நா. விசாரணைக்கு ஒத்துழைக்கப் போவதில்லை என்று

29ஆம் பக்கம் பார்க்க

# மயங்கிச் சரிந்தார் மாவை



மட்டக்களப்பு, ஜூன் 01

மட்டக்களப்புக் கல்லடியில் சமகால அரசியல் நிலை பற்றி உரையாற்றிக் கொண்டிருந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் செயலாளர் நாயகமும் நாடாளுமன்ற உறுப்பினருமான

29ஆம் பக்கம் பார்க்க

# வவுனியா சிறைக் கலவரம் டெல் றொக்ஷனே தலைவர்

## அரச தரப்புச் சட்டத்தரணி உயர்நீதிமன்றில் கூறினார்

யாழ்ப்பாணம், ஜீன் 01

வவுனியாச் சிறைச்சாலையில் இடம்பெற்ற தாக்குதலில் கொல்லப்பட்ட டெல் றொக்ஷனே, சிறையில் இடம்பெற்ற போராட்டத்துக்குத் தலைமை தாங்கியவர் என்றும், அவர் ஆயுதங்களைச் சிறையில் வைத்திருந்ததாகவும் அரச தரப்புச் சட்டத்தரணி உயர்நீதிமன்றத்தில்

29ஆம் பக்கம் பார்க்க

**இரணைமடு குடிதண்ணீர் திட்டம்: முடிவேதுமின்றி முடிந்தது கூட்டம்**

பக்கம் 02

# மிதிவெடியினால் முழங்காலுடன் காலை இழந்த 14 வயது மாணவன்

## கிளாலிக் கடற்கரையில் நேற்றுச் சம்பவம்

யாழ்ப்பாணம், ஜீன் 01

கிளாலிக் கடற்கரை மணலில் புதைந்திருந்த மிதிவெடி வெடித்ததில் படுகாயமடைந்த பாடசாலை மாணவனின் கால் முழங்காலின் கீழ் அகற்றப்பட்டுள்ளதாக யாழ். போதனா வைத்தியசாலை தகவல்கள் தெரிவித்தன.

கிளாலிப் பகுதியில் நேற்றுச் சனிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் இந்த விபத்துச்



காயமடைந்த மாணவன்

29ஆம் பக்கம் பார்க்க

# ஐ.நாவின் விசாரணை இம்மாத நடுப்பகுதியில்

## ஆரம்பம் என்கிறார் கூட்டமைப்பின் எம்.பி. சுமந்திரன்

கொழும்பு, ஜீன் 01

இலங்கை அரசுக்கு எதிரான ஐ.நாவின் விசாரணை இம்மாத நடுப் பகுதியில் ஆரம்பமாகும் என்றும், இது தமிழரின் அரசியல் தீர்வுக்கான வழிவகையை உறுதி செய்யும் என்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஏற்பாட்டில், 'சமகால அரசியலும் ஜெனிவாத் தீர்மானமும்' எனும் தலைப்பிலான மக்களைத் தெளிவுபடுத்தும் கூட்டங்கள் அம்பாறை, மட்டக்களப்பு மாவட்டங்களில் நேற்று நடைபெற்றன. இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு

29ஆம் பக்கம் பார்க்க

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# இரணைமடு குடிதண்ணீர் திட்டம்; முடிவேதுமின்றி முடிந்தது கூட்டம்

## அடுத்த கூட்டத்தில் ஆராயத் தீர்மானம்.

கிளிநொச்சி, ஜூன் 1
கிளிநொச்சி மாவட்ட விவசாயிகளின் தேவைகளைப் புறம் தள்ளிவிட்டு யாழ்ப்பாணம் இரணைமடு குடிதண்ணீர் விநியோகத் திட்டத்துக்கு நாம் ஒத்துழைக்கப்போவதில்லை என கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் இணைத் தலைவர்கள் தெரிவித்துள்ளனர்.

கிளிநொச்சி மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தின் இரண்டாம் நாள் அமர்வு நேற்றுக் காலை 9.30 மணிக்கு ஆரம்பமாகி நடைபெற்றது.

இரணைமடு யாழ்ப்பாணம் குடிதண்ணீர் விநியோகத் திட்டம் தொடர்பான விவாதம் இரண்டரை மணி நேரமாக இடம்பெற்றது.

இதில், கிளிநொச்சி மாவட்ட விவசாயிகளின் முழுமையான ஒப்புதல்கள் எவையும் பெறப்படாமல் வெறுமனே எழுத்தில் எழுதப்பட்டு செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தமே இந்தத் திட்டம். இதனை நாங்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. நாம் முற்றாக நிராகரிக்கின்றோம் என்று விவசாய அமைப்புகள் கருத்துக்களைத். தெரிவித்திருந்தன.

குறித்த ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டுள்ள சுப்பையா மனோகரன் என்பவரும் கூட்டத்துக்கு வருகைதந்திருந்தார். விவசாயிகள் முன்வைத்த கருத்தைக் கேட்ட வடக்கு முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன். இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட மனோகரன் நீர்தானா? என்று கேள்வியும் எழுப்பினார்.

தொடர்ந்து கருத்துத் தெரிவித்த வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன், இரணைமடுக் குளத்தில் இருந்து 80 கிலோ மீற்றர் தூரத்துக்கு அப்பால் உள்ள யாழ்ப்பாணத்துக்கு குடிதண்ணீரைக் கொண்டு செல்வதில் ஏற்படும் செலவு - யாழ்ப்பாணத்தை அண்டிய பகுதிகளில் தண்ணீரைப் பெறக்கூடிய மாற்றுத்திட்டங்களை பற்றி பரிசீலனை செய்ய வேண்டும் அல்லது கடல்நீரை நன்னீராக மாற்றும் திட்டம் பற்றி ஆய்வு செய்யப்பட வேண்டும். அவ்வாறு ஆய்வுகள் எதனையும் செய்திருக்கின்றீர்களா? என்று கேள்வி எழுப்பினார்.

குளத்தை அபிவிருத்தி செய்து ஐந்தாண்டுகளின் பின்னர் விவசாயிகளின் தேவைகளுக்கு அதிகமான நீர் இருக்குமானால் இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்த நாம் சம்மதிப்போம். இரணைமடுக் குளத்தின் தண்ணீர் விவசாயிகளின் தேவைகளுக்கே போதுமானதாக இல்லை எனவும் விவசாயிகளின் பிரதிநிதிகள் தெரிவித்திருந்தனர்.

இந்த நிலையில் கிளிநொச்சி மாவட்ட விவசாயிகளின் தேவைகளைப் புறந்தள்ளிவிட்டு யாழ். - இரணைமடு குடிதண்ணீர் விநியோகத் திட்டத்துக்கு ஒத்துழைக்கப் போவதில்லை என இணைத் தலைவர்கள் இருவரும் தெரிவித்தனர். அத்துடன் இந்தத் திட்டம் குறித்து அடுத்த கூட்டத்தில் ஆராயப்படும் எனவும் அறிவிக்கப்பட்டது.

இதேவேளை குடிதண்ணீர் திட்டம் தொடர்பாக கருத்துத் தெரிவித்த வடக்கு விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன், 2006ஆம் ஆண்டு விடுதலைப் புலிகள் தலைமையில் கிளிநொச்சியில் நடைபெற்ற கூட்டத்தில் சுப்பையா மனோகரன் இந்த திட்டத்தை எதிர்த்து கருத்துக்களை வெளியிட்டதுடன், இத்திட்டத்திற்கு மறுப்புத் தெரிவித்திருந்தார் என்பதற்கு ஆதாரமான அறிக்கையை இணைத் தலைமைகள் அதிகாரிகள் முன் அம்பலப்படுத்தினார்.

இந்த குடிதண்ணீர் விநியோகத் திட்டத்தின் நிதி திரும்பிவிடும் என பொறியியலாளர் கூறும் கருத்துக்களை நிராகரித்ததுடன் அமைச்சர் என்ற வகையில் இது குறித்து தமது அமைச்சும் முடிவெடுக்கும் எனவும் நிதி திரும்பிவிடும் என்பதற்காக மக்கள் விரோத திட்டங்களுக்கு ஒத்துழைக்க முடியாது என்றும் அவர் தெரிவித்தார்.

**அமைச்சர் விவசாயிகளுடன் இரகசியப் பேச்சு**

இதேவேளை நேற்றுக் காலை இரணைமடு விவசாய அமைப்புப் பிரதிநிதிகளை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமாரின் கிளிநொச்சி அலுவலகத்தில் சந்தித்து கலந்துரையாடினார். இதன் போது ஐந்து வருடங்களுக்கு இரணைமடுக் குடிநீர் விநியோகத் திட்டத்தை நிறுத்துமாறும், இக்காலப் பகுதியில் விவசாயிகளின் தேவைக்கு அதிகமாக குளத்தில் நீர் இருக்குமானால் விநியோகத் திட்டத்தை அமுல்படுத்துங்கள். நாம் அதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை. என்று இரணைமடுக்குள விவசாயிகள் சம்மேளனப் பிரதிநிதிகள் அமைச்சரிடம் தெரிவித்ததாக அறிய முடிகிறது. (ஐ-18-55)

## ஐந்து ரூபா குற்றியை விழுங்கிய 9 வயது சிறுமி அநுராதபுரத்துக்கு

யாழ்ப்பாணம், ஜூன் 01
ஐந்து ரூபா நாணயக் குற்றியை விழுங்கிய 9 வயதுச் சிறுமி யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக அநுராதபுரம் வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

தெல்லிப்பழை சித்தியம்புளியடி பகுதியைச் சேர்ந்த சிறி பாலவிக்னேஸ்வரன் கிருபாலினி என்ற சிறுமியே நாணயக் குற்றியைத் தவறுதலாக விழுங்கியுள்ளார்.

நேற்றுச் சனிக்கிழமை மாலை 4 மணியளவில் குறித்த சிறுமி வீட்டில் காசை வைத்து விளையாடிக் கொண்டிருந்துள்ளார். அவ்வாறு விளையாடிக் கொண்டிருந்தபோது, 5 ரூபா நாணய குற்றியை வாய்க்குள் வைத்த வேளை தவறுதலாக விழுங்கி விட்டார்.

நாணயக் குற்றி தொண்டைக்குள் சிக்கி சிறுமி கதைக்க முடியாமல் திணறிய போதே பெற்றோர்கள் அவரை தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் அனுமதித்துள்ளனர். தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையிலிருந்து யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட சிறுமி மேலதிக சிகிச்சைகளுக்காக நேற்று மாலையே அநுராதபுரம் வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார். (த-5-4-106)

## சோபித தேரர் வைத்தியசாலையில் அனுமதி

கொழும்பு, ஜூன் 1
கோட்டே நாக விஹாரையின் விஹாராதிபதியும் நீதிக்கும் சமத்துவத்துக்குமான ஒன்றியத்தின் ஏற்பாட்டாளருமான மாதுலுவாவே சோபித தேரர் நுரையீரல் பாதிப்படைந்த நிலையில் ஸ்ரீ ஜயவர்த்தனபுர வைத்தியசாலையில் நேற்று அனுமதிக்கப்பட்டுள்ளார். (த)

## மத அடிப்படைவாதம் குறித்து இலங்கையில் மக்கள் கவலை

### பிரிட்டன் தூதுவர் தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 1
இலங்கையில் மத அடிப்படைவாதம் குறித்து மக்கள் கவலையடைந்துள்ளனர் என, பிரிட்டன் தூதுவர் ஜோன் ரன்கின் தெரிவித்துள்ளார்.

வடக்கு, வடமத்திய, வடமேல் மாகாணங்களில் பயணத்தை மேற்கொண்டு, பொதுமக்களுடன் கலந்துரையாடிய பின்னர், அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

இந்தப் பயணத்தின்போது தன்னுடன் பேசியவர்கள் அனைவரும், மத அடிப்படைவாதம் குறித்துக் கவலையும் எதிர்ப்பும் தெரிவித்ததாகவும், பிரிட்டன் தூதுவர் கூறியுள்ளார்.

இலங்கையில் பாரம்பரியமாகக் காணப்படும் மதச் சகவாழ்வு இப்போது முக்கியமானது என்றும், கடந்த காலக் காயங்களை ஆற்றுவதற்கு அதனால் முக்கிய பங்காற்ற முடியும் என்றும் அவர் கூறினார்.

பிரிட்டன் தூதுவர் ஜோன் ரன்கின் கடந்த 27ஆம் திகதி முதல் 29ஆம் திகதி வரை வடக்கு, வட மேற்கு, வடமத்திய மாகாணங்களில் உள்ள குருநாகல், மன்னார், புத்தளம், அனுராதபுரம் பகுதிகளுக்குப் பயணம் மேற்கொண்டிருந்தார்.

அனுராதபுரத்தில் சிறிமாபோதி, ருவான்வெலிசய ஆகியவற்றுக்கும், மன்னாரில் மடுத் தேவாலயம், திருக்கேதீஸ்வரம் ஆலயம் மற்றும் புத்தளத்தில் பெரிய பள்ளிவாசலுக்கும் சென்ற இவர், மதப் பெரியார்களுடன் பேச்சுக்களை நடத்தியிருந்தார்.

அத்துடன் உள்ளூர் அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளையும் இவர் சந்தித்து பேச்சு நடத்தினார். (த)

## வளலாயில் காணிகள் பங்கீடு நடவடிக்கைகள் தொடர்கின்றன

### ஒருங்கிணைப்புக் கூட்டத்தில் கூறப்பட்டது பொய்யா?

யாழ்ப்பாணம், ஜூன் 1
வலி.வடக்கு மக்களை வளலாயில் மீள்குடியேற்றும் நடவடிக்கைகள் இடைநிறுத்தப்பட்டுள்ளதாக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டபோதும், வளலாயில் காணிகளைப் பங்கிட்டுக் கொடுப்பதற்கான அளவீட்டுநடவடிக்கைகள் நில அளவைத் திணைக்களத்தினால் தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

> “ஒருபகுதி மக்களின் காணிகளைப் பறித்து இன்னொரு பகுதி மக்களுக்கு வழங்குவது சரியான நடவடிக்கை அல்ல என்று சுட்டிக் காட்டியிருந்தார்.

வளலாயில் இராணுவக் கட்டுப் பாட்டுக்குள் உள்ளடங்கும் பொதுமக்களின் காணிகளைச் சுவீகரித்து, அந்தக் காணிகளில் மாதிரிக் கிராமம் அமைத்து வலி.வடக்கு மக்களைக் குடியேற்றுவதற்கு இராணுவத்தினருடன் இணைந்து யாழ். மாவட்டச் செயலகம் நடவடிக்கை மேற்கொண்டு வந்தது.

இந்த நிலையில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில், நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன், ஒருபகுதி மக்களின் காணிகளைப் பறித்து இன்னொரு பகுதி மக்களுக்கு வழங்குவது சரியான நடவடிக்கை அல்ல என்று சுட்டிக் காட்டியிருந்தார்.

இதன்போது கருத்துத் தெரிவித்திருந்த இணைத் தலைவர்களுள் ஒருவரான அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, மேற்படி நடவடிக்கை நிறுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவித்திருந்தார். இருப்பினும் வளலாயில் ஆரம்பிக்கப்பட்ட எந்தவொரு நடவடிக்கைகளும் இடைநிறுத்தப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது.

இராணுவத்தினர் குறித்த காணிகளில் துப்புரவு நடவடிக்கைகள் மேற்கொண்டு வருகின்றனர். அத்துடன் நில அளவைத் திணைக்களத்தினர் குறித்த காணிகளை அளவீடு செய்து, மாதிரிக் கிராமத்துக்கு அமைய வலி.வடக்கு மக்களுக்கு பகிர்ந்தளிப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொண்டு வருகின்றனர் என்று கூறப்படுகிறது. (த-5)

## புலனாய்வாளர் போர்வையில் வடக்கில் மோசடிக் கும்பல்கள்

### மாகாண சபை உறுப்பினர் சி.சிவமோகன் கண்டனம்

முல்லைத்தீவு, ஜூன் 1
தற்பொழுது வடக்கில் வாழும் மக்கள் அன்றாடம் மோசடிக்காரர்கள் விரிக்கின்ற சதி வலையில் விழுந்த வண்ணம் உள்ளனர். இராணுவப் புலனாய்வாளர்கள் என்ற போர்வையில் சிலர் மக்களை ஏமாற்றிக் கொண்டிருக்கின்றனர் என வடக்கு மாகாண சபை உறுப்பினர் மருத்துவர் சி.சிவமோகன் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த 15ஆம் திகதி ரஞ்சன் என மக்களால் அடையாளம் காணப்பட்ட இராணுவப் புலனாய்வாளரும் அவரது குழுவினரும் மோசடித் தனமாக படகு இயந்திரம் ஒன்றை அபகரித்துள்ளனர்

புதுமாத்தளனை சேர்ந்த மகாலிங்கம் மனோகரன் என்பவர் இடுப்பிற்கு கீழே இயங்காதவர். இந்தக் கும்பலின் பகல் கொள்ளையால் 2லட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியான படகு இயந்திரத்தை அவர் இழந்துள்ளார். இது குறித்து அவர் பல தடவைகள் பொலிஸ், இராணுவ முகாம் என அலைந்தும் பயன் இல்லை.

மேற்குறிப்பிட்ட புலனாய்வாளர்கள் தமது மேலதிகாரிக்குக் காட்டிவிட்டு தருவதாக கூறியே படகை எடுத்துச் சென்றுள்ளனர் - என்றார்

மோசடியில் ஈடுபட்டுள்ளவர்களின் தொலைபேசி இலக்கங்கள் 0771853807, 0766765358 எனவும் அவர் குறிப்பிட்டார். முல்லைத்தீவு மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி, இதில் கவனம் செலுத்தவேண்டும் எனவும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார். (த-101)

## யோகா பயிற்சி நிலையங்களை பதிவு செய்க

யாழ்ப்பாணம், ஜூன் 1
யாழ்.மாவட்டத்தில் செயற்பட்டுக் கொண்டிருக்கும் யோகா பயிற்சி நிலையங்களை பதிவு செய்யுமாறு வடக்கு மாகாண ஆளுநர் செயலகம் கேட்டுக்கொண்டுள்ளது.

இந்திய அரசின் நிதியுதவியுடன் யாழ்.மாவட்டத்தில் யோகா மத்திய நிலையமொன்று நிறுவப்படவுள்ளது.

இதற்காக, யாழ்.மாவட்டத்தில் தற்போது செயற்படும் யோகா பயிற்சி நிலையங்களை, ஆளுநர் செயலகத்தில் நாளை திங்கட்கிழமை பதிவு செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

மேலும் இது தொடர்பிலான கலந்துரையாடல் எதிர்வரும் 4 ஆம் திகதி ஆளுநர் செயலகத்தில் மு.ப 10 மணிக்கு இடம்பெறவுள்ளது என்றும் ஆளுநர் செயலகம் அறிவித்துள்ளது. (த-5)

இலங்கையின் விசா ஆலோசனை வரலாற்றில்
முதன்முறையாக ஐக்கிய இராச்சியத்தின் (UK)
இரண்டு வருட உழைக்கும்-படிக்கும் விசா
உங்கள் முன்மாதிரியான விசா ஆலோசனை
நிறுவனத்திடமிருந்து மட்டுமே

7 பேருக்கு மட்டுமே. IELTS தேவையில்லை.
O/L உம் வேண்டாம்.
45 வயதுக்குட்பட்ட எவரும் ஓடோடி வரவும்.
ஒரு மாதத்தில் பறக்கலாம்.
(அனைத்தும் நிபந்தனைகளுக்கு உட்பட்டவை)

குறிப்பு : இந்த விசாவை எவரும் எந்தச் சந்தர்ப்பத்திலும் சட்ட ஆய்வுகூடப் பரிசோதனைக்கு உட்படுத்திப் பார்க்கலாம் என்று சவால் விடுகின்றோம்.

7 நாள்களும் திறந்திருக்கும்

(48647)(7 6 3)

திசைகாட்டி [பிறைவேற்] லிமிற்
175, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 021 221 9016, 021 568 9090
www.thisaivisa.com



## முன்மாதிரியாகச் செயற்படும் உணவக உரிமையாளர்

தென்மராட்சி, ஜூன் 1
உணவு நிலையமொன்றின் சமையலறை தொடக்கம் கை கழுவும் இடம் வரை அவதானிக்கத்தக்கதாக கண்காணிப்புக் கமரா பொருத்தப்பட்டு அதன் நேரடி ஒளிபரப்பு கடையின் உள்புறத்தில் கணினித் திரை மூலம் வாடிக்கையாளர்களுக்கு கவனிக்க வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது.
இதனால் கடையின் சுகாதாரம் வாடிக்கையாளர்களைக் கவர்ந்துள்ளது.
இந்த முன்மாதிரியான செயற்பாடு சாவகச்சேரி ஆதார மருத்துவமனைக்கு அருகில் உள்ள உணவகம் ஒன்றில் பின்பற்றப்படுகிறது.
பொது சுகாதார பரிசோதகர்களின் பணிப் புறக்கணிப்பு காலத்தில் கடையின் சுகாதாரம் தொடர்பாக வாடிக்கையாளர்களுக்கு தெளிவுபடுத்தும் நோக்கில் இவ்வாறு கண்காணிப்பு கமரா பொருத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (த-9)

## தென்மராட்சியில் சிரமதானப் பணி

தென்மராட்சி, ஜூன் 1
சாவகச்சேரி நகரசபையின் சுகாதாரக் குழுவின் தீர்மானத்தின் பிரகாரம் ஜூன் மாதத்தில் பின்வரும் வட்டாரங்களில் பொதுமக்களின் பங்களிப்புடன் சிரமதானப் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளதாக நகரசபை தலைவர் இ. தேவசகாயம் பிள்ளை அறிவித்துள்ளார்.
ஜூன் மாதத்துக்கான சிரமதானம் இன்று ஞாயிற்றுக் கிழமை நான்காம் வட்டாரத்திலும், எதிர்வரும் நான்காம் திகதி ஒன்பதாம் வட்டாரப் பகுதியிலும், எதிர்வரும் 17 ஆம் திகதி ஆறாம் வட்டாரப் பகுதியிலும் இடம்பெறுமென தலைவர் அறிவித்துள்ளார்.
பிரதி மாதங்களிலும் நகர சபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் 3 வட்டாரங்களிலும் நகர சபை பணியாளர்கள் மற்றும் பொது அமைப்புக்களால் சிரமதானம் மூலம் துப்புரவு செய்யப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. (த-9)

# "புகைத்தலை முற்றாக ஒழிப்போம்" வலியுறுத்தி நேற்று யாழில் பேரணி

## மன்னாரிலும் விழிப்புணர்வு ஊர்வலம்



யாழ்ப்பாணத்தில்...


மன்னாரில்...

யாழ்ப்பாணம், ஜூன் 1
சர்வதேச புகைத்தல் எதிர்ப்புத் தினமான நேற்று சனிக்கிழமை பொது மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் யாழ்.நகரில் பிரமாண்டமான புகைத்தல் எதிர்ப்பு பேரணியொன்று நடத்தப்பட்டது.
நல்லூர் கந்தசுவாமி கோயிலின் முன்றிலில் இருந்து ஆரம்பித்த இந்தப் பேரணியில் யாழ்.பல்கலைக்கழக துணை வேந்தர் செல்வி வசந்தி அரசரட்ணம், யாழ்.மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா, யாழ்.சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் உட்பட வைத்தியத்துறை சார்ந்தவர்கள், சுகாதார திணைக்களத்தைச் சேர்ந்தவர்கள், இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ்.பிரிவினர், இந்து சமய அமைப்புக்களின் பிரதிநிதிகள், பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள், பொதுமக்கள் எனப் பெரும் எண்ணிக்கையானோர் கலந்து கொண்டனர்.
நல்லூர் முன்றிலில் இருந்து புறப்பட்ட பேரணி பருத்தித்துறை வீதி, ஸ்ரான்லி வீதி, காங்கேசன்துறை வீதி, ஆஸ்பத்திரி வீதி, முனீஸ்வரன் வீதி வழியாக யாழ்.வீரசிங்கம் மண்டபத்தைச் சென்றடைந்தது.
இதில் பங்குபற்றிய அமைப்புக்களின் பிரதிநிதிகள், புகைத்தலால் ஏற்படக்கூடிய விளைவுகளைச் சித்திரிக்கும் பதாகைகளையும் தம்முடன் எடுத்துச் சென்றனர்.
யாழ்.பல்கலைக்கழக சமுதாய மருத்துவத்துறை, யாழ்ப்பாண விஞ்ஞானச் சங்கம், யாழ்ப்பாணம் மருத்துவர் சங்கம், சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை ஆகியவை இணைந்து இந்தப் பேரணியை ஏற்பாடு செய்திருந்தன.
மத்திய பஸ் நிலையத்தில் புகைத்தல் எதிர்ப்பு விழிப்புணர்வுப் பலகையும் இதன் போது திரை நீக்கம் செய்து வைக்கப்பட்டது.
இதேவேளை, உலக புகைத்தல் எதிர்ப்புத் தினமான நேற்று மன்னாரிலும் புகைத்தலுக்கு எதிரான விழிப்புணர்வு ஊர்வலம் ஒன்று இடம்பெற்றது.
மன்னார் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தின் ஏற்பாட்டில் இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் மன்னார் கிளையின் அனுசரணையுடன் குறித்த விழிப்புணர்வு ஊர்வலம் இடம்பெற்றது.
குறித்த ஊர்வலம் காலை 9 மணியளவில் மன்னார் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்துக்கு முன்பாக ஆரம்பமாகி பிரதான வீதியூடாக மன்னார் வைத்தியசாலை வீதியைச் சென்றடைந்தது.
அங்கிருந்து மன்னார் பஸ்ார் பகுதியூடாக ஊர்வலம் மன்னார் மாவட்டச் செயலகத்தை அடைந்தது.
ஊர்வலத்தில் - மன்னார் சுகாதார வைத்திய அதிகாரி எஸ்.றோய்பீரிஸ், இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் மன்னார் கிளை அதிகாரிகள், செஞ்சிலுவைச் சங்க தொண்டர்கள், மன்னார் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை பணியாளர்கள், பாடசாலை மாணவர்கள் என நூற்றுக் கணக்கானவர்கள் கலந்து கொண்டதோடு புகைத்தலுக்கு எதிரான பதாகைகளையும் தாங்கியிருந்தனர். (த-7-56)

## பாம்பு தீண்டிய இளைஞர் வைத்தியசாலையில்

தென்மராட்சி, ஜூன் 1
மேய்ச்சலுக்கு கட்டப்பட்டிருந்த மாட்டை அவிழ்த்து வரச் சென்றபோது பாம்பொன்று தீண்டிய போதிலும் அதனைப் பொருட்படுத்தாமல் இருந்த இளைஞரொருவரின் உடல் நிலையில் நேற்று மாற்றங்கள் ஏற்பட்டதால் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார்.
இந்தச் சம்பவம் தனங்கிளப் பில் இடம்பெற்றது. இதே இடத்தைச் சேர்ந்த சிவானந்தன் கஜிந்தன் (வயது-20) என்பவரே பாம்பினால் கடியுண்டவராவார். (த-9)

# அனுரகுமார தலைமையில் புதிய தேசிய முன்னணி

## அமைச்சர்கள், எம்.பிக்கள் இரகசியப் பேச்சு

கொழும்பு, ஜூன் 1
இலங்கை அரசியலில் புதிய தேசிய முன்னணியொன்றை உருவாக்குவது தொடர்பாக, ஜே.வி.பியின் புதிய தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான அனுரகுமார திஸநாயக்கவுடன் அரசில் அங்கம் வகிக்கும் எட்டு அமைச்சர்களும், ஐ.தே. கட்சியைச் சேர்ந்த பத்து நாடாளுமன்ற உறுப்பினர்களும் இரகசியப் பேச்சுக்களை நடத்தியுள்ளதாகத் தெரிய வருகின்றது.
கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்பிருந்தே ஆரம்பிக்கப்பட்டுள்ள இந்தப் பேச்சுக்களில் சுதந்திரக் கட்சி மற்றும் அரசில் அங்கம் வகிக்கும் ஏனைய சிறு கட்சிகளைப் பிரதிநித்துவப்படுத்தும் அமைச்சர்கள் சிலரும் கலந்து கொண்டுள்ளதுடன், எதிர்காலத்தில் இடம்பெறவிருக்கும் ஜனாதிபதித் தேர்தலையோ, பொதுத் தேர்தலையோ இலக்காகக் கொண்டு மிக விரைவில் அத்தகைய கூட்டு முன்னணியொன்றை உருவாக்கிக் கொள்ள வேண்டியதன் அவசியம் குறித்து அந்தத் தரப்பினர் கவனம் செலுத்தியுள்ளதாகவும் தெரிய வருகின்றது.
தற்போதைய நிலையில் பலம் வாய்ந்த எதிரணியொன்றை உருவாக்கிக் கொள்ள வேண்டியுள்ளதன் அவசியத்தை இந்தப் பேச்சுக்களில் பங்கு கொண்ட ஐ.தே.கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள், ஜே.வி.பியின் தலைவருக்குச் சுட்டிக் காட்டியுள்ளதாகவும் தெரியவருகின்றது.
அரச தரப்புக்குள் இடம்பெறும் உள்ளகப் பிரச்சினைகளை நாடாளுமன்றத்தில் பகிரங்கப்படுத்துவதற்காக ஜே.வி.பியின் தலைவருக்கு அவை குறித்த தகவல்களை வழங்கி வரும் அமைச்சர்கள், இத்தகைய் முன்னணியொன்றை உருவாக்க வேண்டியதன் அவசியத்தைத் தொடர்ச்சியாக வலியுறுத்தி வருவதுடன், அத்தகைய முயற்சி ஜே.வி.பியின் புதிய தலைவரான அனுரகுமார திஸநாயக்காவின் வழிகாட்டலிலேயே மேற்கொள்ளப்பட வேண்டுமெனவும் சுட்டிக் காட்டியுள்ளதாக சிங்களப்பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டுள்ளது. (த)

# இறைச்சிக் கோழிகளை உயிருடன் விற்பனை செய்யாவிடில் நடவடிக்கை

## கரவெட்டி பிரதேச சபையில் தீர்மானம்

வடமராட்சி, ஜூன் 1
நெல்லியடிச் சந்தையை அண்மித்த பகுதிகளில் கோழிக் கடைகளை நடத்துவோர் உயிருடனேயே கோழிகளை விற்பனை செய்ய வேண்டும். அவற்றைக் கொன்று இறைச்சியாக விற்பனை செய்யக் கூடாது என கரவெட்டிப் பிரதேச சபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

**சந்தையில் இருந்து 500 மீற்றருக்கு அப்பால் அமைந்த கோழிப் பண்ணைகள் வியாபர்ர உரிமம் பெற வேண்டும்**

கரவெட்டி, வடமராட்சி தெற்கு மேற்குப் பிரதேச சபையின் மாதாந்தக் கூட்டம் சபைத் தலைவர் பொ.வியாகேசு தலைமையில் நடைபெற்றது.
இந்தக் கூட்டத்தில் கோழிக் கடை நடத்துதல் தொடர்பான பிரேரணை ஒன்றை ஆளும் தரப்பு உறுப்பினர் பொ.தம்பிமுத்து முன் வைத்திருந்தார்.
சந்தையை அண்மித்த பகுதிகளில் கோழிக்கடை நடத்துதல் தொடர்பாக ஆராயப்பட்ட போது, சந்தைக்கு அண்மித்த பகுதிகளில் கோழிகள் விற்பனை செய்வோரை அழைத்து கலந்துரையாடினோம். அதற்கமைய உயிருடன் கோழிகளை விற்பதற்கு மட்டும் அனுமதி வழங்கப்படும் என உரிமையாளர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது. சந்தையில் இருந்து 500 மீற்றருக்கு அப்பால் அமைந்த கோழிப் பண்ணைகள் யாவும் வியாபார உரிமம் பெற வேண்டும். 50 கோழிகளுக்கு மேல் வளர்க்கப்படும் கோழிப் பண்ணையொன்றுக்கு இரண்டாயிரத்து 500 ரூபாவும், 50 கோழிகளுக்கு குறைவாக வளர்க்கப்படும் கோழிப் பண்ணையொன்றுக்கு ஆயிரத்து 500 ரூபாவும் உரிமமாக அறவிடப்பட வேண்டும் என பிரேரணையில் தெரிவிக்கப்பட்டிருந்தது.
இந்தப் பிரேரணையை எதிரணி உறுப்பினர் சி.கணபதிப்பிள்ளை வழிமொழிய தீர்மானம் சபையினால் நிறைவேற்றப்பட்டது.
சபையில் நிறைவேற்றப்பட்டுள்ள ஏனைய தீர்மானங்கள் வருமாறு:
* இந்த ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தில் பிரதேச சனசமூக நிலையங்களின் தளபாடக் கொள்வனவுக்காக சபை நிதியில் இருந்து 11 லட்சத்து 75 ஆயிரம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. மாகாண முதலமைச்சரின் அனுமதி கிடைத்ததும் சனசமூக நிலையங்களுக்கு தளபாடங்கள் பெற்றுக் கொடுக்கப்படும்.
* துன்னாலை வேரொண்டையில் உள்ள மயானங்களின் மேற்குப் பகுதி மயானத்தைப் பயன்படுத்துவோர் அதற்கென அபிவிருத்திச் சபை ஒன்றை அமைத்துச் செயற்பட விடுத்த கோரிக்கை சபையால் ஏற்றுக் கொள்ளப்பட்டது.
* உடுப்பிட்டியில் ஆயுள்வேத வைத்தியசாலை அமைக்க 5 பரப்புக் காணி அன்பளிப்பாகக் கிடைத்துள்ள நிலையில், ஆயுள்வேத வைத்தியசாலை அமைக்க 12 மில்லியன் ரூபா தேவை என மதிப்பிடப்பட்டுள்ளது. இதற்குத் தேவையான நிதி போதாமையால் சபையின் சில நிலையான வைப்புகளை முடிவுறுத்தி நிதியைப் பெற்றுக்கொள்ள வடக்கு மாகாண முதலமைச்சரிடம் அனுமதி கோரப்படும்.
* இந்த ஆண்டுக்கான சபை வரவு- செலவுத் திட்டத்தில் மயானங்களின் அபிவிருத்திக்கு நிதி ஒதுக்கீடு செய்ததன் பிரகாரம் வல்லை மற்றும் முள்ளி மயானங்களுக்கு எல்லை மதில் அமைப்பதற்கு ஒரு லட்சத்து 10 ஆயிரம் ரூபா வழங்கப்படும். என்பனவே அத்தீர்மானங்களாகும். (த-173)

# வரணியில் சங்கக்கடை உடைத்து திருட்டு

தென்மராட்சி, ஜூன் 1

தென்மராட்சி கிழக்குப் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் வரணி கிளைக் கடை கடந்த வியாழக்கிழமை இரவு உடைக்கப்பட்டு பொருள்கள் திருடப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.

நேற்று முன்தினம் காலை கிளைக் கடையைத் திறக்கச் சென்ற கிளை முகாமையாளர் கடை உடைக்கப்பட்டிருப்பதைக் கண்டு சங்கத் தலைமைப்பீடத்துக்கு அறிவித்துள்ளார்.

அத்துடன் கொடிகாமம் பொலிஸ் நிலையத்துக்கு முறைப்பாடு செய்துள்ளார்.

கடை உடைக்கப்பட்டு இருந்ததால் உள்ளே சென்று பார்வையிடாததால் திருட்டுப் போன பொருள்களின் பெறுமதி மதிப்பிடவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சம்பவம் தொடர்பாக கொடிகாமம் பொலிஸார் சாவகச்சேரி நீதிமன்றில் அறிக்கை தாக்கல் செய்துள்ளனர். (வ-9)

# கைதடியில் இன்றிரவு பட்டிமன்றமும் நாடகமும்

கைதடி, ஜூன் 1

விநாயகர் சனசமூக நிலையத்தின் கைதடி தென்கிழக்கு தெருவடி சித்தி விநாயகர் (குட்டிப் பிள்ளையார்) ஆலயத்தின் வருடாந்த அலங்கார உற்சவத்தின் நிறைவு நாளான இன்று ஞாயிறு இரவு 8.30 மணியளவில் விநாயகர் விளையாட்டுக் கழக மைதானத்தில் பட்டிமன்றமும் நாடகமும் இடம்பெறவுள்ளன.

சண்டிலிப்பாயூர் அமரிசை விவாத குழுவினர் வழங்கும் "ஆணும் பெண்ணும் மகிழ்வாக இருப்பது திருமணத்தின் முன்பா? திருமணத்தின் பின்பா?" எனும் தலைப்பிலான பட்டிமன்றமும், அதனைத் தொடர்ந்து "அரிச்சந்திர புராண மயான காண்டம்" நாடகமும் நடைபெறும். (ஒ)

# பனை அபிவிருத்தி நாளை மாநாடு

யாழ்ப்பாணம், ஜூன் 1

கைதடி பனை ஆராய்ச்சி நிறுவனத்தின் செயற்பாடுகளை பரப்புரைப்படுத்தி பரம்பலாக்குவதையும், பனை வளம் சார்ந்த கைத்தொழில்களை மேம்படுத்தி மக்களின் வாழ்வாதாரத்தை விருத்தி செய்தல் தொடர்பான மாநாடு நாளை திங்கட்கிழமை யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் காலை 9 மணி முதல் பி.ப. 3 மணிவரை நடைபெறும்.

இந்த மாநாட்டில் பனை சார் பொருள்களின் பயன்பாடு பற்றியும் அவற்றின் திறன்கள் குறித்து பலரும் உரையாற்றவுள்ளனர்.

இந்த மாநாடு தொடர்பில் பனை அபிவிருத்தி சபைத் தலைவர் பசுபதி சீவரத்தினம் விவரிக்கையில்;

"பனை வள ஆராய்ச்சி மேம்படுத்தல், பனை சார் உற்பத்திகளின் நிறுவனம் பனை தொடர்பான ஆராய்ச்சிகளை மேற்கொள்வதுடன் பனை உற்பத்திகளின் தரத்தை மேம்படுத்தல் பனை உற்பத்தித் திறனை உள்ளீடுகளை பகுப்பாய்வு செய்தல், தொழில்நுட்ப ஆலோசனை வழங்கல், பகுப்பாய்வு அறிக்கைகள் வழங்கல் போன்ற செயற்பாடுகளை நிறைவேற்றி வருகின்றது- என்றார். (ஒ-10)

## காரைநகரில் இருந்து சங்குப்பிட்டியூடாக மன்னாருக்கு பஸ்

யாழ்ப்பாணம், ஜூன் 1

காரைநகருக்கு டிப்போவில் இருந்து இன்று முதல் சங்குப்பிட்டியூடாக மன்னாருக்கு இ.போ.ச. பஸ் சேவை ஆரம்பிக்கிறது. காரைநகர் டிப்போவில் இருந்து அதிகாலை 4.50 மணிக்கு 783 பாதையால் ஆரம்பித்து யாழ். பஸ் நிலையம் வந்தடைந்து காலை 6.45 மணிக்கு சாவகச்சேரி சங்குப்பிட்டி ஊடாக மன்னார் பஸ் நிலையத்தை 9.45 மணிக்குச் சென்றடையும்.

இந்த பஸ் 10.30 மணிக்கு மன்னார் பஸ் நிலையத்தில் இருந்து புறப்பட்டு மேற்படி பாதையூடாக 1.30 மணிக்கு யாழ்.பஸ் நிலையத்தை வந்தடையும். பின்பு 2.30 மணியளவில் யாழ்.பஸ் நிலையத்தில் இருந்து புறப்பட்டு 782 பாதையால் காரைநகர் துறைமுகத்தை 3.50 மணிக்குச் சென்றடையும். (ஒ)


## கடை வாடகைக்கு

இல.98 பெரிய கடை வீதியில் உள்ள கடை வாடகைக்குண்டு.
தொடர்புகளுக்கு: 0775790147


## மரண அறிவித்தல்

### துரையப்பா கணநாதமுத்துலிங்க ஐயா

(தயா படமாட உரிமையாளரின் தந்தை)



யாழ் அராலி கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட துரையப்பா கணநாதமுத்துலிங்கஐயா 27.05.2014 செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான துரையப்பா-செல்வரத்தினம் தம்பதியரின் அருமை மகனும், காலஞ்சென்ற விஜயரத்தினம் மற்றும் அன்னலட்சுமி தம்பதியரின் அன்பு மருமகனும், விஜயகுமாரியின் அன்புக் கணவரும் விஜிதா, ஜெயகாந்த் (பிரான்ஸ்), ரஜிதா (பிரான்ஸ்) தயாகாந்த், சஜிதா, கவிதா ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற வாலாம்பிகை மற்றும் தனேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரரும், அகிதரன் (பிரான்ஸ்), சிவசௌமி (பிரான்ஸ்), முருகவேல் (பிரான்ஸ்), சதீஸ், லலிதவேணி, கேதீஸ்வரன் ஆகியோரின் அன்பு மாமனும், காந்தி, பொன்னம்பலம், விஜயகுமார், இராஜகுமார், விஜயலட்சுமி, அன்னகுமார் ஆகியோரின் அன்பு மைத்துனரும், கவிந்தனா, கனிஷா, சாருசன், தயானுசன், வினிதன், ஜனுசன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (02.06.2014) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் அராலி கிழக்கு மினங்குப்பிட்டி, இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

வாலையம்மன் கோயிலடி,
அராலி கிழக்கு, வட்டுக்கோட்டை,
யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.
077 347 7728

('48654) (10)

## மரண அறிவித்தல்

### திருமதி கமலாதேவி பரராஜசிங்கம்



வைமன் வீதியைச் சேர்ந்த திருமதி கமலாதேவி பரராஜசிங்கம் நேற்று (31.05.2014) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலசென்றவர்களான மயில்வாகனம். தவமணி தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற பரராஜசிங்கத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற சகுந்தலா தேவியின் அன்புச் சகோதரியும் பத்மாவதியின் மைத்துனியும் சுவேந்திரன் காலஞ்சென்றவர்களான மகேந்திரன் கஜேந்திரன் மற்றும் ரூபேந்திரன், சர்மிளா ஆகியோரின் அன்புத் தாயும், சுரேஷ்குமார், ராஜ்குமார், ரவிந்திரகுமார், ரமேஸ் குமார், சிவகுமார், தர்சினி, சுபாசினி சதீஸ்குமார், நிசாந்தினி ஆகியோரின் சிறிய தாயாரும் சித்ரா, தர்சியா ஆகியோரின் மாமியாரும் சுஜந்தன், பிருந்தா, டக்சிகா, ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01/06/2014) ஞாயிற்றுக்கிழமை பி.ப.2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

21/5, வைமன் வீதி, 1 ஆம் ஒழுங்கை,
நல்லூர் யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்


## தேவை

Van Sales க்கு
உதவியாளர்கள்
தேவை

தொடர்பு:-
0773041447


## 25 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில்
16
05
1921



ஆண்டவன் அடியில்
01
06
1989

அமரர் திருமதி அருளம்மா அந்தோணிப்பிள்ளை

ஐயிரு திங்கள் சுமந்தெமையீன்று
பக்குவமாய் காத்து வளர்த்த எம் தாயே!
இருபத்தைந்து ஆண்டுகள் கடந்தாலும் நினைவின் பொக்கிஷமாய்
என்றும் வாழ்வீர்கள் எம் மனங்களிலே அம்மா!

குடும்பத்தினர்.


## வீட்டுப் பணிப்பெண் தேவை

கொழும்பில் மூன்று பேர் கொண்ட தமிழ்க் குடும்பத்திற்கு வீட்டுப் பணிப்பெண் தேவை.
சம்பளம் 15,000/=
தொடர்பு: 077 261 9470

(41281) (7.6.3)



## வாடகைக்கு விடப்படும்

வைத்தீஸ்வராக் கல்லூரி அண்மையில் மானிப்பாய் வீதியில் புதிதாகக் கட்டப்பட்ட மூன்று மாடி கட்டடம் வாடகைக்கு விடப்படும்

1 ம் மாடி தராசோ
2 ம் மாடி மாபிள்
3 ம் மாடி மாபிள்

குடி தண்ணீர், மின்சார சகல வசதியும் உண்டு.

1 ம் மாடி சதுர அடி - 2810
2 ம் மாடி சதுர அடி - 2810
3 ம் மாடி சதுர அடி -2643
மொத்த சதுர அடி - 8263

தனித்தனியாகவோ மூன்றும் ஒன்றாகவோ கொடுக்கப்படும் எட்டு வாகனப் பாக்கிங் உண்டு.

வங்கிச் சேவைக்கும் நிறுவனங்களுக்கும் நல்ல இடம்

1 மூன்று கடைகள்
2 ஐந்து றூம் 2 ஹோல்
3 ஐந்து றூம் 2 ஹோல்

தொடர்புகளுக்கு
T.P. 0770731691
0771698208
0770279456

(48656)


## மரண அறிவித்தல்

### திருமதி சின்னத்துரை - நாகரெத்தினம்



யாழ்ப்பாணம் கொக்குவிலை பிறப்பிட மாகவும் ஆனைப்பந்தியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சின்னத்துரை - நாகரெத்தினம் 31.05.2014 சனிக்கிழமை இறைபதம் அடைந்து விட்டார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இல.94, பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்தி,
யாழ்ப்பாணம். (48666)

தகவல்:
குடும்பத்தினர்
சி. சிவராமலிங்கம்
T.P 0776623657
இ.தயாகுணலிங்கம்
T.P 0776624432


## ALLIANCE FRANÇAISE DE JAFFNA

பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்

af பிரெஞ்சு மொழி af Alliance Française de Jaffna


கற்பதற்கு FRENCH EMBASSY இன் கீழ் இயங்கும் உலகின் முதல்தர சர்வதேச நிறுவனம் AF மட்டுமே. 1884 PARIS இல் நிறுவப்பட்டது. யாழில் 1976 முதல். 136+ நாடுகளில் 1040+ கிளைகள். உயர் தகுதியுடைய ஆசிரியர்கள், அங்கீகரிக்கப்பட்ட CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS. பிரெஞ்சு மொழிபெயர்ப்புகள், AUDIO-VISUAL AIDS, பிரமாண்டமான நூலகம்

பிரான்ஸ் செல்வோர் விரையுங்கள்...
உடன் அழையுங்கள்...
021 222 8093 61, கச்சேரி - நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.

கச்சேரி ➡ எக்காளத்தொனி ஆலயம் ➡ AF
ஆரியகுளம் ➡ நக்கா றோட் (J/John Bosco's School, British Council) ➡ AF


## மரண அறிவித்தல்

### நாகலிங்கம் செல்லத்துரை



அரியாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நாகலிங்கம் செல்லத்துரை (மின் இணைப்பாளர்) (29.05.2014) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நாகலிங்கம் - தங்கம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற மகேஸ்வரியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் நடனலட்சுமி தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற சின்னம்மா மற்றும் நாகம்மா காலஞ்சென்ற செல்லம்மா ஆகியோரின் அன்புச் சகோதரனும்

சங்கர் (நோர்வே) சுமதி (லண்டன்) ரூபி.ரமேஸ் (லண்டன்) லாவண்யா (லண்டன்) ஆகியோரின் அன்பு தந்தையும் சத்தியஜோதி (நோர்வே) தர்மேந்திரா (லண்டன்) காலஞ்சென்ற சிறிகுமார் மற்றும் சுதன் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும் யசிக்கா, வர்ஷன், சோபிகா (நோர்வே) துஷாந், தர்ஷன்னியா (லண்டன்) டிலக்ஷன், பிரகாஷ், தனுசன், (யாழ்.பரியோவான் கல்லூரி) மகிஷா (லண்டன்) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.06.2014) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10.00 மணியளவில் 16/1 கனகரத்தினம் வீதி, அரியாலையில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(48667)

தகவல்:
குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்

### திருமதி பபிரஞ்சினி தெய்வேந்திரம்



அச்சுவேலி வடக்கை பிறப்பிடமாகவும் ஜேர்மனியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பபிரஞ்சினி தெய்வேந்திரம் (26.05.2014) திங்கட்கிழமை ஜேர்மனியில் காலமானார்.

அன்னார் தெய்வேந்திரத்தின் பாசமிகு மனைவியும் காலஞ்சென்ற சுவாந்தர் கந்தசாமி - தங்கமலர் தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற சண்முகம் - பார்வதி தம்பதியரின் அன்பு மருமகளும், முகுந்தா (ஜேர்மனி) விஸ்னுயன் (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தாயாரும், வேல்ராஜன் (சுவிஸ்), காலஞ்சென்ற சுதாகரன் மற்றும் பிரபாகரன் (கனடா), தயாகரன் (சுவிஸ்), சதீஸ்கரன் (சுவிஸ்) கஜேந்திரன் (சுவிஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், அன்ரு (ஜேர்மனி) வின் அன்பு மாமியும், வனிதா (சுவிஸ்) றோகினி (கனடா), கிஷாந்தி (சுவிஸ்), பேபி தர்மிகா (சுவிஸ்) புவனேஸ்வரி, ஜெகதீஸ்வரி (கனடா) சுப்பிரமணியம், காலஞ்சென்ற கிருஷ்ணராசா ஆகியோரின் அன்பு மைத்துனியும், சிவலிங்கம், காலஞ்சென்ற மகேந்திரலிங்கம் ஆகியோரின் அன்பு மருமகளும், சந்திராதேவி (இந்தியா), செல்வராணி (பிரான்ஸ்), வசந்தகுமாரி (கனடா) ஆகியோரின் பெறாமகளும், செல்லம்மா (சேலம்), பவளம் காலஞ் சென்ற கண்மணி ஆகியோரின் அன்பு மருமகளும், ஜெஸ்விதா (மெலிஷா) ஆகியோரின் அன்பு பேர்த்தியும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.06.2014) ஞாயிற்றுக்கிழமை ஜேர்மனியில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பாடசாலை வீதி,
அச்சுவேலி வடக்கு, அச்சுவேலி.

(C/13953)

தகவல்
பொ.சிவலிங்கம் (மாமா)
தெய்வேந்திரம் + 4923648998891
வேல்ராஜன் + 41795453677

## யாழ்.நகரில் நிறுத்தப்பட்ட மோட்டார் சைக்கிள் திருட்டு

யாழ்ப்பாணம், ஜூன் 1

யாழ். ஆஸ்பத்திரி வீதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிள் ஒன்று கடந்த செவ்வாய்க்கிழமை திருடப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

அதே வீதியில் வசிக்கும் ஒருவருடைய ஒரு லட்சத்து 20 ஆயிரம் ரூபா பெறுமதியான மோட்டார் சைக்கிளே திருடப்பட்டுள்ளது. அது தொடர்பில் விசாரணை மேற்கொள்ளப்படுகிறது.

இதுதவிர சிறுப்பிட்டியில் வீடு புகுந்து ஒரு லட்சத்து 20 ஆயிரம் ரூபா பெறுமதியான மோட்டார் சைக்கிள் ஒன்று திருடப்பட்டுள்ளது.

திருடப்பட்ட மோட்டார் சைக்கிகளை அவற்றைப் பாகங்களாக வேறாக்கி அதன் பாகங்கள் விற்பனை செய்யப்பட்டு வந்த நிலையில் அவர்களில் சிலர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டிருந்தனர். (வ-4)

# பஸ்களில் இரு மொழிகளிலாவது பெயர்ப்பலகை அமைய வேண்டும்

## கோரிக்கை முன்வைப்போம் என்கிறார் வவுனியா சமூக ஒருமைப்பாட்டு மையத் தலைவர்

வவுனியா, ஜூன் 1

பஸ்களில் பெயர் பலகைகளில் குறைந்த பட்சம் இரு மொழிகள் என்றாலும் இடம்பெற வேண்டும் என்ற கோரிக்கையை நான் முன்வைப்பேன். அவ்வாறு இல்லாவிட்டால் சட்ட நடவடிக்கை எடுப்பேன்.

வவுனியாவில் இடம்பெற்ற சமூக ஒருமைப்பாட்டு மையத்தின் இந்த வருடத்துக்கான புதிய நிர்வாகத் தெரிவில் தலைவராக தெரிவு செய்யப்பட்ட த.தர்ஸன் தனது தலைமையுரையில் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு மேலும் கூறியதாவது:- அண்மைக்காலமாக இடம் பெற்று வரும் மதம் சார் பாகுபாடுகளும் பழிவாங்கல்களும் வருத்தமளிப்பனவாக உள்ளன.

இலங்கை ஒரு பல்லின கலாசாரம் கொண்ட நாடு என்பதை பலர் ஏற்றுக்கொள்வதற்குச் சங்கடப்படுகின்றனர். மதத்தின் பால் சொல்லப்பட்ட சித்தாந்தங்களையும் வேதங்களையும் வியாபாரத்துக்கு ஏற்றாற் போல விற்பனைப் பொருளாக கூவி விற்கும் நிலைக்கு மதத்தை சில விஷமிகள் பயன்படுத்த முனைகின்றனர். அவர்களுக்கு வேண்டியது மதத்தின் தார்மீக அன்பு அல்ல. விளம்பரமும் வேட்கை தீர்த்தலுமே யாகும். இந்த நிலை அதள பாதாளத்துக்கு மனித சமூகத்தை இட்டுச் செல்லும் ஆபத்தான செயல். இத்தகைய தீய சக்திகளிடமிருந்து மனிதாபிமானத்தையும், மத சுதந்திரத்தையும் காப்பாற்ற வேண்டும். அப்போதுதான் நாம் அரசியல் யாப்பின் அடிப்படை உரிமைகளை காப்பாற்றிக் கொள்ள முடியும்.

இரு மொழிகளிலாவது பஸ்களில் பெயர்ப்பலகை இருக்க வேண்டும் என்பதை சமூக ஒருமைப்பாட்டு அமைச்சரிடமும் பஸ் சங்க பிரதிநிதிகளிடமும் தனித்தனியாக சந்தித்து வலியுறுத்தவுள்ளேன். அது இயலாது போகுமானால் சட்ட நடவடிக்கை குறித்து மக்களுக்கு தெளிவுபடுத்துவேன் என்று குறிப்பிட்டார்.

இந்த வருடத்துக்கான புதிய நிர்வாகத் தெரிவில் செயலாளராக எஸ். லோஜினியும், பொருளாளராக எஸ். நிரோசனும், நிர்வாக சபை உறுப்பினர்களாக வீ.சிறீதரன், ஞா.ஜெயமதன், எஸ். மகேஸ்வரி, எஸ்.இரோஸ், எஸ்.பிரசாத், எஸ். நிம்சாத், எஸ். பிரதா ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டனர். (வ-402)

## கோபம் வினையானது; காவலில் காரிகை

தென்மராட்சி, ஜூன் 1

கட்டுக்கடங்காத கோபத்தின் காரணமாக பெண்ணொருவரைக் கை, கால்களால் தாக்கிக் காயங்களை ஏற்படுத்திய காரிகையை காவலில் வைக்குமாறு சாவகச்சேரி நீதி மன்றில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை உத்தரவிடப்பட்டது.

அல்லாரையைச் சேர்ந்த மற்றொரு பெண்ணைத் தாக்கி காயப்படுத்தியதாக கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் குறித்த பெண்ணுக்கு எதிராகச் செய்யப்பட்ட முறைப்பாட்டை அடுத்து அப் பெண்ணைக் கைது செய்த பொலிஸார் நேற்று அவரைச் சாவகச் சேரி நீதிமன்றில் முற்படுத்தினர்.

வழக்கை விசாரித்த நீதிவான் குறித்த பெண்ணை எதிர்வரும் 13 ஆம் திகதிவரை விளக்க மறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (வ-9)

# யாழ். ஆரியகுளம் சந்தி அருகே தோண்டப்பட்ட கிடங்கால் சிரமம்

## நாளாந்தம் - போக்குவரத்தில் நெருக்கடியான நிலை

கொழும்புத்துறை, ஜூன் 1

யாழ்ப்பாணம் - பருத்தித்துறை வீதியில் ஆரியகுளம் சந்திக்கு அண்மையில் பிரதான குடிதண்ணீர்க் குழாய் மார்க்கத்தில் ஏற்பட்ட வெடிப்பை சீர் செய்வதற்காக தோண்டப்பட்ட பெரிய குழி இன்னமும் ஒழுங்கான முறையில் நிரவப்படவில்லை.

கோண்டாவிலில் இருந்து யாழ். பிரதான தண்ணீர்த் தாங்கிக்கு குடிதண்ணீரை எடுத்துச் செல்லும் மார்க்க குழாய் உடைந்து காப்பெற் வீதியை குறிப்பிட்டதொரு பகுதியில் உடைத்துக்கொண்டு நீர் வெளியேறி பீறிட்டுப் பாய்ந்ததை அடுத்து யாழ். மாநகர சபையால் உடனடியாக திருத்த வேலைகள் மேற்கொள்ளப்பட்டன.

ஆயினும் திருத்தப் பணிகளுக்காக தோண்டப்பட்ட பெரும் குழி, மண் கொண்டு நிரவப்பட்ட நிலையில் காப்பெற் இட்டு பூரணப்படுத்தப்படாது காணப்படுகிறது.




*மோசமான நிலையில் வீதி....*

போக்குவரத்து நெருக்கடி மிகுந்த பருத்தித்துறை வீதியில் நீண்ட நாள்களாக காணப்படும் இந்தக் குழி ஏற்பட்ட பகுதி பூரணமாகச் சீர் செய்யப்படாமையால் போக்கு வரத்தில் பல சிரமங்களையும் ஆபத்தையும் பொது மக்கள் எதிர் நோக்குகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ஓ-135)

## ஒரே நபருக்கு அடுத்தடுத்த நாள்களில் அபராதம் விதிப்பு

தென்மராட்சி, ஜூன் 1

ஒரே நபருக்கு அடுத்தடுத்த நாள்களில் சாவகச்சேரி நீதி மன்றில் இருவேறு குற்றங்களுக்காக அபராதம் விதிக்கப்பட்டது.

மீசாலை தெற்கைச் சேர்ந்த குறிப்பிட்ட நபருக்கு கடந்த செவ்வாய்க்கிழமை சட்ட விரோதமாக மின்சாரம் பெற்றமைக்காக 10 ஆயிரம் ரூபா அபராதம் செலுத்துமாறும், 8 ஆயிரத்து 548 ரூபா மின்சார சபைக்கான இழப்பீடாகச் செலுத்துமாறும் தீர்ப்பு வழங்கப்பட்டு 10 ஆயிரம் ரூபா பெறுமதியான ஆள் பிணையி லும் செல்ல அனுமதிக்கப்பட்டது.

இதே நபர் அனுமதிப் பத்திரமின்றி அரச சாராயம் விற்பனை செய்ததாக குற்றஞ்சாட்டி சாவகச்சேரி பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு கடந்த புதன்கிழமை விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது குறிப்பிட்ட அதே நபருக்கு 25 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. (ஓ-9)

# ‘பட்ஜெட்’டைத் தோற்கடித்த ஒருவருக்கு தவிசாளர் பதவி வழங்குவது எவ்வாறு?

## இதுதானா ஒழுக்காற்று நடவடிக்கை என மக்கள் சீற்றம்

அனார்க்கலி

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் ஆளுகைக்குட்பட்ட காரைதீவு, நாவிதன்வெளி பிரதேச சபைகளுக்குப் புதிய தவிசாளர்களின் பெயர்கள் தமிழரசுக் கட்சியால் பரிந்துரை செய்யப்பட்டுள்ளன.

காரைதீவு பிரதேச சபையின் தவிசாளராக, 2014 வரவு-செலவுத் திட்டத்தைத் தோற்கடித்த தமிழரசுக் கட்சி உறுப்பினர்களில் ஒருவரான கோபிகாந்தையும்,

நாவிதன்வெளி பிரதேச சபைக்கு வரவு - செலவுத் திட்டம் தோற்கடிக்கப்பட்டதால் பதவியிழந்த முன்னாள் தவிசாளர் சிவலிங்கம் குணரெத்தினத்தையும் நியமிக்க தமிழரசுக் கட்சியின் செயலாளர் நாயகமும், நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராசா, அம்பாறை மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளருக்கு பரிந்துரை செய்துள்ளார்.

இந்தப் புதிய தவிசாளர் நியமனம் தொடர்பான பரிந்துரை காரைதீவு, பிரதேச மக்களிடையே பெரும் அதிருப்தியையும், சீற்றத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

செயலாளர் நாயகம் வரவு - செலவுத் திட்டத்தைத் தோற்கடிக்கக் கூடாதென அறிவுறுத்தி ஒப்புதல் பெற்ற பின்னரும் கட்சிக் கட்டுப்பாட்டையும், ஊர்க்கட்டுப்பாட்டையும் மீறி அதனைத் தோற்கடித்த காரைதீவு பிரதேச சபையின் உறுப்பினர்களுள் ஒருவருக்கே புதிய தவிசாளர் பதவியை வழங்க கட்சி முன் வந்திருப்பது கட்சியின் வங்குரோத்து நிலையா? பலவீனமா? என்னும் கேள்விகள் எழுப்பப்படுகின்றன.

நாவிதன்வெளி பிரதேச சபைக்கு, பதவியிழந்த முன்னாள் தவிசாளரையே புதிய தவிசாளராக நியமிக்க முன்வந்துள்ள தமிழரசுக் கட்சியின் செயலாளர், காரைதீவு பிரதேச சபைக்கும் முன்னாள் தவிசாளர் செல்லையா இராசையாவை மீண்டும் புதிய தவிசாளராக நியமித்திருக்கலாமேயெனக் கேள்வி எழுப்புவோர் காரைதீவுக்கு மட்டும் ஏன் இந்த துரோகமெனவும் கேட்கின்றனர்.

வரவு - செலவுத் திட்டத்தை தோற்கடித்த உறுப்பினர்கள் மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்து கட்சியை விட்டே நீக்குவோமென வீராப்பு அறிக்கைகளை வெளியிட்டும், தீர்மானங்களையும் நிறைவேற்றியவர்கள் அதற்காகக் குழுவொன்றை நியமித்து விசாரணை மேற்கொள்ளாது,

காரைதீவு பிரதேச சபையில் வரவு - செலவுத்திட்டத்தை தோற்கடித்த உறுப்பினர் ஒருவரையே தவிசாளர் பதவிக்கு பரிந்துரை செய்துள்ள விந்தை கிழக்கில் நிகழ்ந்திருக்கின்றது.

இது பற்றி காரைதீவு பிரதேச ஆலய அறங்காவலர் ஒன்றிய முக்கியஸ்தரும், அதன் பேச்சாளரும், ஓய்வுபெற்ற ஆசிரியருமான எஸ்.தில்லையம்பலம் பின்வருமாறு தெரிவித்தார்.

"முன்னாள் தவிசாளர் செல்லையா இராசையா தமிழரசுக் கட்சிக்கு வேண்டாப் பெண்டாட்டியாகவிருக்கலாம்.

ஆனால் பாரம்பரியமாக கட்டுக் கோப்புடன் இயங்கும் பிரதேசம் என்ற பெருமைபெற்ற காரைதீவின் பெருமையையே தமிழரசுக் கட்சியின் இந்த நடவடிக்கை சிதைத்து விட்டது.

காரைதீவு பிரதேச சபையின் வரவு - செலவுத் திட்டத்தை தோற்கடித்த தமிழரசுக் கட்சி உறுப்பினர்கள் மூவர் மீதும் நடவடிக்கை எடுக்குமாறு பல மகஜர்கள் கட்சிக்கு அனுப்பினோம். எமது அறங்காவலர் ஒன்றிய முக்கியஸ்தர்கள் திருமலை சென்று தலைவரிடமும், செயலாளரிடமும் நேரிலும் வலியுறுத்தினோம்.

உரிய முறைப்படி கடந்த ஜனவரியில் அவர்களுக்கு எதிராக நடவடிக்கைகளை எடுத்திருக்க வேண்டும். ஆனால் அம்பாறை உதவித் தேர்தல் ஆணையாளரின் கடிதம் வரும் வரை செயலாளர், விடயத்தை இழுத்தடித்து தவறு செய்துள்ளார்.

தோற்கடித்த உறுப்பினரை இப்பொழுது இருப்பில் தூக்கி வைத்திருக்கிறார். இதன் மூலம் அம்பாறை மாவட்டத்தின் தாய்க் கிராமத்தை சிதைக்க முனைந்திருக்கிறார்கள். இதன் மூலம் எமது காதில் பூச்சுற்ற முயன்றிருக்கிறார்கள்.

இதற்குப் பின்னரும் தமிழரசுக் கட்சியின் பின்னால் செல்ல எமது மக்கள் தயாரில்லை"- என்றார்.

## பிக்கப் வாடகைக்கு



PD-xxxx தொடரிலக்க முடைய Toyota Hilux Duble Cab வாகனம் நாள் மற்றும் மாத வாடகைக்கும் அல்லது நிறுவனங்களுக்கு சாரதியுடன் வாடகைக்கும் கொடுக்கப்படும்.

தொடர்பு : 077 868 9731, 077 910 2003 (48647) (7.6.3)

## வேலை வாய்ப்பு

90 வருடங்களுக்கு மேலாக சர்வதேச ரீதியில் காப்புறுதித் தேவைகளைப் பூர்த்திசெய்து கொண்டிருக்கும் AIA காப்புறுதிக் கம்பனி ஆனது இலங்கையிலும் தனது துறைசார்ந்த ஆதிக்கத்தை செலுத்திக் கொண்டிருக்கின்றது. அந்தவகையில் இன்னும் தனது சேவையினை விஸ்தரிக்கும் நோக்குடன் பதவிவெற்றிடங்களுக்கு ஆள்சேர்ப்பு செய்யவுள்ளது.

குறைந்தது க.பொ.த. (சா/த) பரீட்சையில் கணிதம் உட்பட 6 பாடங்களில் சித்திபெற்ற பதினெட்டு வயதிற்கு மேற்பட்ட இருபாலாரும் நேர்முகத்தேர்விற்கு சமுகமளிக்கலாம்.

காப்புறுதித்துறையில் பணிபுரிந்த அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமையும், பொருத்தமான பதவியும் வருமான உதவியும் வழங்கப்படும்.

நேர்முகத்தேர்வு நடைபெறவிருக்கும்

இடம்: AIA காப்புறுதி நெல்லியடிக்கிளை

காலம்: 02.06.2014 திங்கட்கிழமை

காலை 9.00 மணி தொடக்கம் மாலை 5.00 மணிவரை

(45662)(3.6.4) தொடர்பு: 077 101 2950

## உடனடி வேலைவாய்ப்பு பணிப்பெண்கள்
## மலேசியா - சிங்கப்பூர் - சைப்பிரஸ்



### மலேசியாவில்

வீட்டுப் பணிப்பெண்கள் (மலேசியாவில்)
அனைத்தும் இலவசம்
சம்பளம்- 38,000/=
இலிருந்து 40,000/= வரை
(2 வருடகால ஒப்பந்தம்)

### சிங்கப்பூரில்

(அரசாங்க கட்டணம் மாத்திரம் அறவிடப்படும்)
சம்பளம் - 550 சிங்கப்பூர் டொலர்
(55,000/= இற்கு மேல்)
வயது- (23-42)
2 வருடகால ஒப்பந்தம்

### சைப்பிரசில்

(அரசாங்க கட்டணம் மாத்திரம்)
சம்பளம் - 51,000=இற்கு மேல்
(வயது-23-42) (4 வருடகால ஒப்பந்தம்)

ஆண்களுக்கான வேலைவாய்ப்பும் உண்டு
உடனடிப் பயணம்

யாழ்ப்பாணத்துக்கு முகவர்கள் (Sub Agents) தேவை
ஆர்வமுள்ளோர் தொடர்புகொள்ளவும்

ABIRAAD GENERAL SERVICES
RECRUITMENT SPECIALIST
Tel : 077-6572122 / 011 - 2590081 Fax : 011 - 2590081
E-mail : admin@agslanka.com
399/1/1, Galle Road, Colombo 04. (சென்.பீட்டர் கல்லூரி அருகில்), பம்பலப்பிட்டி.

(48636)(10.6.3)

## வீட்டுப் பணிப்பெண் தேவை

கொழும்பில் கௌரவமான வீட்டில் வீட்டு வேலை மற்றும் சமையல் செய்வதற்குப் பணிப்பெண் தேவை.

(48646) (12.3.6) தொடர்புகளுக்கு: 077 581 4571

## நிரந்தர தொழில் வாய்ப்பு

சம்பளம் 18,000/= முதல் 40,000/= (தொழில் அடிப்படையில்) 18 -50 வயது ஆண்/பெண் இருபாலாரும். சிங்கள மொழி அவசியமில்லை. கொழும்பை அண்மித்த பிரதேசங்களில் ஜாம்/ரொபி/பிஸ்கற்/கோடியல்/PVC/கிளவுஸ் போன்ற கம்பனிகளில் உற்பத்தி லேபல்/பொதியிடல்/Loading, Unloading பிரிவுகளில் நிரந்தர வேலைவாய்ப்பு. உணவு, தங்குமிடம் குறைந்த விலைகளில் (நண்பர்கள், குழுக்கள், தம்பதியினர் ஒரே தொழிற்சாலைகளில்) வருகை அன்றே வேலை வாய்ப்பு.

(43332) (12.3.6) தொடர்பு: 077 683 8231

## பணம் வசூலிப்பாளர் தேவை

சிங்களம் சரளமாகப் பேசத் தெரிந்திருத்தல் வேண்டும். மாதாந்தம் ரூபா 30000/= தொடக்கம் ரூபா 45000/= வரை சம்பாதிக்கலாம். இருப்பிடம் இலவசம். ஆவணங்களுடன் நேரில் வரவும்.

சுஜித் என்ரபிறைசஸ்
பருத்தித்துறை வீதி, நுணாவில் சந்தி, சாவகச்சேரி.
021 227 0586, 077 471 5315 (சி/7700)

## வாடகைக்கு

கொழும்பில் சகல வசதிகளுடன் கூடிய உகந்த இடம் தங்குவதற்கு உண்டு.
ரயில் நிலையம், மத்திய பஸ் நிலையம் போக்குவரத்து வசதிகளுடன் கூடிய இடம்
இன்றே வருகை தந்து பாருங்கள்.

| | |
|---|---|
| தனிநபர் ஒருவர் தங்குவதற்கு | 300 ரூபா |
| இரண்டு பேர் தங்குவதற்கு | 600 ரூபா |
| மூன்று பேர் தங்குவதற்கு | 900 ரூபா |
| நான்கு பேர் தங்குவதற்கு | 1200 ரூபாவும் |

அறவிடப்படும்.


தொடர்பு: 176, சென்றல் றோட், கொழும்பு ஐந்து லாம்புச்சந்தி அருகில், கொழும்பு-12

(47242)(4.3.6)

## இனி இல்லை நெஞ்சுவலி !!!

- இருதயநோய்
- புற்றுநோய் தணிப்பு
- ஈரல் பாதிப்புகள்
- மூட்டுவலி, முதுகு வலி
- புரோஸ்ட்ரேட் பிரச்சினைகள்
- ஒற்றைத்தலைவலி
- சைனஸ் பிரச்சனைகள்
- மனஅழுத்தம்
- இருமல், சளி
- படுக்கைப்புண்கள்
- நீரிழிவுப்புண்கள்
- நச்சுவைரஸ் பாதிப்பு
- பாலியல் குறைபாடு

நெஞ்சுவலி நீங்கி நலமான வாழ்வைப்பெற முடியும். எமது மருந்து இருதய இரத்தவோட்டத்தை சீர்படுத்தும். சிக்கலான சிகிச்சை அவசியமில்லை.




இருதய அடைப்பின் அறிகுறி
- நெஞ்சில் இறுக்கம்
- நெஞ்சில் எரிவு, மனஅழுத்தி
- சுவாசக்குறைவு
- நெஞ்சுவலி

FAIR PHARMA (PVT) LTD Sponsored by
(Kerala Ayurvedic Medicine)

Free Consultation
Daily @ Ceylinco House
Weekdays 9.00 a.m. - 5.00 p.m.
Saturdays 9.00 a.m. - 2.00 p.m.
Monthly Clinics are conducted islandwide

(சி/14416)
0114 388101, 4 388102

Ceylinco House, 11th Floor, No : 69, Janadhipathi Mawatha, Colombo 01.
Website : www.ayurveda.lk
E-mail : fairpharmasrilanka@yahoo.com

Hotline: 0777 555 600 / 0777 708 330 / 0777 708 310
APPROVED BY DEPARTMENT OF AYURVEDA, BOI & ISO 9001 : 2008 QMS CERTIFIED COMPANY

## வீடு விற்பனைக்கு

பொஸ்கோ பாடசாலைக்கு முன்பாக அமைந்துள்ள அதி நவீன வசதி கொண்ட மேல் மாடி வீட்டுடன் 1½ பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.
(5 வாகனத் தரிப்பிட வசதியும் உண்டு)

தொடர்பு : 077 819 8223 (48635) (7.6.3)

## வீடு வாடகைக்கு உண்டு

யாழ்நகரை அண்டிய மணிக்கூட்டுக் கோபுர ஒழுங்கை, இல.27இல் உள்ள வீடு வாடகைக்கு விடப்படும். களஞ்சியப் பாவனைக்கு சிறந்தது.

தொடர்பு: 021 222 8024 (48630) (45.6.3)

CEYLON THEATRES
இப்பொழுது திரையில்
MAJESTIC CINEMA - CARGILLS SQUARE
(Opposite Jaffna Teaching Hospital)




Platinum 3D 9.30am, 12.00noon, 2.30pm, 5.00pm, 7.30pm
Silver 2D 10.15am, 2.15pm, 6.15pm



வல்லவனுக்கு புல்லும் ஆயுதம்

Bronze 10.30am, 2.30pm, 6.30pm
விசாரணை ☎ 021-2227712
www.facebook.com/CeylonTheatres www.ceylontheatres.com

## வீடு வாடகைக்கு

K.K.S வீதி, கோண்டாவில் மேற்கில் சகல வசதிகளுடனும் கூடிய வீடு வாடகைக்குண்டு.

தொடர்பு : 077 347 2628, 077 639 1029

## விற்பனைக்கு

பாவனையில் உள்ள C, தையல் மெசின் விற்பனைக்குண்டு.

தொடர்பு : 077 639 1029
077 624 4796 (48634) (7.6.3)

## தேவை

கட்டட நிர்மாணத்துறையில் தேர்ச்சி பெற்றவராயின் (யாழ்,கொழும்பு/ களனி/தெஹிவளை/கண்டி) மேசன்/ தச்சு/ பெயின்டர்/கம்பிபாஸ்/ செடலின் பாஸ் (1200/=, 1500/=) கை உதவியாளர் (900/=, 1100/=) தங்குமிடம் இலவசம்.

தொடர்புகளுக்கு: 077 683 8231 (43333)(12.3.6)

## தவறிவிட்டது

சிவபாதம் துஷ்யந்தன் என்பவரது (வேலணை கிழக்கு) தேசிய அடையாள அட்டை (893421394V) சாரதி அனுமதிப்பத்திரம், காப்புறுதிப் பத்திரம், வரிப்பத்திரம், ATM அட்டை அடங்கிய பேஸ் மருதனார்மடம் சந்திக்கு உட்பட்ட பகுதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தொடர்பு கொள்ளவும். சன்மானம் வழங்கப்படும்.

(48645)(12.3.6) தொடர்பு: 077 435 8129

Study & Work in Singapore
Hotel Management
Learn & Earn up to Rs. 70,000/- Month
50% Scholarship on Tuition Fees
Study & Work in Malaysia
Business / Accounting / Interior Design / Tourism Management
Study in UK
UK VISA - Study / Visit / Tourist / Business Visit / Special Occasions
flex Institute
4, IBC Road, Wellawatte, Colombo 6.
Hotline: 0777 761 346
Tel : 2364157 Fax : 2501766
www.flexinstitute.lk

## வீட்டுடன் கூடிய காணி விற்பனைக்கு

அராலி வீதி சங்கானையில் நல்ல நிலையில் உள்ள பெரிய நாற்சார வீட்டுடன் கூடிய 8 பரப்புக் காணி உடன் விற்பனைக்குண்டு

தொடர்பு: 077 473 3893 (48630) (45.6.3)

## காணிகள் விற்பனைக்கு

கொழும்புத்துறை வீதி (கணக்கர் சந்திக்கு அருகில்) 5 பரப்பு 10.52 குழிகள், வெற்றுக் காணி 5 பரப்பு 6.32 குழிகள் கிணற்றுடன் விற்பனைக்குள்ளன.

தொடர்பு:
(43133) (12.3.6) 021 222 8005/077 742 0240

## தேவை

சாயிநாதன் திருமண சேவைக்கு (யாழ் கிளை) நன்கு எழுத வாசிக்கத் தெரிந்த வரும் திருமண சேவை அனுபவ முள்ளவரும் உடனடியாகத் தேவை. பெண்கள் மட்டும் விண்ணப்பிக்கலாம். வயதெல்லை 25-40

Saainathan Marriage Service
No.474, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
T.P:077 735 5428

KOLN தயாரிப்புக்கள் சகல பார்மசிகளிலும் பலசரக்கு கடைகளிலும் விற்பனைக்குண்டு.
WASANA STORES
011 5669933, 5669944

## வீடு வாடகைக்கு

யாழ்.கொட்டடியில் (Near the Town Bus Stand) 5 படுக்கையறைகள் Attached Bathroom. உடன், சகல வசதிகளுடன் கூடிய வீடு நீண்டகால அடிப்படையில் வாடகைக்கு விடப்படும்.

தொடர்பு: 077 602 5552 (சி14421)(12.3.6)

## பணிப்பெண் தேவை

யாழ்.நகரில் வசிக்கும் 3பேர் கொண்ட வைத்திய குடும்பம் ஒன்றுக்கு தங்கியிருந்து பணியாற்றக்கூடிய பணிப்பெண் தேவை. தொடர்பு: (48652) (12.3.6)

021 205 3401/072 224 2220/077 967 2613

**நேரடி ஒளிபரப்பு** வெளிநாட்டில் வசிக்கும் உறவினர்கள் உங்கள் வீட்டு கல்யாணம் மற்றும் எல்லா நிகழ்ச்சிகளையும் எங்கள் Website மூலம் நேரடியாகக் கண்டுகளிக்கலாம். Smart Phones & Tabs மூலமும் கண்டுகளிக்கலாம்.

www.eventsvideos.com
(சி/14420) (6.4.3) தொடர்பு: 077 322 6078

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் அரியாலையில் A9 வீதியில் குடியிருப்புப் பகுதியில் அமைந்த காணி 3-2 பரப்புக்களாகவோ அல்லது முழுமையாகவோ விற்பனைக்குண்டு. வயல் காணிகளும் விற்பனைக்குண்டு.விலைபேசித்தீர்மானிக்கலாம்.

தொடர்பு: 071 828 5692 (சி/14419) (6.4.3)

## வீடு விற்பனைக்கு

நீர்வேலி தெற்கு ஒல்லை வைரவர் கோயிலுக்கு அருகில் 2½ பரப்புடன் கூடிய வீடும், கிணறும் விற்பனைக்குண்டு.

தொடர்பு : 077 722 2142 (48651) (7.6.3)

## மேல்மாடி வீடு வாடகைக்கு
(லக்ஸரி ஹோம்)

அம்மன் வீதி, திருநெல்வேலியில் புதிதாக அமைக்கப்பட்ட அதிநவீன வசதிகளைக் கொண்ட வாகனத்தரிப்பிடத்துடன் கூடிய லக்ஸரி ஹோம் வாடகைக்குண்டு. நிறுவனங்கள் விரும்பத்தக்கது.

தொடர்பு: (48643) (12.3.6)
077 868 9731/077 910 2003


Service to mankind is service to god
"மானிடர்க்கு சேவை செய்வது இறைவனுக்கு சேவை செய்வதற்கு சமம்"
CITY MEDICALS
Since 1978
37 ஆவது ஆண்டு ஆரம்பத்தில் காலடி எடுத்து வைக்கும்
சிற்றி மெடிக்கல்ஸ்
நிறுவனத்தின் புதிய கிளைத்
திறப்பு விழா
City Medical Care
Your Family Pharmacy
சிற்றி மெடிக்கல் கெயார்
எமது புதிய கிளை இல. 558A,ஆஸ்பத்திரி வீதியில்
(செலான் வங்கி அருகாமையில்)
சிற்றி மெடிக்கல் கெயார்
நிறுவனத்தினை 02.06.2014 அன்று காலை 9.15 தொடக்கம் 11.00
மணிவரையுள்ள சுப நேரத்தில் ஆரம்பிக்கின்றோம். இந்நிகழ்வில்
எமது நலன்விரும்பிகள், வாடிக்கையாளர்கள், பங்காளர்கள், மற்றும் நண்பர்கள்
அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.
சிற்றி மெடிக்கல்ஸ்
TEL:0094 777780359/ 0094 777347578
FAX: 021 222 3880

## If you want to be a qualified PHARMACIST

**மருந்தாளர் (வெளிவாரி) பரீட்சை**

Pharmacist (External) examination conducted every year By the Ceylon Medical College Council, Faculty of Medicine, University of Colombo. After two years of apprenticeship, the candidate is eligible to sit for the above examination, which qualifies for registration as a pharmacist.

AGE :- No Limit (வயது எல்லை இல்லை)

Qualification :- G.C.E. O/L pass in English Language, G.C.E. A/L Ordinary pass in three science subjects including Chemistry.

29.06.2014ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு **Admission Registration** பதிவுகள் நடைபெறும்.

06.07.2014ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு புதிய பிரிவு ஆரம்பம்.

Vanue:Jaffna College (Under Graduate Dept)
464, Hospital Road, Jaffna.
Course fee monthly Rs. 1500/=

யாழ்ப்பாணக் கல்லூரி அனுமதிக் கட்டணம் ரூபா 500 மேலதிக விவரங்கள் சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் பார்மசி வகுப்பில் நண்பகல் 12 மணிக்கு நேரடியாக அறிந்து கொள்ளலாம்.

TP:077 625 6292

(48375)(12.3.6)



## ST.JOHN'S COLLEGE, JAFFNA VACANCIES

Applications are hereby invited from the qualified persons for the following vacancies.

1. Biology A/L and Science English Medium for 6-11
   Qualification: B.Sc Degree in Bio Science
2. Science for Technology - A/L
   Qualification: B.Sc Degree in Bio Science or Physical Science
3. Engineering Technology – A/L
   Qualification: B. Ed Degree in Technology / Technological Diploma (NDT, NDES)

Please send your complete CV including the contact details of two non - related referees by post or via e-mail on or before 10th June 2014 to the following address. Only shortlisted candidates will be called for the interview.

The Principal
St.John's College
Jaffna
stjohns@sltnet.lk

(சி4085)


## நல்லூரில் யோகா பயிற்சி ஆரம்பம்

யாழ்.யோகா அரங் கத்தினர் நடத்தும் யோகா பயிற்சிநெறியின் புதிய பிரிவின்ஆரம்பநிகழ்வு நல்லூர்த் தேரடி அருகிலுள்ள அறுபத்து மூன்று நாயன்மார் குருபூசை மடத்தில் இன்று ஞாயிற்றுக் கிழமை மாலை 4.30 மணிக்குயோகஅரங்க இயக்குநர் உமாசுதன் தலைமையில் நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வில் பண்டிதர் வ.ஆ.தங்கமயில் 'திருமந்திரத்தில் யோகாசனம்' என்ற தொனிப் பொருளிலும், மூத்த யோகாசன ஆசான் வேநசிவனேஸ்வரராஜா 'இயற்கை நலவாழ்வு' என்ற விடயம் பற்றியும்சிறப்புக்கருத்துரைகளை வழங்குவர்.

யோகா பயிற்சி வகுப்புகள் காலை 6 மணி தொடக்கம் 7 மணி வரை தொடர்ந்து 2 மாதங்கள் தினமும் நடைபெறும். பயிற்சி நெறியைப் பூர்த்தி செய்பவர்களுக்கு கையேடும் சர்வதேச அங்கீகாரம் பெற்ற சான்றிதழும் வழங்கப்படும். ஆர்வமுள்ள அனைவரும்இணைந்துபயன் பெறலாம் என்று யாழ். யோக அரங்கத்தினர் அறிவித்துள்ளனர்.(ஓ)


### காணி விற்பனைக்கு

எழுதுமட்டுவாழ் விழுவளை கண்ணகை அம்மன் வீதியில் 18 (பதினெட்டு) பரப்பு மேட்டுக் காணி விற்பனைக்குள்ளது. வாங்க விரும்புவோர் தொடர்பு கொள்ளவும்.

தொ.பே: 021 205 3982 (48639) (7.6.3)

### காணி விற்பனைக்கு

கோண்டாவில் கிழக்கு கனகசபாபதி வீதியில் பழைய வீட்டுடன் கூடிய ஐந்தரைப் பரப்பு (5½) காணி சுற்று மதில் தனிக்கிணற்றுடன் விற்பனைக்கு உள்ளது. தனித்தனியாக மூன்று வீடுகள் அமைக்க முடியும். விலை பரப்பு ரூபா 1800,000/=

தொ.பே: 077 790 5438 (48638) (7.6.3)

ஓ

### மகாதேவ ஆச்சிரமம் MAHADEVA ASHRAMAM

ஜெயந்திநகர், கிளிநொச்சி

Regd.No:SVP104/44 of 29.10.1976 - TP:024 324 3443

**ஆண்டுப் பொதுக் கூட்ட அழைப்பு**

காலம்: 07.06.2014 சனிக்கிழமை, மாலை 3மணி

இடம்: ஆச்சிரம பிரார்த்தனை மண்டபம்

நிகழ்ச்சி நிரல்

* இறைவணக்கம்
* தலைமையுரை தவத்திருஸ்ரீமத்கணேஷானந்த மகாதேவ சுவாமிகள்
* சென்ற ஆண்டு வரவு, செலவு, கணக்கு அறிக்கைகள்
* புதிய நிர்வாக குழுத் தெரிவு
* நன்றியுரை
* இறைவணக்கம்

(48566) (12.3.6)

ஆச்சிரம நலன் விரும்பிகள், அடியார்கள், அன்பர்கள், யாவரையும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.


குறிப்பு: பழைய, புதிய, சந்தாதாரர்கள், அங்கத்துவப்பணம் செலுத்தி பற்றச்சீட்டைப் பெற்றுக் கொள்ளவும்.

"அவன் அருளால் அவன்தாள் பணிவோம்"

**இறைபணியில் ஸ்ரீமத் கணேஷானந்த மகாதேவ சுவாமிகள், குருபீடாதிபதி**



## பாராட்டி வாழ்த்துகின்றோம்



பாணந்துறை முஸ்லிம் மகாவித்தியாலயத்தில் விஞ்ஞான ஆசிரியராகக் கடமையாற்றும்

**இராசசிங்கம் விஜேந்திரன்**

B.A (Hons), Na.Dip.in. Tech (Science), P.G.Dip.in. Ed.

29.05.2014 அன்று கொழும்பு BMICH இல் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் பட்டப்பின் கல்வி டிப்ளோமா (P.G.Dip.in.Ed) பட்டத்தைப் பெற்றதையிட்டு மனமாரப் பாராட்டி வாழ்த்துவதோடு, அவர் மேன்மேலும் பல பட்டங்களைப் பெற்று பதவியில் உயர்வடைய வாழ்த்துகின்றோம்.

Best Wishes

வாழ்த்துபவர்கள்:

அப்பா, சகோதரன், சகோதரிகள், மைத்துனர்கள்.

உடுவில்.

(48627)(10.6.3)



## இலங்கையின் முதன்மையான வர்த்தக நாமமான SINGER



**வாடிக்கையாளர் சேவை நலன் கருதி பின்வரும் பிரதேசங்களில் அனுபவமிக்க திறமையான சேவை முகவர்களைத் தேடுகின்றது.**

| சேவை உபகரணம் | சேவை தேவைப்படும் பிரதேசம் |
|---|---|
| சகல வகைத் தையல் இயந்திரங்கள் | கிளிநொச்சி.முல்லைத்தீவு |
| நீர்ப்பம்பிகள் | கிளிநொச்சி.முல்லைத்தீவு |
| தளபாடங்கள் | யாழ்ப்பாணம். பருத்தித்துறை. கிளிநொச்சி |
| மோட்டார் சைக்கிள் | முல்லைத்தீவு |
| வளிச் சீராக்கிகள்(Air Conditioners) | முல்லைத்தீவு. பூநகரி மாங்குளம் |
| உழவு இயந்திரம் | கிளிநொச்சி, சங்கானை |
| மின் பிறப்பாக்கி (Generators) | முல்லைத்தீவு |
| செக்கியூரிட்டி சிஸ்டம் | யாழ்ப்பாணம். கிளிநொச்சி |

### விண்ணப்பத் தகைமைகள்

4 வருடத்துக்கு மேல் பழுது பார்த்தல் அனுபவம்
தொடர்பாடல் வசதி (தொலைபேசி)
400 சதுர அடி வேலைத்தளம் (Workshop)
போக்குவரத்து வாகன வசதி

**நீங்கள் தகுதியுடையவராயின் 10 நாள்களுக்குள் உங்கள் விண்ணப்பத்தைக் கீழ் காணும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.**

SINGER SERVICE

Senior Manager -Services
SINGER (SRILANKA) PLC
331, Dr.Colvin R.De Silva Mawatha
Colombo-02

சிரேஷ்ட சேவை முகாமையாளர்,
சிங்கர் (ஸ்ரீலங்கா) பி எல் சீ
331, டாக்டர் கொல்வின் ஆர் டி சில்வா மாவத்தை
கொழும்பு-02.

(சி.13938) (5.6.3)



## சேவை நயப்பு வாழ்த்துப்பாமாலை கிளி/இராமநாதபுரம் ம.வி

01.06.2014

Congratulations




**திருமதி இந்திராவதி திருநாவுக்கரசு (பிரதி அதிபர்)**

**கல்விக் காலம்**

ஆரம்பக் கல்வி - கிளி/ இராமநாதபுரம் அ.த.க.பாடசாலை
இடைநிலைக்கல்வி - கிளி/இராமநாதபுரம் ம.வி
உயர்தரக்கல்வி - யா/இந்து மகளிர் கல்லூரி
பட்டப்படிப்பு - பேராதனைப் பல்கலைக்கழகம்

Best wishes

(48617)(12.3.6)

**சேவை விவரம்**

15.02.1982 - வ/பாவற்குளம் அ.த.க.பாடசாலை - ஆசிரியர்
17.03.1982 - கிளி/இராமநாதபுரம் ம.வி - ஆசிரியர்
01.05.1991 - 1993 - கிளிநொச்சி வலயம் - ஆசிரிய ஆலோசகர் (தமிழ்)
1994 - 1995 - கொழும்பு பல்கலைக்கழகம், பட்டப்பின் கல்வி டிப்ளோமா
10.06.1996 - 31.05.2014 கிளி/இராமநாதபுரம் ம.வி - பிரதி அதிபர்



செல்வங்கொழிக்கும் கிளி/இராமநாதபுரம்
ம.வியில் சிறப்புடன் ஆசிரியராகவும்
பிரதி அதிபராகவும் கடமையாற்றி
தன் பணி ஓங்கிடும் வகையில்
அறிவாளிகளை உருவாக்கி
அயராத முயற்சியுடனும் ஆழமான நட்புடனும்
கலையாத அனுபவ முதுமையுடனும்
ஓய்வுக் காலமதனை இளமைக்கால
நினைவுகளுடன் மீட்டிடுவீர் – என்றும்
பல்லாண்டு வாழிய வாழியவே.

**கிளி/இராமநாதபுரம் ம.வி, கிளிநொச்சி பாடசாலை சமூகம்.**

# முக்கிய அறிவித்தல்

## நீங்கள் பயன்படுத்தும் கையடக்க தொலைபேசி இணைப்பின் உரிமையாளர் நீங்களா?

தொலைத்தொடர்பு ஒழுங்குப்படுத்தும் ஆணைக்குழு, கையடக்க தொலைபேசி பாவனையாளர்கள் அனைவரும் தாங்கள் பயன்படுத்தும் கையடக்க தொலைபேசி இணைப்பினை தங்களுடைய பெயரில் பதிவு செய்திருத்தல் வேண்டும் என வழியுறுத்தியுள்ளது.




**உங்களின் விபரங்கள் சரியானவையா அல்லது தவறானவையா என்பதை தயவு செய்து உறுதிப்படுத்துங்கள்**

**உங்களுடைய விபரங்கள் தவறானதாக இருப்பின்:**

- உங்களுக்கு அருகில் உள்ள உங்களின் தொலைத்தொடர்பு சேவை வழங்குனரின் வாடிக்கையாளர் சேவை நிலையத்திற்கு விஜயம் செய்து சரியான விபரங்களை பதிவு செய்துக்கொள்ளுங்கள்
- உங்களுடைய தேசிய அடையாள அட்டை / சாரதி அனுமதி பத்திரம் / கடவுச்சீட்டுடன் உங்கள் சிம் அட்டையினையும் கொண்டு செல்லுங்கள்

உங்களுடைய விபரங்களை நீங்கள் பதிவு செய்துக்கொள்ளவில்லையாயின் அதன் பின் இணைப்பானது துண்டிக்கப்படும் என்பதை தயவு செய்து கவனத்திற்கொள்க

**மேலதிக விபரங்கள் தேவைப்படின் உங்களின் தொலைபேசி வலையமைப்பின் வாடிக்கையாளர் அழைப்பு நிலையத்தில் பெற்றுக்கொள்ளுங்கள்**

airtel Dialog etisalat HUTCH Sri Lanka Telecom Mobitel



உ
ஸ்ரீ மகாமாரியம்பாள் துணை

அருள்மிகு வருஷப்புல் ஸ்ரீ மகாமாரி அம்பாள் தேவஸ்தானம், சுன்னாகம்.
நவகுண்டபக்ஷ புனராவர்த்தன
அஷ்டபந்தன பிரதிஷ்டா
நூதன திரிதள கோபுர, நூதன விமான
மகாகும்பாபிஷேக குடமுழுக்கு பெருஞ்சாந்தி அழைப்பு

கிரியை ஆரம்பம் - 02.06.2014 | எண்ணெய்க் காப்பு - 05/06.06.2014

கும்பாபிஷேகம் - 08.06.2014

அம்பிகை அடியார்களே!

ஸ்வஸ்த்தி ஸ்ரீ மங்கலமிகு ஜய வருஷம் வைகாசி மாதம் 25ஆம் நாள் (08.06.2014) ஞாயிற்றுக்கிழமை தசமித் திதியும் அத்த நட்சத்திரமும் அமிர்த சித்தயோகமும் பொருந்திய காலை 6.27 மணிமுதல் 8.26 மணி வரையுள்ள மிதுன லக்கின சுபமுகூர்த்த வேளையில் மகா கும்பாபிஷேகம் நிகழ திருவருள் பாலித்துள்ளது. அப்பெரு குடமுழுக்குச் சாந்தியிலும் அதற்கு முன்னும் பின்னும் நிகழும் கிரியா காலங்களிலும் கலந்துகொண்டு ஸ்ரீ மகா மாரியம்மனையும் விநாயகர், மகாவிஷ்ணு, முருகன், இலக்ஷ்மி, சரஸ்வதி, வைரவர், சண்டேஸ்வரி, கோபுர தரிசனம், விமான தரிசனம் செய்து இஷ்ட சித்திகளையும் கோடி புண்ணியங்களையும் பெற்றுய்யும் வண்ணம் வேண்டுகின்றோம்.

வைகாசி மாதம் 25ஆம் நாள் (08.06.2014) ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 4.00 மணி
[illegible]
மகா அபிஷேகம் விசேட பூஜை, பிரசாதம் வழங்கல், மகேஸ்வர பூஜை கிரமம் நடைபெறும்.
மாலை 5.00 மணிக்கு [illegible] விசேட பூஜை, [illegible] மண்டப பூஜை, திருவூஞ்சல்,
[illegible]

சர்வபோதகம் : சிவஞானபாஸ்கரன், [illegible] மகாதேவக் குருக்கள் (இணுவில்)

அருளாசி வழங்கும் குருமணிகள்

சிவஸ்ரீ நா.சர்வேஸ்வரக்குருக்கள் — சுன்னாகம் கதிரமலை சிவன் தேவஸ்தானம்
சிவபிரம்மஸ்ரீ ச. ஸ்ரீசண்முகானந்தக்குருக்கள் — ஏழாலை குராவத்தை ஸ்ரீமுத்துமாரி அம்பாள் தேவஸ்தானம்
சிவபிரம்மஸ்ரீ தி.கெங்காதரக்குருக்கள் — ஈவினைப் பிள்ளையார் தேவஸ்தானம்
சிவபிரம்மஸ்ரீ சு.முரளீதரக்குருக்கள் — அரியாலை சித்திவிநாயகர் தேவஸ்தானம்

அருளுரை
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாசாரிய சுவாமிகள் (நல்லை திருஞானசம்பந்த ஆதீன முதல்வர்)
சொல்லின் செல்வர் ஆறு.திருமுருகன் (தலைவர், தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானம்)

அம்பாளுக்கு பால், தயிர், இளநீர், பூக்கள் ஆகியவற்றை வழங்கி அம்பாளின் அருட் கடாட்சத்தைப் பெற்றுய்யுமாறு வேண்டிக் கொள்கின்றோம்.

ஸ்ரீ மகாமாரி அம்பாள் கும்பாபிஷேக திருப்பணிச் சபையும் நிர்வாக சபையும்


# 11.7 மில் செலவில் திருத்தப்படவுள்ள கமநல சேவை நிலையக் கட்டடம்



கிளிநொச்சி, ஜூன் 1

போரால் சேதமடைந்துள்ள முல்லைத்தீவு உடையார் கட்டு கமநல சேவை நிலையத்தின் கட்டடம் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் கீழ் 11.7 மில்லியன் ரூபா செலவில் புனரமைக்கப்படவுள்ளது.

கடந்த போர் காரணமாக சேதமடைந்த நிலையில் காணப்படும் குறிப்பிட்ட கட்டடம் இது வரை புனரமைக்கப்படாமல் இருந்து வருகிறது. இதனால் அதன் செயற்பாடுகள் சிரமங்களின் மத்தியில் இடம்பெற்று வருகின்றன- என்று அந்தப் பகுதி விவசாயிகள் தெரிவித்திருந்தனர். இந்த நிலையில்

> "பொருளாதார அபிவிருத்தி அமைச் சின் கீழ் 11.7 மில்லியன் ரூபா செலவில் புனரமைக் கப்படவுள்ளது.

இந்த விடயம் தொடர்பாக முல்லைத்தீவு மாவட்ட கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளரிடம்கேட்டபோது, போரால் சேதமடைந்த நிலையம் பொருளாதார அமைச்சின் நிதியுதவியுடன் கமநல அபிவிருத்தித் திணைக்களத்தால் 11.7 மில்லியன் ரூபா செலவில் புனரமைக்கப் படவுள்ளது. அதற்கான ஒப்பந்தங்கள் கோரப்பட்டுள்ளன.

மிக விரைவில் இதன் பணிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன என அவர் மேலும் தெரிவித்துள்ளார். இதே வேளை - புதுக்குடியிருப்பு கமநல சேவை நிலையத்துக்குரிய உரக்களஞ்சியம் ஒன்றும் மேற்படி நிதியுதவியின் கீழ் 3.5 மில்லியன் ரூபா செலவில் புதிதாக நிர்மாணிக்கப்படவுள்ளது எனவும் அவர் தெரிவித்துள்ளார். (வ-55)


தற்போது சம்பத் வங்கியிடமிருந்து உங்கள் தங்க ஆபரணங்களுக்கு அதிகூடிய அடகுத்தொகை..!

கரட் 24 இற்கு 30,000/-
கரட் 22 இற்கு 27, 500/-

மாதாந்தம் 1.5% குறைந்த வட்டி வீதமே அறவிடப்படும்!

சம்பத்


நாடு முழுவதிலுமுள்ள சம்பத் வங்கிக் கிளைகளில் தவணை முறையில் செலுத்தமுடியும்.

சம்பத் வங்கி
எதிர்காலத்தின் முன்னோடிகள்

(C/14399)

Sampath Bank Fitch Ratings AA-(lka) | 0112 30 30 50 | www.sampath.lk





ashok STEEL
நீடித்த வலிமை

அசோக் TMT
அதிகூடிய பலம் வாய்ந்த இரும்புக் கம்பிகள்

யானையின் எடையைப் போல் பன்மடங்கு எடையைத் தாங்கக்கூடிய பலம் கொண்டதோடு, பல நூற்றாண்டுகள் நிலைத்து நிற்கக்கூடிய கட்டிடங்களுக்கு அறிமுகஞ்செய்கின்றோம். அதிகூடிய பலம் வாய்ந்த அசோக் TMT இரும்புக் கம்பிகள், தலைமுறைகள் தாண்டி நீடித்து நிலைத்து நிற்க உங்கள் வீடுகளுக்கும் அசோக் TMT இரும்புக் கம்பிகளை உபயோகித்து, முறுக்குக் கம்பி பெறுமதியிலும் பார்க்க 15 சதவீத சேமிப்பை அனுபவித்திடுங்கள்.

ஒரு மெட்ரிக் தொன் தலா ரு.112,500 + VAT

அழையுங்கள்: திரு. கவிதஹரன் - +94773781397, உடனடி அழைப்பு - +94773263518, பொது அழைப்பு - +947388940/3

SIS 375

(C/14398)



Whirlpool
HOME APPLIANCES
மைக்ரோவேவ் அவன்கள்
வட்டியில்லா 12 மாத கொடுப்பனவு
Magicook20S
• 20L கொள்ளளவு
• 800W வலு
• டச் 1011 கட்டுப்பாடு
• குழந்தை பாதுகாப்பு
ரூ.10,900
Magicook20G - க்ரில்
• 20L கொள்ளளவு
• 800W வலு
• க்ரில் தொழிற்பாடு
• பல்வேறு நிலை சமையல்
ரூ.12,900
Magicook20C - கன்வெக்சன்
• 20L கொள்ளளவு
• 800W வலு
• கன்வெக்சன் தொழிற்பாடு
• பல்வேறு நிலை சமையல்
ரூ.15,900
குளிர்சாதனப்பெட்டிகள்
205 MAGIC
• 40% வேகமாக குளிரூட்டும்
• சாதாரண பாவனையின் போது மாதாந்த மின்சார பாவனை 21 அலகு மட்டுமே
ரூ.44,400
MMMP24E
• கொள்ளளவு 240L
• ஐஸ் கட்டாது
• டவர் கூலிங்
• வேகமாக ஐஸ் கட்டியாக்கும்
ரூ.59,900
WTA26
• கொள்ளளவு 242L
• நியோ ஐஸ்-சில்
• பக்டீரியா தடுப்பு
• டியோடரைசர்
ரூ.69,900
WTM450
• கொள்ளளவு 450L
• ப்ளெக்ஸி கூலிங்
• நியோ ஐஸ்-சில்
• 50% வேகமாக குளிரூட்டும்
• 40% வேகமாக போத்தல்களை குளிரூட்டும்
ரூ.95,900
விசேட விலை ரூ.76,900
WTM550
• கொள்ளளவு 550L
• ப்ளெக்ஸி கூலிங்
• நியோ ஐஸ்-சில்
• 50% வேகமாக குளிரூட்டும்
• 40% வேகமாக போத்தல்களை குளிரூட்டும்
ரூ.119,900
விசேட விலை ரூ.95,900
வட்டியில்லா 15 மாத கொடுப்பனவு
குக்கர்கள் மற்றும் குக்கர் ஹூட்
கூட்டுச்சலுகை
ரூ.85,000 மட்டுமே
ரூ.8,000 தள்ளுப்படி
ACM915TSWH
• கேஸ் பனர் 4
• கேஸ் கிரில் உடன் கேஸ் அவன்
• டயிமர்
• அவன் அடுப்பு
ரூ.76,400
AKR601
• ஸ்டேன்லஸ் ஸ்டீல்
• ச்சாக்கோல் பில்டர்
• 3 வேக கட்டுபாடுகள்
• 2 அடுப்புகள்
ரூ.16,600
சலவை இயந்திரங்கள்
AWO5100
• கொள்ளளவு 5Kg
• சலவை முறைகள் 5
• டிலே டயிமர்
ரூ.72,900
SPIN651E
• கொள்ளளவு 6.5Kg
ரூ.29,900
வட்டியில்லா 12 மாத கொடுப்பனவு
வாழ்க்கையை இலகுவாக்கும் உற்பத்திகள்
011 2376000
நாடெங்கிலும் உள்ள Abans காட்சியறைகளில் பெறலாம்.




4rever
SKIN NATURALS
By Chandhani Bandara
புதிய வருகை
GOLD Fairness
Day & Night Cream
UNISEX
Price Rs. 650/=
VITAMIN A,B,C,D
உங்களது பிரியமான 4rever மூலம்
பெறுமதி மிக்க பரிசில்களை
வெல்லுங்கள்
4rever பெட்டியின் மேற்புறப் பக்கத்தை
4rever.Skin Naturals, No.287/2,B,
Stanly Thilakaratna Mawatha,
Nugegoda என்ற முகவரிக்கு உங்கள்
விண்ணப்பங்களை அனுப்பி வைக்கவும்.
பெயர்:
முகவரி:
தொ.பே.இல:
தே.அ.அட்டை இல:
Chandhani Bandara
4REVER FOUNDER & PROPRIETOR
(Cosmetologist)
ISO 9001:2008 CERTIFIED COMPANY
011 440 3283
shopping online

# சிறப்பான சேவை வழங்குகின்ற சாவகச்சேரி நகர சபை

*இலத்திரனியல் முறையில் குடிமக்கள் அறிக்கை அட்டை தயாரித்தலுக்கான களப் பரிசோதனையில் ஈடுபட்ட உத்தியோகத்தர்கள் புகழாரம்*

தென்மராட்சி. ஜூன் 1

ஏனைய மாகாணங்களில் உள்ள உள்ளூராட்சி சபைகளின் செயற்பாடுகளுடன் ஒப்பிடும்போது. சாவகச்சேரி நகரசபை மக்களுக்கு சிறந்த முறையில் சேவை வழங்குகிறது.

இவ்வாறு இலத்திரனியல் முறையில்குடிமக்கள்அறிக்கை அட்டை தயாரித்தல் தொடர்பாக களப் பரிசோதனையில் ஈடுபட்ட உத்தியோகத்தர்கள் பாராட்டுத் தெரிவித்துள்ளனர்.

கடந்த வாரம் மாகாண உள்ளூராட்சி திணைக்களத்தினர் ஆசிய மன்ற அனுசரணையுடன் சாவகச்சேரி நகர சபையின் 11 வட்டாரங்களிலும்பயிற்றப்பட்ட உத்தியோகத்தர்கள் மூலம் திரட்டிய தகவல்களின் பிரகாரம் இந்த அறிக்கையை வெளியிட்டு நகர சபையின் செயற்பாட்டுக்கு பாராட்டுக்களைத் தெரிவித் துள்ளனர்.

குறிப்பாக நகர சபையால் இயக்கப்படும் சாவகச்சேரி, மீசாலை, நுணாவில் ஆகிய நூலகங்களும், மயானங்களும் மக்களுக்கு சிறந்த சேவைகளை வழங்குவதாக குறிப்பிட்டுள்ளனர்.

அவற்றை விட வரியிறுப்பாளர்களுக்கு வழங்கும் ஏனைய சேவைகளும் பாராட்டக்கூடிய வகையில் உள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளனர்.

நகரசபை எல்லைக்குள் வதியும் மக்களுக்கு வழங்கும் சேவைகளைபயனுறும்வகையில்அமைத்துவழங்கிக்கொண்டிருப்பதற்கு நகர சபை நிர்வாக்த்துக்கு அவர்கள் பாராட் டுக்களையும் தெரிவித்துள்ளனர்.

நகரசபையின் செயற்பாடுகளை ஏனைய உள்ளூராட்சி சபைகளும் முன்னுதாரணமாக கொண்டு செயற்பட்டால் வடமாகாண உள்ளூராட்சி சபைகள் தமது பிரதேச மக்களுக்கு பயனுள்ளசேவைகளை வழங்கமுடியும்என்றுஅவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். (வ-9)










வரணி கரம்பைக்குறிச்சி அ.த.க. பாடசாலையில் 'மாணவர் பாதுகாப்பும் பராமரிப்பும்' என்னும் தெரு நாடகம் இடம்பெற்றது. நாவற்குழி மகா வித்தியாலய மாணவர்களால் தயாரிக்கப்பட்ட இந்த தெரு நாடகம் தென்மராட்சி கல்வி வலயத்தைச் சேர்ந்த பாடசாலைகளில் மேடை யேற்றப்பட்டு வருகிறது. (வ-9)

## உடைந்த நிலையில் கழிவுநீர் கால்வாய்



கொழும்புத்துறை. மே 31

யாழ். கன்னாதிட்டி வீதியின் குறுக்காகச் செல்லும் கழிவுநீர் கால்வாயின் மேற்பகுதி உடைந்து போக்குவரத்தில் பெரும் ஆபத்தை ஏற்படுத்தும் நிலையில் காணப்படுகின்றது. குறித்த வீதி காப்பெற்றாக மாற்றப்பட்டபோது சேதமடைந்திருந்த கால்வாய் மதகை சீர்செய்யாது பணிகள் முடிவுறுத்தப்பட்டமையால் இந்த நிலை ஏற்பட்டுள்ளதாக அந்தப் பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

தற்போது மேற்பகுதி முற்றாக உடைந்து தாழ்வாகக் காணப்படுகின்றது. இதனால் வேகமாகப் பயணிக்கும் வாகனங்கள் சடுதியாக பள்ளத்தில் விழுந்தெழ நேர்வதால் கட்டுப்பாட்டை இழந்து விபத்துக்களை எதிர்நோக்கும் ஆபத்து காணப்படுகிறது.

குறித்த வீதியில் தனியார் கல்வி நிலையங்கள், வங்கிகள், ஆலயங்கள் காணப்படுவதால் போக்குவரத்து மிகுந்து காணப்படுகிறது. பல வருடங்களாக நிறைவுறுத்தப்படாத இக்குறைபாட்டை உரியவர்கள் சீர்செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டுமென மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (வ-135)




நித்திய சுகத்தை நோக்கி... உதயன் வைத்தியமலர் 170

# ஹைபோகிளைசீமியா

## (Hypoglycaemia)

- இது நீரிழிவு நோயாளிகளில் குறுகிய காலத்தில் ஏற்படும் பாதிப்புக்களில் மிகவும் முக்கிய மான தாகும். ஏனெனில் இந்தப் பாதிப்பு நீரிழிவு நோயா ளியை சில நிமிடங்களில் அல்லது சில விநாடிகளில் கூட இறப்பைத் தழுவச் செய்யக் கூடியது.
- ஆகவே அது ஏற்படுவதற்கான காரணத்தையும், அதை எவ்வாறு ஆரம்ப நிலையில் இனங் காண்பது என்பது பற்றியும், அதிலிருந்து எவ்வாறு இறப்பு ஏற்படாதவாறு நம்மை பாதுகாத்துக் கொள்வது என்பது பற்றியும், அதை எவ்வாறு முன்கூட்டியே அறிந்து தடுக்கலாம் என்பது பற்றியும், நீரிழிவு நோயாளிகள் ஒவ்வொருவரும் அறிந்து வைத்திருத்தல் வேண்டும்.
- நாளக்குருதியில் குளுக்கோஸின் அளவு குறிப் பிட்ட அளவுக்கு குறைவடையும் போது, ஹைப் போகிளைசீமியா (Hypoglycaemia) என்ற நிலை உருவாகிறது. அதாவது நாளக் குருதிக் குளுக்கோஸின் அளவு 63 mg/dl(4mmol/l) இலும் பார்க்கக் குறைவடையும்போது அதை "ஹைப்போகிளைசீமியா" எனக் குறிப்பிடுவர்.

- **இது நீரிழிவு நோயாளிகளில் எவ்வாறு ஏற்படு கின்றது என்று பார்ப்போம்?**

1. நீரிழிவு நோயாளிகள் விரதம் அனுட்டிப்பதால் அல்லது வேறு காரணங்களால் ஒரு வேளை உணவை உள்ளெடுக்காமை.
2. நீரிழிவு நோயாளிகள் வழக்கத்துக்கு மாறாக குறைந்த அளவிலான உணவை உள்ளெடுப்பது.
3. நீரிழிவு நோயாளிகள் காலம் தாழ்த்தி உணவை உள்ளெடுப்பது.
4. நீரிழிவு நோயாளிகள் வழமைக்கு மாறாக மாச்சத்துக் குறைந்த உணவை உள்ளெடுப்பது.
5. வழமைக்கு மாறாக நீரிழிவு நோயாளிகள் அதிக இன்சுலினை அல்லது நீரிழிவு மாத்திரைகளை உள்ளெடுப்பது.
6. வழமைக்கு மாறாக கடுமையான உடற் பயிற்சி செய்வது.
7. வெறும் வயிற்றில் அல்ககோல் உள்ளெடுப்பது.
8. அதிக வாந்தி எடுத்தல்.

- **இனி இதை எவ்வாறு இனங்காண்பது என் பதைப் பற்றிப் பார்ப்போம்?**

1. குருதியில் குளுக்கோஸ் 60mg/dl(3.3mmol/l) இலும் குறையும் போதுதான் ஹைபோகிளை சீமியாவுக்கான அறிகுறிகள் வெளியில் தெரி யத்தொடங்கும்.
2. களைப்பாக இருத்தல், நடுக்கம் ஏற்படல், வியர்த் தல், தலையிடி, கடுமையான பசி, தலைச்சுற்று, மயக்கம் ஏற்படல், கண்பார்வை மங்குதல், நெஞ்சுப்படபடப்பு, தடுமாற்றம் கூடுதலான நித்திரை உணர்வு ஏற்படல் (Drowsiness), வயிற்றுவலி, செயற்பாடுகளில் மாற்றம் (Beha viour changes), அதிகம் பயப்படல், ஓங்காளம் போன்ற அறிகுறிகள் தோன்றலாம்.
3. இவையெல்லா அறிகுறிகளும் ஒரு நீரிழிவு நோயாளியில் ஒரே நேரத்தில் தோன்ற வேண் டியதில்லை. இவற்றில் ஒரு சில அறிகுறிகள் தோன்றும்போது கவனத்தில் எடுத்து உங்களை தயார்ப்படுத்திக் கொள்ளுங்கள்.
4. மேற்கூறிய அறிகுறிகள் சிலவற்றை நீங்கள் உணர்ந்துகொள்ளும் முன்னர் அருகிலிருப்பவர் உங்களுக்கு வியர்த்திருப்பதையும், உடல் வெளிறிப்போயிருப்பதையும், களைத்திருப்பதை யும், உங்களது நடவடிக்கைகளில் மாற்றங்கள் (அதிகம் சினமடைதல், பதற்றமடைதல்) இருப் பதையும் அவதானித்து உங்களுக்குத் தெரியப் படுத்தலாம்.

- **இவ்வாறு இனங்கண்டபின் உடனடியான அடுத்தகட்ட நடவடிக்கையாக நீரிழிவு நோயாளி ஒருவர் என்ன செய்யவேண்டும் என்பதைப் பார்ப்போம்?**

1. உம்மிடம் அந்த நேரம் Glucometer இருக்கு மாயின், குருதிக் குளுக்கோஸின் அளவை அளந்து உறுதிப்படுத்திக் கொள்வது சாலச் சிறந்தது.
2. அவ்வாறு இல்லையெனில் ஹைபோகிளை சீமியா எனக் கருதி பின்வருவனவற்றில் ஏதாவது ஒரு செயற்பாட்டைச் செய்துகொள்ளவும்.

- ◆ சிறிது குளுக்கோஸை நீரில் கரைத்துக் குடியுங்கள்.
- ◆ மேசைக்கரண்டி அளவு சீனியைக் கரைத்து குடியுங்கள்.
- ◆ அரைக் கோப்பை பழச்சாறு அல்லது இனிப்புச் சோடாவை குடியுங்கள்.
- ◆ 2 ரொபிகளை உட்கொள்ளவும்.

3. அதன் பின்னர் 10 நிமிடங்கள் ஓய்வெடுக்கவும். சுகமான உணர்வை பெரும்பாலும் உங்களால் உணரமுடியும். அவ்வாறு சுகமாகவில்லை என உணர்ந்தால் முடியாதபோது, உடனடியாக வைத்தியர் ஒருவரை நாடுங்கள்.
4. சுகத்தை உணர்ந்தாலும், வைத்திய ஆலோ சனையை விரைவில் பெற்றுக்கொள்வது நல்லது.
5. சுகமடைந்த ஒருவரின் அடுத்த கட்ட நடவடிக் கையாக.

- ◆ மீண்டும் குருதி குளுக்கோஸ் மட்டத்தை அறிந்துகொள்வது நல்லது.
- ◆ அதற்குப் பிறகு 20 நிமிடங்களில் உமது அடுத்த நேர உணவை எடுத்துக்கொள்ளுதல் வேண்டும். இல்லாவிட்டால், 1 பழத்துண்டை அல்லது 1 கப் பாலை அல்லது 1 துண்டு சான்ட்விச்சை (sand wich) அல்லது 1 கப் கொழுப்பு குறைந்த யோகட் (Yoghurt) டை உட்கொள்ளலாம்.

### குறிப்பு

1. இவ்வாறு குருதியிலுள்ள அதிதாழ் குளுக்கோஸ் நிலையை (ஹைபோகிளை சீமியாவை- Hypoglycaemia) உடனடியாக சீர்செய்யா விட்டால், அதனால் உடற்தொழிற்பாட்டின் ஒருங்கிணைப்பு இழக்கப்படல், குழப்ப நிலை (Confusion), பேச்சு தடுமாறுதல், சுய நினைவு இழத்தல், வலிப்பு ஏற்படல் போன்றவை ஏற்பட்டு இறுதியாக கோமா(Coma) நிலையடைந்து இறப்புக் கூட சம்பவிக்கலாம்.
2. நீங்கள் வாகனமொன்றைச் செலுத்தும்போது ஹைபோகிளைசீமியாவுக்கான அறிகுறிகள் தோன்றுமாயின் வாகனத்தை உடனடியாகப் பாதையின் ஓரப்பகுதிக்குக் கொண்டு சென்று வாகனத்தை நிறுத்தி, மேற்குறிப்பிடப்பட்ட உடனடியான சிகிச்சை முறையை மேற்கொள்க.
3. உங்களது குடும்ப உறுப்பினர்களும், நெருங்கிய நண்பர்களும் உங்களுடன் வேலை செய்பவர் களும், உங்களுக்கு ஹைபோகிளைசீமியா நிலை வரும்போது அதை எப்படிக் கையாள்வது என்பதுபற்றி தெரிந்திருத்தல் நல்லது.

"வருமுன் காப்போம்" என்பதற்கிணங்க ஹைபோ கிளைசிமியாத் (Hypoglycaemia) தாக்கத் திலிருந்து தம்மை எப்படிப் பாதுகாப்பது என்பது பற்றி நீரிழிவு நோயாளி ஒருவர் தெரிந்து வைத்திருத்தல் நல்லது.


1. நீரிழிவு நோயாளிகள் விரதமிருப்பதைத் தவிர்த் துக்கொள்ளுங்கள்.
2. ஒவ்வொரு தடவையும் உணவில் சேர்த்துக் கொள்ளும் மாப்பொருளின் அளவை இயன்றளவு எல்லா நாள்களிலும் சராசரி மாறாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.
3. நீரிழிவு நோயாளி ஒவ்வொரு தடவையும் நீரிழிவு மாத்திரைகளை உட்கொள்ள முன்பு அதன் அளவு சரியானதா என உறுதிப்படுத்திக்கொள்ள வேண் டும்.
4. நீரிழிவு நோயாளி தாம் பயன்படுத்தும் நீரிழிவு மாத்திரைகளின் அல்லது இன்சுலினின் அள வையோ, எடுக்கும் தடவைகளின் எண்ணிக் கையையோ வைத்திய ஆலோசனையில்லாமல் மாற்றம் செய்தல் கூடாது.
5. நீரிழிவு நோயாளி ஒவ்வொருவரும் எப்போதும் தன்னுடன் Glucose packet ஒன்று அல்லது 2 ரொபிகளை அல்லது சிறிதளவு சீனியை (sugar)யையும் வைத்திருக்க வேண்டும்.
6. அதைவிட நீரிழிவு நோயாளி ஒவ்வொருவரும் தாம் நீரிழிவு நோயாளியென தெரியப்படுத்தும் அடையாள அட்டையொன்றை அல்லது வேறு ஏதாவது அடையாளப்படுத்தும் ஆவண மொன்றை எப்போதும் தம்முடன் வைத்திருப்பது பாதுகாப்பானதாகும்.
7. மேற்குலக நாடுகளில் தற்போது நீரிழிவு நோயா ளியொருவர் "Glucagon hypokit handy" கட் டாயம் வைத்திருக்குமாறு அறிவுறுத்தப்படுகிறது.
8. நோயாளி தாம் ஒவ்வொருவரும் உண்மையாக உட்கொள்ளும் மாத்திரைகளின் எண்ணிக்கை யையும் ஒரு நாளில் எடுக்கும் தடவைகளின் எண்ணிக்கையையும் அவை வைத்தியரினால் கூறப்பட்டனவற்றுக்கு வேறுபட்டிருந்தாலும் எந்தத் தயக்கம் இல்லாது குறிப்பிட்ட வைத்திய ருக்கு தெரியப்படுத்தல் வேண்டும். ஏனெனில் அப் போதுதான் வைத்தியரால் நோயாளியின் நோயின் உண்மை நிலைமையை அறிந்து கொள்ள முடியும். அத்துடன் ஹைபோகிளை சீமியா போன்ற உயிராபத்தினைத் தோற்றுவிக்கக் கூடிய நிலை மைகளை தவிர்க்கக் கூடியதாகவும் இருக்கும்.

*ச. ஞானக்குமரன்*

# நோய்வாய்ப்பட்டவர்களின் உரிமைப் போராட்டம்

**பகுதி- 4**

ஒருவர் நோய்வாய்ப்பட்டுவிட்டார் என்பதற்காக அவருக்கு இருக்கும் அடிப்படை மனித உரிமைகளை மீறிச் செயற்படுவது மனிதத்துவம் ஆகாது. அந்த வகையிலே நோயுற் றவர் தனது சொந்த விருப்பப்படி நடந்து கொள்ளும் உரிமையும் மதிக் கப்பட வேண்டும். நோயுற்ற ஒருவர் மருந்தைப் பாவிக் காமல் இருப்பதற்கு விருப்பப்படலாம், சத்திரசிகிச்சை செய்யாமல் இருக்க விரும்பலாம், தொடர்ந்து புகைப் பிடிப்பதற்கு விருப்பப்படலாம், உட லில் வலியை ஏற்படுத்தக்கூடிய சோதனைகள் செய்யாமல் விடுவோம் என்று நினைக்கலாம், தொடர்ந்து குடிவகைகள் பாவிக்க ஆசைப்படலாம், வேறொரு மருத்து வரின் இரண்டாவது அபிப்பிரா யத்தை கேட்க விரும்பலாம், கோயி லுக்குச் சென்று சில சமயப் பெரிய வர்களின் ஆசியும் அறிவுரையும் பெற்று வர விருப்பப்படலாம், வேறு ஒரு மருத்துவமுறைக்கு மாறு வதற்கு விருப்பப்படலாம். சொந்த விருப்பத்தின் பெயரில் வைத்திய சாலையிலிருந்து வீடு செல்ல நினைக் கலாம், உணவுக் கட்டுப்பாட்டை தவித்துக்கொள்ள விருப்பப்படலாம்.



இது போன்ற பல விருப்பங்கள் நோய்வாய்ப்பட்ட ஒருவருக்கு இருக்க முடியும். மருத்துவத்துறை யிலே ஒருவர் வாழும் காலத்தை நீடிக்க வேண்டும் என்பது எவ்வளவு முக்கியமானதோ அதே அளவு முக்கியத்துவம் அவர் வாழும் காலத்திலே மகிழ்ச்சியாகவும், மன நிறைவாகவும் வாழ வேண்டும், வாழ வைக்க வேண்டும் என்பதிலும் இருக்கிறது. எனவே நோய்வாய்ப் பட்டவர்கள் தமது மன நிறைவுக்காக சுகாதாரம் சம்பந்தமான தமது சொந்த விருப்பங்களை மருத்துவக் குழுவுக்கு தயங்காமல் தெரியப் படுத்த முடியும். அந்த விருப்பங் களை நிறைவு செய்ய உதவுவது மருத்துவக் குழுவின் கடமையாகும். ஒவ்வொருவரும் தமது உண்மை யான நிலைப்பாட்டை அல்லது விருப் பங்களை மருத்துவக் குழுவுக்கு சொல்வதனால் அவர்களின் மருத் துவக் கவனிப்பில் பாதிப்பு ஏற்படும் என்று கருதிவிட முடியாது. மருத் துவக் குழு நோய்வாய்ப்பட்டவருக்கு சில விடயங்களை தெளிவுபடுத்த இது உத வியாக அமையும். அத் துடன் ஒருவர் சத்திரசிகிச்சை செய்ய விரும்பாவிடின் வேறு என்ன சிகிச் சைகள் செய்ய முடியும் எனச் சிந் திக்கலாம். சில வகையான மருந் துகளை ஒருவர் பாவிக்க விரும் பாவிடின் வேறு எந்த மருந்துகள் மூலம் அல்லது நடைமுறைகள் மூலம் நோயைக் கட்டுப்படுத்தலாம் எனச் சிந்திக்க முடியும். ஒருவர் மருத்துவ ஆலோசனைக்கு எதிராக வீடு செல்ல விருப்பப்படின் வீட்டுச் சூழ்நிலையிலும் கிளினிக் மட்டத்தி லும் அவர் மீதான மருத்துவக் கவ னிப்பை எவ்வாறு தொடர முடியும் எனச் சிந்திக்க முடியும். வேறு ஒரு மருத்துவக் குழுவின் ஆலோசனை யைப் பெற விருப்பப்பட்டால் அத னையும் ஒழுங்கு செய்து கொடுக்க முடியும். புகைக்கவோ, குடிக்கவோ விருப்பப்பட்டால் அதற்கு அடிப்படைக் காரணங்கள் என்ன என்பதை ஆராய முடியும்.

மருத்துவர் கோபப்படுவார் என்று கருதி நோயுற்றவர்களோ அல்லது அவர்களின் உறவினர்களோ தமது உண்மையான விருப்பங்களை மறைத்து தவறான கருத்துகளை வெளியிடுவது எதிர்மறையான விளைவுகளை ஏற்படுத்தக்கூடும்.

பல சந்தர்ப்பங்களில் நோயுற்றவர் கள் தமது உண்மையான விருப்பு வெறுப்புகளை மருத்துவக் குழு வுக்கு மறைத்து பொய்யான தகவல் களை சொல்ல வேண்டிய நிலை நிலவுவதுண்டு. காரணம் சில தக வல்களையும் விருப்பங்களையும் சொன்னால் அது மருத் துவக் குழுவினுடனான உறவு நிலையைப் பாதிக்கும் என்ற அபிப் பிராயம் ஆகும். மருத் துவக் குழுவின் கடமை, ஆலோசனையும் அனு சரணையும் வழங்கி சிகிச்சை அளிப்பதாக இருக்குமேயல்லாது, யாரையும் கண் டித்தோ தண்டித்தோ திருத்த முயல்வது அதன் நோக் கமாக இருக்க முடியாது. சரியான ஆலோசனை களை நோயுற்றவர் கடைப்பிடிக்காது விட்

> **நோய்வாய்ப்பட்டவர் கள் தமது மன நிறை வுக்காக தமது சொந்த விருப்பங்களை மருத் துவக் குழுவுக்கு தெரி யப்படுத்த முடியும்.**

டால் அவருக்கு ஏதாவது ஆபத்து நிகழ்ந்துவிடுமோ என்ற மனிதாபி மான அடிப்படையிலே நோயுற்ற வர்களைக் கண்டிக்கும் நிகழ்வுகள் பல நடைபெற்ற வண்ணம்தான் இருக்கின்றன. கண்ணுக்கு முன் னால் ஒருவர் ஆபத்தை நோக்கிச் சென்று கொண்டிருக்கும்பொழுது, அவரைத் தடுத்தும் கேட்காமல் அதே திசையில் அவர் சென்று கொண் டிருக்கும்பொழுது அதனை அமை தியாக பார்த்துக் கொண்டிருப்பது எவருக்கும் மிகவும் கடினமானதாக இருக்கும். இந்த நிலையே பல சம யங்களில் மருத்துவனுக்கும் ஏற் படுகிறது. எது எவ்வாறாக இருப் பினும் நோயுற்றவருடன் மருத்துவர் கோபப்படுவது சரியான செய லாகாது.

(தொடரும்...)

*சி. சிவன்சுதன்*
*வைத்திய நிபுணர்,*
*யாழ். போதனா வைத்தியசாலை.*

**உதயன்**
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## இப்படியே போனால்.......!

இலங்கையில் போர் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டு ஐந்தாண்டுகள் கடந்துவிட்ட நிலையில் கௌரவமான அரசியல் தீர்வு, நின்றுநிலைக் கக்கூடிய நல்லிணக்கம், நடந்து முடிந்தவை தொடர்பான பொறுப்புக்கூறும் கடப்பாடு ஆகியவை குறித்து உள்நாட்டிலிருந்து மட்டுமன்றி சர்வதேசத்திலிருந்தும் குரல்கள் ஓங்கி ஒலித்துக்கொண்டிருக்கின்றன. ஆனால், அரசியல் தீர்வு தொடர்பில் ஓர் அங்குலங்கூட முன்னோக்கிச் செல்வதற்கான ஆக்கபூர்வமான நடவடிக்கை எதுவும் மேற்கொள்ளப்படவில்லை.

வடக்கில் உள்ளவர்களை தெற்குக்கும் தெற்கி லுள்ளவர்களை வடக்குக்கும் சுற்றுலாவாக கொண்டுவந்து பவனி விட்டு நல்லிணக்கம் நாட்டில் வந்துவிட்டதென்ற மாயையை ஏற்படுத் தும் முனைப்பே காண்பிக்கப்படுகின்றது. அது உண்மையான நல்லிணக்கமல்ல; மாறாக அலங்கார நல்லிணக்கமாகும். மோதலின்போது நடந்த விடயங்கள் தொடர்பில் பொறுப்புக்கூறும் கடப்பாடு என்பது வார்த்தைக்குக்கூட பெரும்பான் மைச் சமூகத்திலிருந்து ஒலிக்காத நிலையில் நடைமுறையில் அந்த விடயத்தைக் கரிசனையோடு அணுகுவார்களா என்பது சிந்தித்துப் பார்க்க வேண்டியதாகும்.

இந்நிலையில், கடந்த மார்ச் மாதம் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இலங்கை தொடர்பில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தைத் தொடர்ந்து ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்தால் இலங்கைக்கு எதிரான விசாரணைகள் முன்னெடுப்பதற்கான இறுதிக் கட்ட ஏற்பாடுகள் பூர்த்தியாகிவருவதான அறிவிப்புகள் வெளியாகிக்கொண்டிருக்கும் நிலையில் அதற்கு ஒத்துழைப்பு வழங்குவதன் மூலம் உண்மையான நல் லிணக்கத்தை அடைவதற்குரிய வழிவகைகளை முன்னெடுப்பதை விடுத்து திசைதிருப்புகின்ற விடயங்கள் முன்னெடுக்கப்படு கின்றனவோ என்ற சந்தேகங்கள் எம்முன்னே வலுவாக எழுகின்றன.

விடுதலைப்புலிகளின் புதிய தலைவர் கோபி என்ற அறிவிப்பில் தொடங்கி அவர் உட்பட மூவர் நீதிக்குப்புறம்பான வகையில் கொல்லப்பட்டமை, பொதுமக்கள் மத்தியில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்புகள் மற்றும் எதேச்சையான கைதுகள், தற்போது மலேசியாவில் ஐக்கிய நாடுகளின் அகதி அந்தஸ்துடன் இருந்த மூன்று தமிழர்கள் கைதுசெய்யப்பட்டு அவர்கள் புலிகளென முத்திரை குத்தப்பட்டு - அன்றேல் இனங்காணப்பட்டு இலங்கைக்கு வலுக்கட்டாயமாக திருப்பியனுப்பப்பட்டமை என மீண்டும் புலிகள் உயிர்பெற்று விட்டார்கள் என்ற தோற்றப்பாட்டை ஏற்படுத்தும் செயற்பாடுகள் தெளிவாகத் தெரிகின்றன.

மலேசியாவின் தான்தோன்றித்தனமான செயலுக்கு சர்வதேச மன்னிப்புச்சபை, அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் ஆணையகம் ஆகியன கண்டனங்களை வெளியிட்ட போதிலும் இலங்கை அரசோ ஐக்கிய நாடுகள் சபை, புலிகள் இயக்க உறுப்பினர்களுக்கெல்லாம் அகதி அந்தஸ்தை வழங்கியுள்ளது என்ற பரப்புரையை முன்னெடுக் கத் தொடங்கியுள்ளது.

அண்மையில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட் டில் கூட மலேசியாவின் முன்னுதாரணத்தை ஏனைய நாடுகளும் பின்பற்றவேண்டும் என இராணுவத்தரப்பால் கோரப்பட்டிருந்தமை இங்கே சுட்டிக்காட்டத்தக்கது.

ஆக மொத்தத்தில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் விசாரணைகள் தொடங்க முன்னர் விடுதலைப் புலிகள் மீண்டும் புத்துயிர்பெற்று விஸ்வரூபமாக உருப்பெற்று இலங்கைக்கு மட்டுமன்றி முழு உலகுக்குமே பாரிய அச்சுறுத்தலாக திகழப்போகிறார்கள் என்ற கருத்துருவாக்கம் இடம்பெறுவதாகவே எண்ணத் தோன்றுகின்றது.

அர்த்தமுள்ள அதிகாரப்பகிர்வினூடான அரசியல் தீர்வு, உண்மையான நல்லிணக்கம், நீதியை நிலைநிறுத்தும் பொறுப்புக்கூறும் கடப்பாடு ஆகியவற்றை இதயசுத்தியுடன் முன்னெடுக்கு மேயானால் இப்படிப்பட்ட தோற்றப்பாடுகளை ஏற்படுத்தும் வேலை அரசுக்கு இருக்காது. இல்லை; இல்லை நாம் இப்படியேதான் தொடர்ந்தும் முன்செல்லப் போகின்றோம் என நினைத்து செயற்பட்டால் எதிர்பார்ப்பதற்கு மாறாக தலை கீழான நிலைமைகளைச் சந்திப்பது மட்டுமன்றி 'மோடி' களுக்கு மட்டுமல்ல 'லேடி' களுக்கும் பயப்படவேண்டியேற்படும்.



# மஹிந்தவை வீட்டுக்கு அனுப்ப ஐ.தே.கவின் 'தலை' மாறவேண்டும்

சிங்கள மூலம்-சந்துன் ஜீவந்த (லங்காதீப)
தமிழில் -வீஎஸ்ரீ.

இன்றைய நாள்களில் அரசியலரங்கில் இடம்பெறும் நிகழ்வுகளை நோக்கும்போது தென்னாசிய வட்டகையில் முக்கிய சில அரசியல் பாத்திரங்கள் பொது மக்களால் எந்நாளும் பேசப்படுபவையாக அமைந்துள்ளன. இலங்கை மக்களைப் பொறுத்தவரை, இன்று அத்த கைய நிலையிலுள்ள அரசியல் பிரமுகர்களாக இந்தியாவின் புதிய பிரதமராகப் பதவியேற்றுள்ள நரேந்திரமோடி, ஜே.வி.பியின் புதிய தலைவர் அனுரகுமார திஸநாயகா மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோரைக் குறிப்பிடவேண்டியுள்ளது.

நரேந்திரமோடி இன்று இந்தியாவின் 'சுப்பர் ஸ்ரார்' ஆகக் கருதப்படுகிறார். இந்தியாவின் தேர்தல் வரலாற்றிலேயே சரித்திரம் படைத்த அமோக வெற்றியைத் தமது பாரதீய ஜனதாக் கட்சிக்கு[illegible] பற்றுக்கொடுத்துள்ளதன் மூலம் [illegible] இன்று பிரபல்யம் பெற்றுள்ளா[illegible] ன்னர் அந்தக் கட்சிக்குத் தலைமை [illegible]ங்கி வழி நடத்திய லால் கிருஷ்ண அத்வானியின் தலைமைத்துவத்தின் கீழ் அந்தக் கட்சி 2004 மற்றும் 2009 ஆம் ஆண்டுகளில் இடம்பெற்ற இந்திய நாடாளுமன்றத் தேர்தல்களில் தோல்விகளையே சந்தித்திருந்தது. அது 2004 மற்றும் 2010 ஆம் ஆண்டுகளில் இடம்பெற்ற இலங்கை நாடாளுமன்றத் தேர்தல்களில் ரணில் விக்கிரமசிங்கவின் தலைமைத்துவத்தின் கீழ் போட்டியிட்ட ஐக்கிய தேசியக்கட்சி தோல்விகளைத் தழுவியமைக்கு ஒப்பானதொன்றாகும். அந்த வகையில் நோக்கும் போது அத்வானியும் ரணிலும் ஒரே வகையான இரு பாத்திரங்களே.

ரணிலைப் போன்றே அத்வானியும் பாரதீய ஜனதாக் கட்சியின் தலைமைத்துவத்தைக் கைவிட விரும்பவேயில்லை. அவரது தலைமையில் இந்தப் பொதுத் தேர்தலை எதிர்கொண்டால் தோல்வி நிச்சயம் என்பதை உணர்ந்த கட்சியினர், அவரை பலாத்காரமாகக் கட்சித் தலைவர் பதவியிலிருந்து அகற்றி மோடியைக் கட்சியின் தலைவராக்கி வைத்தனர். மோடியின் தலைமைத்துவத்தின் கீழ் தேர்தலில் பா.ஜ.க. நிச்சயம் வெற்றிபெற்றேயாகும் என்ற கட்சி உறுப்பினர்களது நம்பிக்கை பொய்த்து விடாமல் நாடாளுமன்றத்தின் 543 ஆசனங்களில் 336 ஆசனங்களை பா.ஜ.கவின் தலைமையிலான கூட்டணி கைப்பற்றி பெரு வெற்றியீட்டியது.

பா.ஜ.க வின் தலைமையிலான கூட்டணியால் கடந்த 2009 ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலில் 159 ஆசனங்களையே கைப்பற்ற முடிந்திருந்த போதிலும், இம்முறை அதனை விட 177 நாடாளுமன்ற ஆசனங்களை மேலதிகமாகப் பெற முடிந்தது. அந்த வகையில் மோடியின் தலைமைத்துவத்தின் கீழ் பா.ஜ.கட்சி 111 சதவீத மேலதிக நாடாளுமன்ற ஆசனங்களைக் கைப்பற்றிச் சாதனை படைத்துள்ளது. புதியதொரு தலைமைத்துவத்தின் கீழ் ஒரு கட்சியால் முன்னரை விட நாட்டு மக்களது ஆதரவை ஈட்டிக்கொள்ள இயலும் என்பதற்கு மோடியின் தற் போதைய வெற்றி உதாரணமொன்றாக அமைகிறது.

நரேந்திரமோடி பா.ஜ.கவின் தலைவரானதன் மூலம், 2004 ஆம் ஆண்டு தொடக்கம் பத்தாண்டுகள் காலமாக தொடர்ந்து ஆட்சி அதிகாரத்தில் இருந்த இந்திய காங்கிரஸ் கட்சி அரசு வீட்டுக்கு அனுப் பப்பட்டுள்ளது. காங்கிரஸ் கட்சி கடந்த காலத்தில் ஒன்றன் பின் ஒன்றாக இரு தடவைகள் தேர்தல்களை வென்றிருந்தது. இது ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி 2004 மற்றும் 2010 ஆம் ஆண்டுகளில் ஒன்றன் பின் ஒன்றாக தேர்தல்களை வென்றெடுத்தமைக்கு ஒப்பானதாகும். இந்திய காங்கிரஸ் அரசு இலங்கையின் சுதந்திரக் கட்சி அரசின் விருப்புக்குரிய அரசாக இருந்து வந்துள்ளது. இந்திய காங்கிரஸ் கட்சிக்கும் இலங் கையின் சுதந்திரக் கட்சிக்கும் இடையிலான இந்த நெருக்கம் இந்திரா காந்தி மற்றும் சிறிமாவோ பண்டாரநாயக்கா ஆகியோரின் ஆட்சிக் காலத்தி லிருந்து ஏற்பட்டு வந்திருந்த நெருக்க மாகும்.

அதேவேளை பா.ஜ.கட்சி சாதாரணமாக ஐ.தே.கட்சிக்கு நெருக்கமானதொரு கட்சியாகும். அந்த வகையில் தற்போது இந்தியாவில் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றியுள்ள பா.ஜ.க.அரசு, ஐ.தே. கட்சிக்கு நெருக்கமான அரசாகும். இந்தியாவில் இவ்வாறு பா.ஜ.க., அரசை நிறுவ இயலுமானால், இலங்கையில் ஐ.தே.கட்சியால் அரசை நிறுவ இயலாதென எவராலும் கூறிவிட இயலாது. ஆனால் அவ்விதம் ஐ.தே.கட்சி ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்ற வேண்டுமானால், இந்தியாவில் பா.ஜ.கட்சி மேற்கொண்ட மாற்றத்தை ஐ.தே.கட்சிக்குள் மேற்கொண்டாக வேண்டும்.

இத்தனைக்கும் பா.ஜ.கட்சி, மேற்கொண்ட மாற்றம் தான் என்ன? தேர்தல்களில் தோல்விக்கு மேல் தோல்விகளைச் சந்தித்தும் கட்சியின் தலைவர் பதவியில் அட்டையைப் போன்று ஒட்டிக் கொண்டிருந்த அத்வானியைத் தலைமைப் பொறுப்பிலிருந்து தூக்கி எறிந்து விட்டுப் புதிய தலைவராக மோடியைத் தேர்ந்தெடுத்தமையே பா.ஜ.கவுக்கு இத்தகைய வெற்றியைப் பெற்றுக் கொடுத்துள்ளது. அதே போன்று ஐ.தே. கட்சியும், அதன் தலைமைப் பதவியில் அட்டையைப் போன்று ஒட்டிக் கொண்டு தூங்கும் ரணிலை கட்சியின் தலைமைப் பதவியிலிருந்து அகற்றிவிட்டு மோடியைப் போன்ற செயற்திறனுள்ள ஒருவரைக் கட்சியின் தலைவராக நியமித்தால் பா.ஜ.க. போன்றே ஐ.தே.கட்சியாலும் தேர்தலை வென்று ஆட்சி அமைக்க இயலும்.

இது சாத்தியமானதொன்றா? என்று அவநம்பிக்கைப் படுவோருக்கு இலங்கை அரசியலரங்கில் இடம்பெற்ற இத்தகைய சம்பவமொன்றை உதாரணமாக முன்வைக்க இயலும்.

இதற்காக இலங்கை அரசியல் வரலாற்றில் நாம் நீண்ட தூரம் பின்னோக்கிச் செல்ல வேண்டியதில்லை. அண்மையில் இடம்பெற்ற மேல் மாகாண மற்றும் தென் மாகாண சபைகளுக்கான தேர்தல்களே இதற்குப் பொருத்தமான உதாரணமாகும். இவ்வாண்டின் ஆரம்பத்தில் இடம்பெற்ற இவ்விரு மாகாண சபைகளுக்கான தேர்தலுக்கு முன்னர் 2009 ஆம் ஆண்டில் இடம்பெற்ற மாகாண சபைகளுக்கான தேர்தலில் ஜே.வி.பிக்குத் தலைமை தாங்கியவர் அத்வானி போன்ற வயதான சோமவன்ச அமரசிங்க ஆவார். அவரால் மேல் மாகாண மற்றும் தென் மாகாண சபைகளுக்கான தேர்தலில் ஜே.வி.பிக்காக 1,28,763 வாக்குகளையே பெற்றுக்கொடுக்க முடிந்திருந்தது. பா.ஜ.க., அத்வானியைத் தலைவர் பதவியிலிருந்து அகற்றி மோடியை அந்தப் பதவிக்குத் தேர்ந்தெடுத்தமை போன்று, ஜே.வி.பி.யும் சோமவன்ச அமரசிங்கவைத் தலைமைப் பதவியில் இருந்து அகற்றி அனுரகுமார திஸநாயக்கவை அந்தப் பதவிக்கு நியமித்ததன் மூலம் 2009 ஆம் ஆண்டில் பெற்ற ஆதரவு வாக்குகளின் இரு மடங்கை 2014 ஆம் ஆண்டின் மாகாண சபைகளுக்கான தேர்தலில் பெற்றுக்கொண்டுள்ளது. அந்த வகையில் 2009 ஆம் ஆண்டில் ஜே.வி.பி. பெற்றவாக்குகளை விட இவ்வாண்டின் ஆரம்பத்தில் இடம்பெற்ற மாகாண சபைகளுக்கான தேர்தலில் ஜே.வி.பி.106 சதவீத அதிக வாக்குகளைப் பெற்றுக்கொண்டுள்ளது. அந்த வகையில் கட்சியின் தலைமைப் பதவியில் ஏற்படுத்தப்பட்ட மாற்றம், வாக்கு வங்கியை இரு மடங்காக்கியுள்ளது. பா.ஜ.க., அத்வானியைத் தலைமைப் பதவியிலிருந்து அகற்றியதன் மூலம் நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையை இரு மடங்காக்கிய விதத்தில் ஜே.வி.பியும் அந்த விதத்தில் செயற்பட்டு தனது வாக்கு வங்கியை இரு மடங்காக்கி[illegible] கொண்டுள்ளது.

அந்த வகையில், ரணிலை ஐ.தே.கட்சியின் தலைவர் பதவியிலிருந்து அகற்றி புதி[illegible] தலைமைத்துவமொன்றை உருவாக்கி[illegible] கொண்டால் ஐ.தே.கட்சியின் ஆதரவு வாக்குகள் இரு மடங்காக இட மு[illegible]டு என்பதை எவராலும் மறுக்க இயலாது. இந்தியாவின் நரேந்திரமோடி ம[illegible] இலங்கையின் அனுரகுமார தி[illegible] ஆகியோர் இதற்கு உதாரண மாகச் சுட்டிக் காட்டத் தக்கவர்களாவர்.

நரேந்திரமோடி மற்றும் அனுரகுமார திஸநாயக்க ஆகியோர் தத்தமது கட்சிகளின் தலைமைப் பொறுப்பை ஏற்றதன் மூலம் தேர்தலில் வாக்குகளை நூற்றுக்கு நூறு வீதமாக அதிகரிக்க முடிந்த அதேவேளை 2009 மற்றும் 2014 ஆகிய ஆண்டுகளின் மாகாண சபைத் தேர்தல்களில் ஐ.தே.கட்சிக்குத் தாமே தலைமைதாங்கியதன் மூலம் ரணிலால் வெறுமனே 0.47 வீத வாக்குகளையே அதாவது ஒரு சதவீதத்துக்கும் குறைவான வாக்குகளையே அதிகரித்துக் கொள்ள முடிந்திருக்கிறது. ஐந்து ஆண்டுகள் கால இடைவெளியின் பின்னரும் ஒரு சத வீத வாக்குகளைக் கூட அதிகரித்துக் கொள்ள இயலாததொரு கட்சித் தலைமைத்துவத்தை ஐ.தே.கட்சி என்ன கர்மத்துக்காகத் தொடர்ந்தும் பேணி வருகிறது என்பது கேள்விக்குரியதே. இது கசப்பானதொரு உண்மையாகும்.

அந்த வகையில் ஜே.வி.பி.யிடம் கற்றுக் கொள்ள இயலாவிட்டாலும், பா.ஜ.கவிடமிருந்தாவது ஐ.தே.கட்சி பாடம் கற்றுக் கொண்டாக வேண்டும். அத்தகையதொரு தலைமைத்துவ மாற்றத்தை ஐ.தே.கட்சி மேற்கொள்ளுமானால், இந்தியாவில் மன்மோகன் சிங்கை வீட்டுக்கு அனுப்பி ஆட்சி அதிகாரத்தை மோடி கைப்பற்றியமை போன்று, இங்கு மஹிந்தவை ஐ.தே.கட்சியால் வீட்டுக்கு அனுப்ப முடியும். அவ்விதம் தனது தலைமைத்துவத்தில் ஐ.தே.கட்சி மாற்றமொன்றை ஏற்படுத்தத் தவறுமானால் மேலும் ஆறு ஆண்டுகள் காலத்துக்கு இலங்கையில் மதமுலன குடும்பத்துக்கு (மஹிந்த) ராஜயோகம் தான். ஐ.தே. கட்சி இருதய நோயாளியாகவே இலங்கை அரசியலில் காலத்தைப் போக்க வேண்டி இருக்கும் என்பதே யதார்த்தம்.

கணித்தவர்:-
கே.வி.ரெகுநாதன்

# குருபெயர்ச்சிப் பலன்

## இந்தக் குரு பெயர்ச்சிக் காலத்தில் ஏற்படும் ராகு, கேது, சனி பெயர்ச்சியும், பலன்களும்

வாக்கிய பஞ்சாங்கப்படி ஜய ஆண்டு வைகாசி மாதம் 30 ஆம் நாள் 13.06.2014 வெள்ளிக்கிழமை மாலை மணி 6.03 இற்கு புனர்பூசம் நட்சத்திரம் 4 ஆம் பாதம் கடகராசிக்கு குருபகவான் பெயர்ச்சி அடைகிறார். கார்த்திகை மாதம் 17 ஆம் திகதி 03.12.2014 புதன்கிழமை மாலை மணி 5.10 இற்கு மகம் நட்சத்திரம் 1 ஆம் பாதம் அதிசாரம் பலம் பெற்று குருபகவான் சிம்மராசிக்கு பெயர்ச்சி அடைகிறார். மீண்டும் மார்கழி மாதம் 7 ஆம் திகதி 22.12.2014 திங்கட்கிழமை பகல் மணி 12.19 இற்கு ஆயிலியம் நட்சத்திரம் 4 ஆம் பாதத்துக்கு குருபகவான் வக்ரம் அடைந்து கடகம் ராசி வந்தடைகிறார். ஜய ஆண்டு ஆனி மாதம் 7 ஆம் திகதி 21.06.2014 சனிக்கிழமை பகல் மணி 11.18 இற்கு சித்திரை நட்சத்திரம் 2 ஆம் பாதம் கன்னிராசிக்கு ஸ்ரீராகுபகவானும், ரேவதி நட்சத்திரம் 4 ஆம் பாதம் மீனம் ராசிக்கு கேது பகவானும் பெயர்ச்சி அடைகின்றனர்.

ஸ்ரீசனிபகவான் ஜய ஆண்டு மார்கழி மாதம் 1 ஆம் நாள் 16.12.2014 செவ்வாய்க்கிழமை பகல் மணி 2.17 இற்கு விசாகம் நட்சத்திரம் 4 ஆம் பாதம் விருச்சிக ராசிக்கு பெயர்ச்சி அடைகிறார்.


இந்த குருப்பெயர்ச்சி ஆண்டில் ஏற்படும் 4 கிரக மாற்றங்கள் ஒவ்வொரு ராசிக்காரர்களுக்கு ஏதாவது ஒரு விதத்தில் அதிர்வை ஏற்படுத்தும் ஆகவே மிகுந்த முன்னெச்சரிக்கையுடன் இறையருள் பெற்று நல்லதே நடக்க ஆண்டவனை வேண்டுவோம்.

பரிகாரம் செய்ய வேண்டிய கிரகங்கள்

இந்த 4 கிரகப் பெயர்ச்சிகளை முன்னிட்டு பரிகாரம் செய்ய வேண்டிய அட்டவணை கீழே தரப்பட்டுள்ளது.

| ராசி | குரு பெயர்ச்சி | சனி பெயர்ச்சி | ராகு பெயர்ச்சி | கேது பெயர்ச்சி | பரிகாரம் செய்ய வேண்டிய கிரகங்கள் |
|---|---|---|---|---|---|
| மேஷம் | விரோதம் | துன்பம் | இலாபம் | செலவு | குரு, சனி, கேது |
| ரிஷபம் | பிணி | செலவு | சேதம் | இலாபம் | குரு, சனி, ராகு |
| மிதுனம் | இலாபம் | லக்ஷ்மீகரம் | வியாதி | பகை | ராகு,கேது |
| கடகம் | செலவு | செலவு | இலாபம் | பீடை | குரு, சனி, கேது |
| சிம்மம் | கலகம் | வியாதி | விரோதம் | துன்பம் | குரு, சனி, ராகு,கேது |
| கன்னி | காரிய வெற்றி | இலாபம் | சோகம் | செலவு | ராகு,கேது |
| துலாம் | அலைச்சல் | விரோதம் | செலவு | இலாபம் | குரு, சனி, ராகு |
| விருச்சிகம் | நலம் | சோகம் | இலாபம் | செலவு | சனி, கேது |
| தனுசு | சோரம் | வியாதி | பகை | விரோதம் | குரு,சனி, ராகு,கேது |
| மகரம் | விருத்தி | வரவு | பீடை | ஜெயம் | ராகு |
| கும்பம் | துயரம் | பகை | துன்பம் | விரோதம் | குரு,சனி, ராகு,கேது |
| மீனம் | இலாபம் | பீடை | தண்டனை | சோகம் | சனி,ராகு, கேது |

*ஆகவே குருப்பெயர்ச்சிக்குப் பின்னர் 4 கிரகங்களால் ஏற்படும் பலன்களை சுருக்கமாக மேலே பார்த்தோம். ஒவ்வொரு ராசிக்கும் சில கிரகங்கள் நன்மைகள் தருகின்றன. சில கிரகங்கள் தீமைகள் தருகின்றன. ஆகவே அனைத்து ராசி நேயர்களும் ஒவ்வொரு கிரகப் பெயர்ச்சியின்போதும் நவக்கிரக பரிகாரம் செய்வது மிகவும் நன்மை தரும் என்பது என்னுடைய அனுபவக் கருத்தாகும்.*



## மேஷம்

அச்சுவினி, பரணி,
கார்த்திகை 1 ஆம் பாதம்



மேவிய செந்தமிழ் செவ்வாய் பகவானின் அதிதேவதை முருகப் பெருமான் அருள் பெற்ற மேஷ ராசி நேயர்களே!

குட்டையான அழகான முகம் கொண்ட, மென்மையும் வன்மையும் இணைந்த குணம், திடகாத்திரதேகம், தங்களுடைய கருத்தில் பிடிவாத குணம், மற்றவர்களை அடக்கி ஆள்வதில் கெட்டிக்காரர்கள், எந்த சூழ்நிலையையும் சமாளிக்கும் திறன், அடுத்தவர்களுக்காக பலிக்கடா ஆகும் இதயம் கொண்ட மேஷராசி நேயர்களே!

இதுவரை உங்கள் ராசிக்கு 3 இல் சஞ்சரித்த குருபகவான் வரும் வைகாசி மாதம் 30 ஆம் திகதி (13.06.2014) 4 ஆம் இடத்துக்குப் பெயர்ந்தும் அதன் பின் அதிசாரமாக 03.12.2014 அன்று சிம்ம ராசிக்கு பெயர்ந்து 11.12.2014 இல் வக்ர கதியாக மீண்டும் கடக ராசிக்கு வந்தடைகிறார். ராகு, கேதுக்கள் ஆனி மாதம் 7 ஆம் திகதி 21.06.2014 அன்று 1.7 இருந்து 6.12 ஆகிய இடங்களுக்கும் சனி பகவான் 16.12.2014 மார்கழி 1 முதல் 7 ஆம் இடமாகிய கண்டச்சனியில் இருந்து பெயர்ந்து அஷ்டமத்துச்சனியாக வலம்வர இருக்கிறார்கள். இந்த 2014 ஆம் ஆண்டு குருப் பெயர்ச்சியில் இருந்து சனிப் பெயர்ச்சி முடியும் காலம்வரை எல்லா ராசி அன்பர்களும் சற்று விழிப்புடன் இருக்க வேண்டும்.

1 ஆம் இடமாகிய ஆயுள் உடல் ஸ்தானத்தைப் பொறுத்தவரை இது செவ்வாயின் வீடாகி அங்கு சனியின் 7 ஆம் பார்வை படுகிறது. உங்கள் ஆயுள் சனியின் பலத்தால் தீர்க்கம் பெறுகிறது. உங்கள் ராசியில் இருந்த கேது பகவான் விடுதலை பெற்று 12 ஆம் இடத்துக்கு செல்வதால் மன ரீதியாகவும், உடல் ரீதியாகவும் கடந்த 1½ ஆண்டுகளாக உங்களைப் பிடித்துவாட்டி வதைத்துக் கொண்டிருந்த தீய சக்திகளிடமிருந்து விடுதலை பெறப் போகிறீர்கள். குருபகவான் 4 ஆம் இடத்துக்குப் பெயர்வது ஒரு சரியான அமைப்பாக இருக்காது. "தர்மபுத்திரர்" நாளிலே வனவாசம் போனதும் என்ற கவிக்கேற்ப ஒரு சிலர் இடம்பெயரக் கூடிய சூழ்நிலை ஏற்படும்.

2 ஆம் இடமாகிய தன, குடும்ப வாக்கு ஸ்தானத்தைப் பொறுத்தவரை இந்த இடம் சுக்கிரனின் வீடாகி அங்கு எவ்வித கிரக பார்வை பலமும் விழவில்லை. தனவரவைப் பொறுத்தவரை ஏற்றத்தாழ்வான நிலையே ஏற்படும். பொருளாதார விடயத்தில் மிகுந்த எச்சரிக்கை வேண்டும். வாக்கு ஸ்தானத்தை பொறுத்த வரை பேசும் போது அநாவசியமான வார்த்தைகளை வெளிவிட வேண்டாம். குடும்பத்தில் சலசலப்பு இருந்து கொண்டே இருக்கும். இந்தச் குருப்பெயர்ச்சிக் காலத்தில் பெரிய கிரகங்களின் பெயர்ச்சி ஏற்படுவதால் அமைதியாக இருந்து நிதானித்து முன் யோசனையுடன் குடும்பத்தை நடத்தி வரவேண்டும். உங்களது இந்த ஸ்தானமானது மிகவும் பலவீனப்பட்ட அமைப்பாகவே உள்ளது.

3 ஆம் இடமாகிய தைரிய, சகோதர ஸ்தானத்தைப் பொறுத்தவரை இவ்விடம் புதனின் வீடாகி அங்கிருந்த குருவும் அவ்விடத்தை விட்டுப் பெயர்கின்றார். உங்களது தைரிய ஸ்தானமானது உங்களைச் சோதிக்க வைக்கும் அளவுக்கு ஏதாவது ஒரு இடைஞ்சல் வந்துகொண்டே இருக்கும். உங்கள் சகோதர ஸ்தானத்தைப் பொறுத்தவரை முன்பிருந்த நிலைமாறி உடன்பிறந்தவர்கள் ஒட்டி உறவாட ஓடி வருவார்கள். சகோதரர்களின் மூலம் தேவையான ஆதரவு பெருகி வரும் காலம். ஆகையால் அதைச் சாதித்துக் கொள்வது உங்கள் கையில்தான் உள்ளது. காலம் நமக்கு வழிகாட்டுமே தவிர எல்லாவற்றையும் ஏற்படுத்திக் கொடுக்காது. சகோதர, சகோதரிகளின் சுபகாரிய செலவுகளுக்கு நீங்கள் தயாராகிக் கொள்ளவும்.

4ஆம் இடமாகிய தாய், வீடு, மனை, வாகனத்தைப் பொறுத்தவரை இந்த இடம் சந்திரனின் வீடாகி அங்கு குருபகவான் உச்ச கதியில் அமர உள்ளார். சுகஸ்தானமாகிய இவ்வீட்டுக்கு குரு அமர்வது போதிய பலனைத் தராது என்றாலும் அவர் பார்க்கின்ற இடங்களால் ஓரளவு சுபமே நிகழும். மேலும் இவ்வீட்டுக்கு சனிபார்வை படுவது அவ்வளவு நல்லதல்ல. தாயின் உடல் நிலை கவனிக்கப்பட வேண்டியதாக இருக்கும். தாய்க்கும், ஜாதகருக்கும் இடையில் ஒற்றுமை இருக்காது. வீடு, மனை போன்றவற்றில் முதலீடு செய்வதைத் தவிர்க்கவும். இடப்பெயர்ச்சி கண்டிப்பாக உண்டு. வண்டி வாகனங்களால் போதிய வருமானம் கிடைக்காது. குருவின் பார்வை 10 ஆம் இடத்தில் விழுவது பொருளாதாரத்தை நிவர்த்தி செய்ய உதவும்.

5 ஆம் இடமாகிய பூர்வ புண்ணியம், புத்திர ஸ்தானத்தை பொறுத்தவரை இவ்விடம் சூரியனின் வீடாகி அங்கு எவ்வித கிரக பார்வை பலமும் விழவில்லை. உங்களது பூர்வ புண்ணிய ஸ்தானமானது கிரகங்களின் சூழ்நிலையால் பலம் இழந்து காணப்படுகிறது. குருவின் அதிசாரம் இவ்வீட்டுக்கு ஏற்படும்பொழுது சுபமான நன்மைகள் ஏற்படுவதற்கு வாய்ப்பு உள்ளது. குல தெய்வத்தை அனுதினமும் பூஜித்து வரவும்.

உங்களது புத்திர ஸ்தானமானது பலவீனமான நிலையில் இருப்பதால் குழந்தைப் பாக்கியத்தை கிரகங்கள் சற்றுத் தாமதப்படுத்தும். குழந்தைகளின் உடல்நிலையில் அவ்வப்போது ஏதாவது பிணிகள் ஏற்பட வாய்ப்பு உண்டு. கல்வியிலும் மந்த நிலையே காணப்படும்.

6 ஆம் இடமாகிய ருண, ரோக ஸ்தானத்தைப் பொறுத்தவரை இந்த இடம் புதனின் வீடாகி அங்கு ராகுபகவான் பெயர்ச்சியாகி உள்ளார். பாவகிரகமான ராகு 6 ஆம் இடமாகி பணபலத்தில் அமர்வது மிகவும் ஒரு நல்ல அமைப்பாகும். உங்கள் உடம்பில் ஒட்டிக் கொண்டிருந்த நோய்கள் படிப்படியாக விலகவைக்க ராகுபாகவான் அருள்புரிவார். மனதில் ஏற்பட்டிருந்த பதற்றமான சூழ்நிலையும் வரும் டிசெம்பர் மாதத்துக்குப் பின் விலகும். சனிப்பெயர்ச்சியிலும் அஷ்டமத்து கால பலன்களையும் சமாளிக்க ராகு பயன்படுவார். பொருளாதார சூழ்நிலையில் கொடுக்கல், வாங்கல்களுக்கு இடமளிக்க வேண்டாம். பொருளாதார ரீதியாக ஆடம்பரச் செலவுகளைத் தவிர்க்கவும்.

7 ஆம் இடமாகிய களஸ்திர ஸ்தானத்தைப் பொறுத்தவரை இவ்விடம் சுக்கரனின் வீடாகி அங்கு கார்த்திகை மாதம் வரை சனிபகவான் அமர்ந்து அதன்பின் அஷ்டமத்து சனியாக மாற உள்ளார். போதிய அளவு குருபலம் இல்லாததால் திருமண காரியங்களைச் சற்றுத் தள்ளி வைப்பது நல்லது. ஒரு சிலருக்கு குருபகவான் அதிசார கதியில் செல்லும் பொழுது மாங்கல்யம் கிட்டக்கூடிய அமைப்பு உண்டு. திருமணமான தம்பதியார்களுக்கு மத்தியில் கருத்து வேறுபாடுகள் ஏற்படும் காலமாகையால் கணவன், மனைவி உறவில் ஆணாகட்டும் அல்லது பெண்ணாகட்டும், சற்று அடக்கி வாசிப்பது நல்லது. வாழ்க்கையில் பிரச்சினை உள்ளவர்கள் மதுரை மீனாட்சி அம்மனின் கோயிலில் உள்ள கல்யாண சுந்தரேஸ்வரரை தம்பதி சகிதம் தரிசனம் செய்ய சுபம் உண்டாகும்.

8 ஆம் இடமாகிய ஆயுள் மாங்கல்ய ஸ்தானத்தைப் பொறுத்தவரை இவ்விடம் செவ்வாயின் வீடாகி இங்கு வரும் கார்த்திகை மாதம் முதல் சனிபகவான் அஷ்டமத்துச் சனியாக அமர உள்ளார். அஷ்டமத்துச் சனியால் ஆயுளுக்குப் பாதிப்பு ஏதும் இல்லை என்றாலும் உடல்ரீதியாக பல சங்கடங்களை சந்தித்தே ஆக வேண்டும். இந்த ராசி நேயர் அனைவருக்கும் யாரோ சூனியம் வைத்த மாதிரி பலன்கள் நடைபெறும் காலம்.

ஆகையால் காலவைரவரை வழிபட்டு காலத்தை எமது பக்கம் சாய்த்துக்கொள்ள முடியும். இவ்விடம் மாங்கல்ய ஸ்தானத்துக்கு இடமாகையால் கணவன், மனைவி உறவில் மிகுந்த எச்சரிக்கை தேவை. இவ் வீட்டுக்கு குருபார்வை கிடைப்பது வாழ்க்கையில் சில வேளைகளில் நல்லதும் நடக்கும்.

9ஆம் இடமாகிய பிதுர், பாக்கிய ஸ்தானத்தைப் பொறுத்தவரை இந்த இடம் குருவின் வீடாகி வரும் டிசெம்பர் மாதம் வரை சனிபாகவான் பார்வையும் அதன் பின் விலகுவதும் ஏற்படும். உங்கள் தந்தையாரின் ஆயுள் நிலை, உடல் - நிலை கார்த்திகை மாதம் வரை சுமாராகவும் அதன்பின் நன்றாகவும் இருக்கும். தந்தையாரின் ஜீவன சொத்து உங்களது கைக்கு வரஇந்த குருப்பெயர்ச்சியிலிருந்து 6 மாத காலம் பொறுத்து இருக்க வேண்டும். சில வில்லங்கங்கள் ஏற்படும் அதன் பின்னரே தீர்வு ஏற்படும். உங்களது உயர்கல்வி ஸ்தானமானது நீண்ட கடின பிரயாசையுடன்கூடிய அமைப்பாக உள்ளதால் நிதானித்து செயற்படுவது நல்லது.

10 ஆம் இடமாகிய ஜீவன ஸ்தானத்தை பொறுத்தவரை இவ்விடம் சனிபகவானின் வீடாகி அங்கு குருபார்வை விழுகின்றது. 2015 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் சனிபார்வையும் விழும். விவசாயத்துறை சார்ந்தவர்களுக்கு சுமாரான விளைச்சலும், மருத்துவத்துறை சார்ந்தவர்களுக்கு மாற்றம் ஏற்படும் காலமாகவும், இரும்பு சம்பந்தப்பட்ட துறையினருக்கு ஓரளவு மிதமாகவும், சுய தொழில் புரிவோருக்கு காலம் கைகொடுக்காமலும், கலைத்துறை சார்ந்தவர்களுக்கு மேலதிகாரிகளின் மறைமுக தாக்கமும், தனியார் துறையில் இருப்போருக்கு எதிர்பாராத இடத்துக்கு இடம்பெயருவதும் வேலை இல்லாதவர்கள் வேலை தேடி அலைவதும் நடக்கும்.

11 ஆம் இடமாகிய லாபஸ்தானத்தை பொறுத்தவரை இந்த இடம் சனிபகவானின் வீடாகி அங்கு எவ்வித கிரக பார்வைப் பலமும் விழவில்லை. ஆகவே விவசாயத்துறை சார்ந்தவர்களுக்கு விளைச்சலுக்கேற்ற ஆதாயம் இல்லாமையும், மருத்துவத்துறையினருக்கு மாற்றம் உண்டாவதால் விரையமும், இரும்பு சம்பந்தப்பட்ட துறையினருக்கு கடன்வாங்கி தொழில் செய்வதும், சுயதொழில் புரிவோருக்கு கையில் காசு இல்லாமையும், கலைத்துறை சார்ந்தவர்களுக்கு அடுத்தவர்களிடம் கையேந்துவதும் , அரசதுறையினருக்கு ஊதிய இழப்பும், தனியார் துறையில் உள்ளவர்களுக்கு உழைப்பிற்கேற்ற ஊதியம் கிடைக்காமையும் நடக்கும்.

12 ஆம் இடமாகிய அயனம், சயனத்தை பொறுத்தவரை இந்த இடம் குருவின் வீடாகி அங்கு கேதுபகவான் அமர இருக்கிறார். வாழ்க்கையில் சில வருட கால்ங்களாக நிம்மதியைத் தேடிக்கொண்டிருக்கும். நீங்கள் வரும்காலத்திலும் சற்று அவஸ்தைப்பட நேரிடும். கேது பகவான் இவ்விடத்தில் அமர்வது உங்களுக்கு ஆன்மிக பலத்தைக் கூட்டித்தரும் காலமாகையால் மேற்படி பதினொரு இடங்களில் சொல்லப்பட்ட கிரகங்கள் கொடுக்கும் பலன்களை அறிந்து அதற்குத் தக்க பரிகாரங்களை தேடிக்கொண்டால் வாழ்க்கையில் சுபம் ஏற்படும். அச்சுவினியில் பிறந்தவர்கள் சரஸ்வதியை வணங்குவதும் பரணியில் பிறந்தவர்களும் கிருத்திகையில் பிறந்தவர்களும் முருகனை வழிபடுவதும் வாழ்க்கையில் சிறப்புச் சேர்க்கும்.

*அதிர்ஷ்ட எண்கள்:1, 3, 9*
*அதிர்ஷ்ட நிறம்: சிவப்பு, ரோஸ், வெளிர்நீலம்*
*அதிர்ஷ்டக் கல்: பவளம்*
*பரிகார யந்திரங்கள்: மேஷ இராசி யந்திரம், ஸ்ரீ சுப்பிரமணியர் யந்திரம்*

*(வளரும்...)*



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**நாளை**

வைகாசி-19 திங்கட்கிழமை 02.06.2014
திதி: பஞ்சமி முழுவதும்
நட்சத்திரம்: பூசம் பி.இ.04.12 வரை
சுபநேரம்: 11.52- 01.22வரை
இராகுகாலம்: 07.22-08.52 வரை



**மேடம்:** உங்கள் குடும்ப நலனுக்கு உதவுகிற முக்கியஸ்தர் ஒருவரைச் சந்திப்பீர்கள். அவரது ஆலோசனை, உங்கள் மனதுக்குப் புத்துணர்வைத் தரும். தொழில், வியாபார வளர்ச்சியில் புதிய பரிமாணம் ஏற்படும். தாராளமாகப் பணவரவு கிடைக்கும்.



**இடபம்:** உங்கள் பணிகளில் கூடுதல் திட்டமிடுவது அவசியம். சமூக சூழ்நிலை உங்களுக்குத் தொந்தரவு தருவதாக இருக்கும். தொழில்,வியாபாரம் வளர்ச்சி பெற பொறுப்புணர்வுடன் செயற்படுவீர்கள்.



**மிதுனம்:** சிறு செயலையும் நேர்த்தியுடன் செய்வீர்கள். உங்களின் தனித்திறமையை நண்பர், உறவினர் பாராட்டுவர். தொழில், வியாபாரத்தில் இருந்த போட்டி, தொந்தரவு குறையும். நீண்டநாள் காணாமல் தேடிய பொருள், கைக்குவந்து சேரும்.



**கடகம்:** சொந்த விடயங்களை அறிமுகம் இல்லாதவரிடம் சொல்ல வேண்டாம். புதிய முயற்சிகளை ஆரம்பிக்க, அனுகூல நிலையை உருவாக்குவது நல்லது. தொழிலில் உற்பத்தி, விற்பனை சுமாராக இருக்கும்.



**சிங்கம்:** உங்கள் மனதில் உற்சாகமும் செயல்களில் புதுமையும் நிறைந்திருக்கும். எதிர்பார்த்த காரியங்களில் அனுகூலமான தீர்வு கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் முன்னேற்றம் பெற தேவையான பணிபுரிவீர்கள்.



**கன்னி:** நீங்கள் தியாக மனதுடன் செயற்படுவீர்கள். புதியவர் நட்பு பாராட்டி தனக்கு தேவையான உதவியைக்கேட்டுப் பெறுவார். அதிக உழைப்பாலும், தெய்வ அருளாலும் தொழிலில் அபரிமிதமான முன்னேற்றம் பெறுவீர்கள்.



**துலாம்:** உங்களது பணித்திறமை கண்டு. சிலர் பொறாமைப்படலாம். எப்போதும் போல பண்பட்ட குணத்துடன் செயற்படுவீர்கள். தொழில், வியாபாரத்தில் வருகின்ற இடையூறைச் சரி செய்வதால், நன்மை கிட்டும்.



**விருச்சிகம்:** செயல்களில் கூடுதல் தற்காப்பு வேண்டும். தகுதிக்கு மீறிய வாக்குறுதி, எவருக்கும் வழங்கவேண்டாம். தொழிலில் முன்னேற்றம் பெற, சில மாற்றங்களைப் பின்பற்றவும். குடும்பத் தேவை ஓரளவு பூர்த்தியாகும்.



**தனுசு:** மனதில் கூடுதல் நம்பிக்கையுடன் செயற்படுவீர்கள். தொடங்குகிற செயல், அதிக வெற்றியைத் தரும். தொழில், வியாபாரத்தில் திட்டமிட்ட வளர்ச்சி இலக்கை அடைய, நண்பரிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும்.



**மகரம்:** மிகவும் சுறுசுறுப்பாகச் செயற்படுவீர்கள். பணித்திறன் வளர்ந்து, புதிய நன்மைகளைப் பெற்றுத் தரும். தொழில், வியாபாரத்தில் நிலுவைப் பணியை நிறைவேற்றுவீர்கள். பணப்பரிவர்த்தனை முன்னேற்றம் தரும்.



**கும்பம்:** சிலர் உங்களைப் பரிகாசம் செய்கிற எண்ணத்துடன் பேசுவர். பொறுமைக் குணத்துடன் விலகிச் சென்றால், வீண் சிரமத்தைத் தவிர்க்கலாம். தொழில்.வியாபாரம் சார்ந்த வகையில், கூடுதல் பணிச்சுமை உருவாகும்.



**மீனம்:** நீங்கள் சங்கடமான சூழ்நிலையை, எதிர்கொள்ள நேரிடலாம். கூடுதல் பொறுமையுடன் செயற்படுவது அவசியமாகும். தொழில்,வியாபாரத்தில் திட்டமிட்ட வளர்ச்சி பெறத் தேவையான முறையில் பணிபுரிவீர்கள்.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | | 8 | | | | | | 3 |
| | | 3 | 1 | 9 | | 7 | | |
| | 4 | | 6 | | 5 | 9 | 8 | |
| 8 | | | 2 | | 3 | | 5 | |
| | | | 9 | 4 | 7 | | | |
| | 7 | | 5 | | 1 | | | 9 |
| | 5 | 7 | 3 | | 6 | | 4 | |
| | | 1 | | 5 | 9 | 3 | | |
| 3 | | | | | | 2 | | 5 |

## நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 5 | 1 | 6 | 7 | 3 | 9 | 2 | 8 | 4 |
| 3 | 2 | 8 | 4 | 1 | 5 | 6 | 7 | 9 |
| 7 | 9 | 4 | 8 | 6 | 2 | 3 | 5 | 1 |
| 4 | 8 | 7 | 9 | 2 | 1 | 5 | 6 | 3 |
| 1 | 6 | 5 | 3 | 4 | 7 | 9 | 2 | 8 |
| 9 | 3 | 2 | 6 | 5 | 8 | 1 | 4 | 7 |
| 6 | 7 | 9 | 5 | 8 | 3 | 4 | 1 | 2 |
| 2 | 5 | 3 | 1 | 7 | 4 | 8 | 9 | 6 |
| 8 | 4 | 1 | 2 | 9 | 6 | 7 | 3 | 5 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப் படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவன நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

கண்ணகை அம்மன் துணை

# கோப்பாய் திருவருள்மிகு பலானை கண்ணகை அம்மன் ஆலய புனராவர்த்தன அஷ்டபந்தன ஸம்பு ரோஷன நவகுண்டபக்ஷ

# மஹா கும்பாபிஷேக பெருவிழா சிறப்பு மலர்



## இன்று (01.06.2014) ஞாயிற்றுக்கிழமை

## கும்பாபிஷேகம் காலை 8.15 - 9.10 வரையுள்ள சுபவேளையில்



### ஆசிச் செய்தி

ஆயும் அறிவும் கடந்த அரனுக்கு தாயும் மகளும் தாரமுமாக விளங்குபவள் அம்பிகை. இவள் கடல் சூழிலங்கை கயபாகு வேந்தன் காலந்தொடக்கம் கண்டி மாநகரிலும், கதிர்காமத்திலும் ஈழ நாட்டின் பல்வேறு இடங்களிலும், கோயில் கொண்டிருக்கும் கண்ணகை அம்மன் கோவை மாநகரிலும் கூழா மரத்தடியிலிருந்தும் அருள் பாலிக்கின்றாள். கோவையம்பதிக்கே அழகாக இக் கண்ணகை அம்மன் கோயில் மிளிர்கின்றது.

கோவை மக்களுக்கு மட்டுமன்றி சூழவுள்ள ஊர்களில் இருந்து வந்து தரிசிப்பவர்க்கெல்லாம் நல் வரங்கள் தந்துதவும் தேவியாக விளங்கி வருகிறாள். இன்னல்களுக்கிடையே நிகழ்ந்துள்ள இவ்வாலய முயற்சிகள் போற்றுதற்குரியன. வேதனையுறும் மக்கள் கண்ணகை அம்மனுடைய அருள் பெற்றுய்ய இச் சந்தர்ப்பத்தில் இம் மகா கும்பாபிஷேகம் நிகழ்வது சாலப் பொருத்தமுடையதாகும். பரந்த அடிப்படையில் நமது சமய நெறிகள் மக்கள் மனதில் வேரூன்றி வளரவும் இறை நம்பிக்கையுடன் சமுதாயம் செயற்பட்டு மேலோங்கவும் இம்மகா கும்பாபிஷேக விழா வித்திட வேண்டும். மேலும் கண்ணகையின் திருக்குடமுழுக்கு திருவருட் பொலிவோடு சிறப்புற நிகழ தேவியின் பேரருளை வேண்டி நிற்கிறோம்.

சர்வே ஜெனாகா சுகினோ பவந்து
அம்பிகையை சரண் அடைந்தால் அதி வரம் பெறலாம்.

தேவஸ்தான ஸ்தானிக சிவாச்சாரியார்,
சிவஸ்ரீ.பரம.சண்முகராஜ சிவாச்சாரியார்,
கோவையாதீனம்.



### வாழ்த்துச் செய்தி

ஈழத்தின் வடபால் யாழ்ப்பாணம் கோவையம்பதியில் வீற்றிருந்து, அருள் பாலித்து, சரித்திரப் பிரசித்தி பெற்று விளங்குகின்ற கோப்பாய் கண்ணகை அம்மனுக்கு இன்று மஹா கும்பாபிஷேக பெரும்சாந்தி நிகழ்வு நடைபெறுவது மக்கள் அனைவருக்கும் வாழ்வின் ஒளி ஏற்றும் திருநாளாகும்.

அந்த வகையில் வரலாற்றுப் பெருமை கொண்ட கண்ணகையம்பாளின் மஹாகும்பாபிஷேகப் பெருவிழா கடந்த இருபத்தெட்டு (28) ஆண்டுகளின் பின் நடைபெறுவது கண்ணகையம்பாளின் திருவருளே ஆகும்.

இப்பெரும் புண்ணிய செயலுக்கு பொருளுதவி, பண உதவி, சரீர உதவி மற்றும் பல்வேறு உதவிகள் வழங்கிய அனைவரும் கண்ணகை அம்மனின் திருவருள் கிடைக்கப் பெறும் பாக்கியசாலிகளாவர்.

இந்த மஹாகும்பாபிஷேக தின நிகழ்வு சகல ஷேமங்களுடன் கூடிய வளமான நல்வாழ்வை அருளட்டும் என்று கண்ணகையம்மன் பாதம் பணிந்து வாழ்த்துகின்றோம்.

இன்றைய மஹாகும்பாபிஷேக நிகழ்வானது உலகின் எல்லா உயிர்களுக்கும் நோய், மனக்குறை, பணக்குறை, கல்விக்குறை, பொருட்குறை, ஆயுட்குறை, இன்பக் குறைகளெல்லாம் நீக்கி நல்வாழ்வை வாழ கண்ணகையம்பாள் அருள்பாலிப்பாராக.

இக்கும்பாபிஷேக நிகழ்வில் கலந்து கொள்கின்ற கலந்து கொள்ளாத எல்லா உயிர்களுக்கும் இடர் களைந்து, தளர்வுற்ற நிலை களைந்து, நிதிக்குறை களைந்து, நீதிக்குறை களைந்து, மேன்மை வேண்டி அருள் பாலிக்கும் இந்நாளை எல்லோரும் சிறப்பாகப் போற்று வோமாக.

"மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

இ.தெய்வேந்திரம்,
தலைவர், பரிபாலன சபை.

(39627)(10.6.3)

ஆலய பரிபாலன சபையினரும், பிரதேச மக்களும்



# நேச்சர் சீக்கிரட்ஸுக்கு தேசிய பசுமை விருது

நேச்சர் பியூட்டி கிரியேசன்ஸ் நிறுவனத்துக்குரிய விருது ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் நேச்சர் பியூட்டி கிரியேசன்ஸ் நிறுவனத் தலைவர் மற்றும் முகாமைத்துவப் பணிப்பாளர் சமந்த குமாரசிங்கவுக்கு வழங்கப்பட்டது.

அண்மையில் இடம்பெற்ற தேசிய பசுமை விருது வழங்கல் நிகழ்வில் இலங்கையில் நம்பர் வன் இயற்கை மூலிகை சார்ந்த அழகுசாதன வியாபார நாமமான நேச்சர் சீக்கிரட்ஸ் உற்பத்தி செய்து விற்பனை செய்யும் நேச்சர் பியூட்டி கிரியேசன்ஸ் நிறுவனம் மதிப்பு மிக்க தேசிய பசுமை தங்க விருதினை வென்றுள்ளது. இந்நிறுவனம் தேசிய பசுமை விருதினை தொடர்ச்சியாக மூன்று ஆண்டுகள் வென்றுள்ளமை என்பது குறிப்பிடத்தக்கது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் தலைமையில் தேசிய பசுமை விருது வழங்கல் விழா, கொழும்பு பண்டாரநாயக ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் கோலாகலமாக நடைபெற்றது. அங்கு நேச்சர் பியூட்டி கிரியேசன்ஸ் நிறுவனத்துக்குரிய விருது ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் நேச்சர் பியூட்டி கிரியேசன்ஸ் நிறுவனத் தலைவர் மற்றும் முகாமைத்துவப் பணிப்பாளர் சமந்த குமாரசிங்கவுக்கு வழங்கப்பட்டது.

இயற்கையின் உன்னத கொடையாகிய சுற்றுச் சூழலுக்குப் பாதிப்பில்லாத வகையில் தமது நடவடிக்கைகளை மேற்கொள்ளும் அரச மற்றும் தனியார் துறை சார்ந்த நிறுவனங்களை ஊக்கவிப்பதற்காக சுற்றுச்சூழல் அமைச்சின் கீழ் செயற்படும் மத்திய சுற்றாடல் அதிகார சபையால் ஆண்டு தோறும் தேசிய பசுமை விருது வழங்கல் விழா நடத்தப்படுகின்றது.

எதிர்கால சந்ததிக்காக இயற்கையை, சுற்றுச் சூழலை பாதுகாக்கும் நோக்கத்தை முன் நிறுத்தி தனது எல்லா நடவடிக்கைகளையும் மிக நேர்த்தியாக முன்னெடுத்துச் செல்லும் காரணத்திற்காக, இவ்விருதிற்காக விண்ணப்பித்த நூற்றுக்கணக்கான நிறுவனங்களுள் தேசிய பசுமை தங்க விருதுக்காக நேச்சர் சீக்க்ரட்ஸ் நிறுவனம் தெரிவு செய்யப்பட்டது.

நேச்சர் சீக்கிரட்ஸ் நிறுவனமானது சுற்றாடலுக்குப் பாதிப்பேற்படாத வகையில் உற்பத்தி நடவடிக்கைகளில் ஈடுபடல், இயற்கை வளங்களையும், எரிபொருளையும் சிக்கனமாகப் பயன்படுத்துதல்.


சூழலுக்குப் பாதிப்பு ஏற்படாத வகையில் தொழிற்சாலைக் கழிவுகளை அகற்றுதல், மூலிகைத்தோட்டமொன்றை உருவாக்கி பெருமளவு அரிய வகை மூலிகைச் செடிகளை வளர்த்துப் பாதுகாத்தல், சூழலைப் பாதுகாத்தல் தொடர்பில் பாடசாலைச் சிறுவர்கள் மற்றும் நமது சமூகத்திற்கு அறிவூட்டும் நிகழ்ச்சித் திட்டங்களில் ஈடுபட்டு வருகின்றது.

தேசிய பசுமை விருதினை தொடர்ச்சியாக மூன்று தடவைகள் வென்றமை பற்றி நேச்சர் சீக்கிரட்ஸ் நிறுவனத் தலைவர் மற்றும் முகாமைத்துவப் பணிப்பாளர் சமந்த குமாரசிங்க அவர்கள் கருத்துத் தெரிவிக்கையில் 'இயற்கையைப் பாதுகாக்கப் பாடுபடும் நம் நாட்டு நிறுவனம் என்ற வகையில், இதற்கு முன் நாம் பல விருதுகளை வென்றிருந்தாலும் இந்த தேசிய பசுமை தங்க விருதானது எமக்குக் கிடைத்த மிகப் பெரிய வெற்றியாகவே நாம் கருதுகின்றோம்' எனத் தெரிவித்தார்.



மக்கள் வங்கியினால் ஆரம்பிக்கப்பட்ட மாணவர்களிடையே சேமிப்பை ஊக்குவிக்கும் 'எங்களினாலும் சேமிக்க முடியும்' என்னும் செயல் திட்டம் சுன்னாகம் மக்கள் வங்கியினால் ஏழாலை மேற்கு சைவ சன்மார்க்க வித்தியாலயத்தில் அண்மையில் பாடசாலை அதிபர் திருமதி சிறிதரன் பிரதாவினால் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இந்த நிகழ்வில் சுன்னாகம் மக்கள் வங்கியின் முகாமையாளர் பரஞ்சோதி பார்த்தீபன் மற்றும் வங்கி ஊழியர்கள், பொது மக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (த-86)

# வடக்கு மாணவருக்கு பிகாஸ் கம்பஸ் வழங்கும் பெறுமதியான கல்வி வாய்ப்பு



உயர் கல்வித்துறையானது உலகளாவிய ரீதியில் பாரிய மாற்றங்களைக் கண்டு வரும் நிலையில் அதற்கு ஈடுகொடுக்கும் வகையில் இலங்கையின் கல்வித்துறையில் மாற்றங்கள் ஏற்படாமை இந்நாட்டின் தூரநோக்குடைய மக்களை கவலைக்கு உட்படுத்துகின்ற விடயமாகும். இதற்கு பல்வேறுபட்ட கலாசார, பாரம்பரிய, அரசியல் தலையீடுகள் மற்றும் தூர நோக்கற்ற கல்விச் சீர்திருத்தங்கள் காரணிகளாக அமைகின்றன.

வடமாகாணத்தில் உயர்கல்வியில் பாரிய எதிர்பார்ப்புக்கள் ஏற்பட்டுள்ளமை இன்றைய காலத்தில் அவதானமாக பார்க்கப்பட வேண்டிய ஒன்றாகும். இம்மக்களின் எதிர்கால மூலதனமாக உயர்கல்வி அமைந்திருந்தமையும் இதுவே மூலதனமாக எதிர்காலத்தில் அமையும் என்பதையும் இம்மாகாண மக்கள் அறிந்தவர்களே. இருந்தபோதிலும் அரச உயர்கல்வி நிறுவனங்களில் சந்தர்ப்பம் கிடைக்காதவர்களுக்கோ அல்லது இந்நிறுவனங்களை புறக்கணிக்கின்றவர்களுக்கோ மாற்றீடாக தனியார் கல்வி நிறுவனங்கள் நிறுவப்படாமையும், நிறுவப்பட்ட சில நிறுவனங்களில் மாணவர்களுக்கு நம்பிக்கை இல்லாமையும் இருந்த காலகட்டத்தில் BCAS தனது நவீன கிளையை யாழ்ப்பாணத்தில் நிறுவியமை ஒரு அதிர்ஷ்டத்திலும் அதிர்ஷ்டமாகும்.

கடந்த ஒரு வருடமாக தனது உயர்கல்விச்சேவையை யாழ்ப்பாணத்தில் வழங்கி வரும் பிகாஸ் கம்பஸ் (BCAS Campus ) Quantity Surveying (QS), Civil Engineering, Business Management , Biomedical Science , Law போன்ற பட்டப்படிப்புகளின் முதல் இரண்டு வருடங்களை இங்கு வெற்றிகரமாக நடத்தி வருவதுடன் அதிகமான மாணவர்கள் இப்பாடநெறிகளில் இணைந்திருக்கின்றமை BCAS மீது மாணவர்களும், பெற்றோர்களும் கொண்டுள்ள நன்மதிப்பை எடுத்துக் காட்டுகின்றது.

இது பிகாஸின் யாழ் வளாகத்தின் நம்பிக்கையை வலுவடையச் செய்கிறது.

கொழும்பு, கண்டி, குருநாகல், மட்டக்களப்பு மற்றும் கட்டார் நாட்டில் என தனது பரந்த வலையமைப்பைக் கொண்டுள்ள பிகாஸ் கம்பஸ், வடமாகாண மாணவர்களின் நன்மை கருதி பிகாஸ் யாழ். வளாகத்தில் மேலதிக சலுகைகளையும் ஏற்பாடு செய்துள்ளமை இம்மாகாண மாணவர்கள் மீது பிகாஸ் கொண்டுள்ள பற்றின் வெளிப்பாடாகும்.

வெறும் பட்டதாரிகளையோ, வேலையற்ற பட்டதாரிகளையோ உருவாக்குவதை முழுமையாகத் தவிர்த்து வரும் பிகாஸ், எதிர்கால தொழில்வாய்ப்புகளை கருத்திற்கொண்டு தனது பட்டப்படிப்பு பாடவிதானங்களை உருவாக்கியுள்ளமை ஒரு சிறப்பம்சமாகும். பிகாஸில் இருந்து வெளியேறும் உயர் தேசிய டிப்ளோமா மற்றும் பட்டப்படிப்பை பூர்த்தி செய்த மாணவர்கள், சர்வதேச ரீதியில் ஏற்படுகின்ற சவால்களுக்கு முகம் கொடுக்கும் விதத்தில் தயார்படுத்தப்பட்டிருத்தல் அவர்களது எதிர்கால உள்நாட்டு அல்லது சர்வதேச தொழிற்துறைக்கு ஓர் உறுதுணையாக இருக்கும் என்பதை பிகாஸில் இக்கற்கை நெறியை நிறைவு செய்து உள்நாட்டிலும், சர்வதேசத்திலும் உயர் வருவாய் தரும் தொழில் துறைகளில் ஈடுபட்டுள்ளவர்கள் எடுத்துக்காட்டுகின்றனர். (த)

# சிற்றி மெடிக்கல்ஸ் கிளை திறப்பு விழா

யாழ்ப்பாணம், ஜூன் 1

சிற்றி மெடிக்கல்ஸ் நிறுவனத்தின் புதிய கிளை திறப்பு விழா நாளை திங்கட்கிழமை காலை 9.15 மணிமுதல் முற்பகல் 11 மணி வரையான சுப நேரத்தில் இல.558A, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் நடைபெறவுள்ளது.

இதில் நலன் விரும்பிகள், வாடிக்கையாளர்கள், பங்காளர்கள் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (த)



இலங்கை வங்கியின் கோப்பாய்க் கிளையின் திறப்பு விழா அண்மையில் இடம்பெற்றது. புதிய கட்டடத்தை இலங்கை வங்கியின் வடபிராந்திய உதவிப் பொது முகாமையாளர் நந்தகுமார் நாடா வெட்டித் திறந்து வைத்தார். (த-5)

**வீடு வாடகைக்குண்டு**

ஸ்ரேசன் றோட், கொக்குவிலில் சகல வசதிகளுடன் கூடிய மேல்மாடி வீடு வாடகைக்குண்டு.

நிறுவனங்கள் விரும்பத்தக்கது.

தொடர்பு: ராகுலன் 077 859 0969

**BROWN BERETS SECURITY வேலை வாய்ப்பு**

கொழும்பிலுள்ள எமது பாதுகாப்புச் சேவை நிறுவனத்திற்கு V/O, OIC, SSO & JSO உடன் தேவை. சிங்களம்/ஆங்கில அறிவுள்ளோருக்கு முன்னுரிமை. வயது 18-60. சம்பளம் 18000-30000/= வரை. தங்குமிடம் இலவசம். சப்பாடு குறைந்த விலையில். 104 1/1, WELIKADAWATTA ROAD, RAJAGIRIYA.

0112 871 280/0712 446 926 (48605) (7.6.3)

**கடை வாடகைக்குண்டு**

இல.275 மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணத்தில் கீழ்தளம் 900 சதுர அடியும், இரண்டாம் மாடி 1800 சதுர அடியும் கொண்ட வியாபாரநிலையம் வாடகைக்குண்டு.

வாகனத்தரிப்பிட வசதியும் உண்டு.

தொடர்பு: 071 278 9227

**மணமகள் தேவை**

யாழ்.இந்து கௌரவ குடும்பம் 1974ஆம் ஆண்டு கார்த்திகை 2ஆம் பாதம் 5இல் செவ்வாய் 45 பாவமுடைய சுவிஸில் நிரந்தர வதிவிட உரிமை (PR) உள்ள மணமகனுக்கு அழகிய மணமகள் (36 வயதுக்குட்பட்ட) தேவை. (48562) (12.1.6)

தொடர்புகளுக்கு: 077 273 0627

**காணியுடன் கூடிய வீடு விற்பனைக்கு**

யாழ்ப்பாணம், நீராவியடி, பிறவுண் வீதிக்கு அருகில் (4பரப்பு) காணியும்,வீடும் விற்பனைக்குண்டு. தரகர் தேவையில்லை. 01.06.2014 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்குப் பின் பார்வையிடலாம்.

தொடர்பு: 071 616 0296 (48630) (45.6.3)

**ISUZU ELF 250 (10½ Feet) விற்பனைக்கு**

WP-LA xxxx Model - NKR
Engine - 4HG1
Year-2000, Registered-2005
Double Wheel & Battery
Top & Front Spring, A/C, Power Window
2nd Owner, Price 21.9m (Negotiable)

தொடர்பு: 077 347 4610 (48596) (7.6.3)

**விற்பனையாளர்கள் தேவை**

புடைவை வியாபாரத்தில் அனுபவமுள்ளவர்கள், பழகவிரும்புபவர்கள் (ஆண்) தேவை.

தொடர்பு:
த.குமாரசாமி ரெக்ஸ்ரைலஸ்,
44,42 பெரியகடைவீதி,
யாழ்ப்பாணம். (9113914) (12.3.6)

**நாய்க்குட்டி விற்பனைக்கு**

6 மாதம் நிரம்பிய PARVO, DHL, RABIES போடப்பட்ட BROWN COLOUR DASCHUND சோடியாக விற்பனைக்குண்டு. 1-2 வயதிற்குட்பட்ட ROTTWEILER CROSS பண்ணுவதற்குத் தேவை.

T.P. 077 545 6126
Champion Lane, Kokuvil. (48606) (7.6.3)

**காணிகள் விற்பனைக்கு**

கொடிகாமம் புகையிரத நிலையத்துக்கும் இராமாவில் கந்தசாமிகோயிலுக்கும் இடையில் A9 வீதியில் காணிகள் உடன் விற்பனைக்குண்டு.

தொடர்பு: 077 460 5329 (48613) (45.6.3)

**வேலை வாய்ப்பு**

Sun Rish விளம்பர நிறுவனத்தின் புதுக்குடியிருப்பு கிளைக்கு மேற்பார்வையாளர், உதவி முகாமையாளர், முகாமையாளர் போன்ற பதவிகளுக்கான வெற்றிடங்கள் O/L, A/L கல்வி தகைமையுடன் ஆர்வமுள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம்.

தொடர்பு: 077 623 5688 (48569) (7.6.3)

இலங்கைத் திருநாட்டில், புற்றுநோய்களைத் தடுப்பதற்கும் கட்டுப்படுத்துவதற்குமான தேசியக் கொள்கை மற்றும் தந்திரோபாய உருவரைச் சட்ட வரைவானது, பொது மக்களின் எண்ணக்கருத்துக்களையும் திருத்தங்களையும் பெற்றுக் கொள்வதை நோக்கமாகக் கொண்டு பிரசுரிக்கப்படுகின்றது. உங்களுடைய அவதானங்களையும் எண்ணக் கருத்துக்களையும் 15.06.2014ஆம் திகதிக்கு முன்னர், **பணிப்பாளர், தேசிய புற்றுநோய்க் கட்டுப்பாட்டு நிகழ்ச்சித் திட்டம், 555/5, பொதுச் சுகாதாரத் தொகுதி, எல்விற்றிக்கல மாவத்தை, நரகேன்பிற்றிய, கொழும்பு 05** என்ற விலாசத்திற்கு பதிவுத் தபாலில் அனுப்பும்படி தாழ்மையாக வேண்டிக்கொள்ளப் படுகின்றீர்கள்.

# புற்றுநோய்களைத் தடுப்பதற்கும் கட்டுப்படுத்துவதற்குமான தேசியக் கொள்கை மற்றும் தந்திரோபாய உருவரைச் சட்டகம் - இலங்கை.

புற்றுநோயானது, ஒரு முக்கிய உலக சுகாதாரப் பிரச்சினையாகவும், அதிகரித்து வரும் புற்றுநோயின் எண்ணிக்கையானது, வளர்ந்த மற்றும் வளரும் நாடுகளில் முக்கிய பிரச்சினையாக அடையாளம் காணப்பட்டுள்ளது. "உலக சுகாதார அறிக்கை 2001" உள்ளபடி, ஆண்டுதோறும், 10 மில்லியன் புதிய புற்றுநோயாளிகள் உலகம் முழுவதும் கண்டுபிடிக்கப்பட்டுப் பதிவு செய்யப்படுகின்றனர். இந்த வேகமாக விரிவடைந்து வரும் புற்றுநோய் அதிகரிப்பிற்கு, மாறுபாடடைந்துவரும் குடிசனப் பரம்பலினால், உயிர் வாழும் முதியவர்கள் விகிதம் அதிகரித்து வருவதும், உயர் கலோரிப் பெறுமானமுள்ள உணவு வகைகளை உண்ணும் பழக்கம், உடல் உழைப்பு செயற்பாடு இல்லாமை, உடற்பயிற்சியின்மை, மேற்கத்திய வாழ்க்கைப் பாணியை ஒத்த, உடல் உழைப்பு தேவைப்படாத வாழ்க்கை முறைகளைப் பின்பற்றும் மக்கள் தொகை அதிகரிப்பதும், சமூக, பொருளாதார மாற்றங்கள் காரணமாக அதிகமாக உடல் எடை மற்றும் உடற்பருமன் போன்ற காரணங்கள் வழிவகுத்தன. அத்துடன் நடந்துவரும் உலகமயமாக்கலின் விளைவாக, புகையிலைப் பாவனை மற்றும் மது அருந்துதல் அதிகரித்தல், கொழுப்பு உணவை அதிகளவில் உள்ளெடுத்தல் என்பனவும் அதிகரித்துள்ளன. மேற்குறிப்பிட்ட காரணிகள் மற்றைய தொற்றா நோய்களின் அதிகரிப்பிற்கும் பொதுவானதாகும்……..

உலகளாவிய ரீதியில், இறப்பை ஏற்படுத்தும் காரணிகளில் புற்றுநோய் ஒரு முக்கியமானதாக உள்ளது. 2008 ஆம் ஆண்டில், 7.6 மில்லியன் இறப்புகள் (அண்ணளவாக மொத்த இறப்புக்களில் 13 வீதம் ) ஏற்படக் காரணமாக அமைந்துள்ளது (Ferlay et al., 2011). 2008 ஆம் ஆண்டில், புற்றுநோயினால் ஏற்பட்ட அனைத்து மரணங்களில், 72 விதமான மரணங்கள், குறைந்த மற்றும் நடுத்தர வருமானம் உள்ள நாடுகளிலேயே ( LMICs ) ஏற்பட்டுள்ளது……….

உத்தேசிக்கப்பட்ட தேசிய புற்றுநோய்க் கொள்கையானது, இலங்கையில் தடுக்கக்கூடிய புற்றுநோய்களை ஏற்படுத்துகின்ற முன்னணிக் காரணங்களை எடுத்து விளம்புகின்ற இதேவேளை, தகுந்த ஆதாரங்களின் அடிப்படையிலான மூலோபாய உத்திகளை வலியுறுத்துவதனூடாக இலங்கையிலே ஏற்படுகின்ற புற்றுநோய்களின் தாக்கத்தையும் குறைக்கலாம் என்பதனையும் சுட்டிக்காட்டுகின்றது. இதன் நோக்கமானது, பொதுவான ஏற்படக்கூடிய புற்றுநோய்களின் அறிகுறிகள், குணங்குறிகள் பற்றிய அறிவை, விழிப்புணர்வை, பொதுமக்கள், முதன்மை நிலை மருத்துவப் பணியாளர்கள் போன்றோரிடம் அதிகரிப்பதன் மூலமாக, மிக ஆரம்ப நிலையிலேயே புற்றுநோய்கள் கண்டுபிடிக்கப்படலாம் என்பதையும் வலியுறுத்துகின்றது. அத்தோடு, நாடு முழுவதும், சகல புற்றுநோயாளிகளும் ஆவணம் சார்ந்த பொறுப்புக் கூறக்கூடிய முறையிலே சிகிச்சையளித்துப் பராமரிக்கப்படுவதன் மூலம், நாடு பூராகவும் வழங்கப்படுகின்ற புற்றுநோய்களின் சிகிச்சைகளின் தரத்தைக் கூட்டலாம் என்பதையும் கூறுகின்றது. மற்றைய தேசிய நிகழ்ச்சித் திட்டங்களும், பிற சேவையை வழங்குகின்ற சேவை நிறுவனங்களும் அக்கூட்டமைப்பில், தேசிய மூலோபாயக் கட்டமைப்பிலுள்ள வலையமைப்பானது புற்றுநோயைக் கட்டுப்படுத்தும் பொறிமுறையை மேலும் சாத்தியமாக்கலாம்.

இலங்கையின் தேசிய சுகாதார கொள்கை ( 1992 ), "மஹிந்த சிந்தனை" ( 2005 ), "மஹிந்த சிந்தனை - எதிர்கால நோக்கு" ( 2010 ), சுகாதார மூலோபாயத் திட்டம் (2007-2016) ஆகியன, புற்றுநோயைத் தடுப்பதும் கட்டுப்படுத்துவதுமே, தொற்றா நோய்களின் கட்டுப்பாடு மற்றும் தடுப்பதில் மிகவும் பரந்த கருத்துப் பகுதியாக விளங்குவதைச் சுட்டிக்காட்டுகின்றது.

தேசிய சுகாதார மேம்பாட்டுக் கொள்கை மற்றும் புற்றுநோய்த் தடுப்பு மற்றும் தொற்றா நோய்களின் தடுப்பு மற்றும் கட்டுப்படுத்தலுக்கான தேசியக் கொள்கை, தொற்றா நோய்களை வராமல்த்தடுக்கும் மூலோபாயக் கட்டமைப்பே, பெரும்பாலான தொற்றா நோய்களின் கட்டுப்பாட்டு உபாயமாக உள்ளதையும் சுட்டிக்காட்டுகின்றது.

இலங்கைச் சுகாதார அமைச்சகத்தின் செயலாளர் தலைமையிலான, புற்றுநோய் தடுப்பு மற்றும் கட்டுப்படுத்துவதற்குமான தேசிய ஆலோசனைக் குழுவானது, இந்தக் கொள்கை ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள இலக்குகளை அடைய, தேசிய புற்றுநோய்க் கட்டுப்பாட்டு நிகழ்ச்சித் திட்டத்தின் நடவடிக்கைகளை முன்னெடுப்பதோடு பிரதான செலுத்தியாகவும் உள்ளது. இலங்கை சுகாதார அமைச்சின், தேசிய புற்றுநோய்க் கட்டுப்பாட்டு நிகழ்ச்சித் திட்டம், தேசிய அளவில் புற்றுநோய் சம்பந்தமான தடுப்பு மற்றும் கட்டுப்பாட்டு உத்திகளையும் நடவடிக்கைகளையும் ஒருங்கிணைக்கிறது.

**4. வழிகாட்டும் கோட்பாடுகள் -**

- தேகாரோக்கியமாக வாழ்வதற்குரிய உரிமை.
- சமநிலை வாய்ப்புக்களும் சமூக நீதியும்.
- சமுதாயத்திற்கும் தனிநபர்களுக்கும், நிதிநிலையில் தாங்கக்கூடிய, நிலையான, சமவாய்ப்புள்ள அணுகுமுறை.
- சான்றுகள், தரவுகள் அடிப்படையிலான குறுக்கீடுகள், முதன்மை, இரண்டாம் மற்றும் மூன்றாம் நிலை நோய்த் தடுப்பு நடவடிக்கைகளுக்கு சமமான முக்கியத்துவம் கொடுத்து விரிவான ஒன்றிணைந்த பாராமரிப்பை வழங்குகின்றன.
- கலாசார ரீதியான சமூகம் சார்ந்த உணர்வுபூர்வமான முக்கிய வியூகங்கள்.
- சமுதாய மற்றும் குடும்பங்களுக்குரிய அதிகாரம், உரிமை மற்றும் பங்குபற்றல் ஆகியவற்றை அங்கீகரித்தல்.
- தனிநபர் மற்றும் சமுதாய அளவிலான நெறிமுறைசார் அம்சங்களில் தலையீடுகளைப் பரிசீலனை செய்தல்.
- தனிநபருக்கு சமுதாய பராமரிப்பு வழங்குவதில் ஈடுபட்டுள்ள, பராமரிப்பு அளிப்பவர்களுக்கு மேலும் உந்துதல் அளித்தல், அதிகாரமளித்தலுடன் பதிலளிக்கும் தன்மை.
- பல்துறை சார்ந்த பல்வேறு பிரிவுகளை இணைத்த அணுகுமுறைகள்.
- கட்டம் கட்டமான அணுகுமுறை மூலம் புதிய உத்திகளை மேற்கொள்ளக்கூடிய வளைந்து கொடுக்கக்கூடிய நெகிழ்வுத்தன்மை.
- ஏற்கனவே உள்ள சுகாதார அமைப்புகளை ஒருங்கிணைத்து சுகாதார சேவைக்குரிய வளங்களையும் உள்கட்டமைப்புக்களையும் பலப்படுத்தல்.
- அனைத்து பங்குதாரர்களையும் புற்றுநோய் கட்டுப்பாடு மற்றும் தடுப்பு நடவடிக்கைகளில் ஈடுபடல்.
- பொருத்தமான பொதுமக்கள் மற்றும் தனியார் கூட்டிணைப்பை ஊக்குவித்தல்.
- தற்போதுள்ள அமுலிலுள்ள தேசிய சுகாதார கொள்கை அல்லது அது தொடர்பான அரசாங்கத்தின் பொருளாதார மற்றும் அபிவிருத்தி கொள்கைகளின் நிலைத்தன்மையைப் பேணல்.

**5. தொலை நோக்குப் பார்வை -**

"தடுக்கக்கூடிய புற்றுநோய்களில், குறைந்தபட்ச நோய்த்தாக்க நிகழ்தகவைக் கொண்டும், உயர் உயிர் பிழைப்பு விகத்துடன் புற்றுநோயினால் ஏற்படும் மிகக் குறைந்த பாதிப்பு மற்றும் குறைந்த விளைவுகளோடு கூடிய உயர் வாழ்க்கைத் தரத்தோடு கூடியதாக எமது தாய்நாட்டை உருவாக்குவதே நோக்கம்".

**6. பணிக்கூற்று -**

"புற்றுநோய்களை உருவாக்கக்கூடிய காரணிகளைக் கட்டுப்படுத்துவதனாலும் அவற்றிற்கு எதிராகப் போரிடுவதன் மூலமும், புற்றுநோயை மிக ஆரம்பத்திலேயே கண்டறிவதனால் அதற்கு முழுமையான, அணுகக்கூடிய சிகிச்சைப் பராமரிப்பை வழங்குவதன்மூலம் புற்றுநோயைப் பூரணமாகக் குணமாக்கவும் நோயாளியின் வாழ்வின் இறுதிக் காலம் வரை ஆதாரம் சார்ந்த பராமரிப்பு அணுகுமுறைமூலம் புற்றுநோயின் தாக்கத்தைக் கட்டுப்படுத்தலாம்".

**7. கொள்கை இலக்குகள் -**

1. மேம்படுத்தப்பட்ட பொது விழிப்புணர்வு மற்றும் மூல அபத்து காரணிகள், ஏது காரணிகள் பற்றிய விளக்கங்களை எடுத்துரைப்பதன்மூலம் பொதுமக்களின் விழிப்புணர்வை அதிகரிப்பதோடு பொதுமக்களின் பங்களிப்பை உறுதி செய்வதன் மூலம் புற்றுநோய் ஏற்படுவதற்குரிய முதன்மைத் தடுப்பு முறையை உறுதி செய்தல்.
2. பொது மக்கள் விழிப்புணர்வை மேம்படுத்துவன்மூலமும் சம்பந்தப்பட்ட சேவை வழங்குநர்கள், குறிப்பாக முதன்மை பராமரிப்பு வழங்குநர்கள் மூலமும் புற்றுநோயை ஆரம்பத்திலேயே கண்டறியும் முறைமைகளை முன்னிலைப்படுத்தல். இதற்காக எந்த அறிகுறியும் இல்லாமல் மக்கள் குழுமத்தை, சந்தர்ப்பவாத திரையிடல் மூலம் கண்டறியவும், மருத்துவ சந்தேகத்திற்கிடமான முறையில் குணங்குறிகளைக் கொண்டிருப்பின் அவர்களை மேற்கொண்டு மருத்துவ ஆய்வுக்குப் பரிந்துரை செய்வதன் மூலம் நோயின் ஆரம்ப இனங்காணலை உறுதி செய்தல்.
3. எல்லாப் புற்றுநோயாளர்களுக்கும் நோயைக் கண்டறிதல், நோய் நிர்ணயம் செய்தல், சிகிச்சையளித்தல் வசதிகள் போன்றவற்றில், நீடித்த சம அணுகல் வாய்ப்பை உறுதி செய்தல்.
4. புற்றுநோய்ப் புனர்வாழ்வு, நோய் மீண்டு உயிர்வாழும் புற்று நோயாளிகளுக்கு நோய்த் தணிப்பு, நோய்ப் புனர்வாழ்வு கவனிப்பு வசதிகளை அனைத்து மட்டங்களிலும், புற்றுநோய் நோயாளர்களுக்கும் அவர்களுக்கு கவனிப்பு அளிப்பவர்களுக்கும் உறுதி செய்தல்.
5. புற்றுநோய் மற்றும் நோய் மீண்டோர் பற்றிய தகவல் புள்ளிவிபரவியல் கண்காணிப்பு அமைப்புக்களைப் பலப்படுத்துவதன்மூலம் புற்றுநோய்க் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளின் வெளிப்பாடுகளை மதிப்பிடவும் முன்னேற்றம் பற்றியும் கண்காணிக்க முடியும்.
6. பயிற்சி பெற்ற மனித வளத்தை அதிகப்படுத்த, தொழில்முறை மருத்துவர்கள், தாதியர்கள், தொழில்நுட்ப உதவியாளர்கள், சுகாதார பணியாளர்களின் பட்டப்பின் படிப்புக் கல்வியை ஊக்குவித்தல்.
7. புற்றுநோய் பற்றிய ஆராய்ச்சி நடவடிக்கைகளை ஊக்குவிப்பதோடு அதன் கண்டுபிடிப்புகளின் பயன்பாட்டைப் புற்றுநோய் தடுப்பு மற்றும் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்த ஊக்குவித்தல்.

**10. கண்காணிப்பும் மதிப்பீடும்.**

சுகாதார அமைச்சகத்தின் தேசிய புற்றுநோய் கட்டுப்பாட்டு நிகழ்ச்சித்திட்ட மத்தியஸ்தானம், தேசிய அளவில் புற்றுநோய்க் கட்டுப்பாடு மற்றும் தடுப்பு நடவடிக்கைகளை கண்காணிக்கவும் தொடர் மதிப்பீடும் செய்யும். பிராந்திய புற்றுநோய்க் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள், மாகாண அளவில் நியமிக்கப்பட்ட புற்றுநோய்க் கட்டுப்பாட்டு குழுக்கள் மூலம் கண்காணிக்கப்படுகிறது. இந்நோக்கத்தை நிறைவு செய்வதற்காகச் சுட்டிகள், குறியீடுகள், கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டு கட்டமைப்பு போன்றவை அபிவிருத்தி செய்யப்பட்டு இந்த நோக்கத்திற்காக பயன்படுத்தப்படுகின்றன……………….*

C/14087)(10.6.3)

மேலதிக விவரங்களுக்கும் ………… *அடையாளமிடப்பட்ட இடங்களுக்கும் www.nccp.health.gov.lk என்ற இணைய தளத்தைப் பார்வையிடுக.



தும்பளை பெருமாள் ஆலய பொங்கல் விழாவில் வடமராட்சி கல்வி வலய சங்கீத பாட ஆசிரிய ஆலோசகர் திருமதி ஆனந்தராணி நாகேந்திரன் பக்கவாத்தியங்கள் சகிதம் இன்னிசைக் கச்சேரி நிகழ்த்துவதையும், நெல்லியடி மெ.மி.த.க. பாடசாலை மாணவிகளான யுகதாரகா சுகந்தன், துஷந்திகா சுகந்தன் ஆகியோரின் நடன நிகழ்வையும் காணலாம். (ஒ-173)



அளவெட்டி அலுக்கை நாவலடி ஞான வைரவராலயத்தின் மணிக் கூட்டுக் கோபுர கும்பாபிஷேகத்தின் போது பிரதம சிவாச்சாரியாருடன் கலசம் எடுத்துச் செல்லப்படுதலும் நிகழ்வில் மணிக்கோபுரக் கலசம் சூட்டுதல் நிகழ்வும் நடைபெற்ற வேளையில்.... (ஒ)



தெல்லிப்பழை கல்விக் கோட்ட முன் பள்ளிகளுக்கு இடையேயான விளையாட்டுப் போட்டி மல்லாகம் மகா வித்தியாலய மைதானத்தில் தெல்லிப்பழை கல்விக் கோட்ட முன்பள்ளிகளின் இணைப்பாளர் திருமதி எஸ். செல்வறஞ்சனா தலைமையில் நடைபெற்றது. நிகழ்வில் விருந்தினராகக் கலந்து கொண்ட இலங்கை வங்கியின் யாழ். பிராந்திய முன்னாள் முகாமையாளர் எஸ். விக்கினராசா முன்பள்ளி சிறார்களுக்கு பரிசில்களை வழங்கிக் கௌரவித்தார். (ஒ-86)



வரணி மத்திய கல்லூரியில் அண்மையில் இடம்பெற்ற தென்மராட்சி கல்வி வலய பாடசாலை மாணவர்களின் மெய்வன்மைப் போட்டி நிகழ்வின்போது வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு ஒலிம்பிக் விளையாட்டு வீரர் எதிர் வீரசிங்கத்துக்கு நினைவுப் பரிசில் வழங்குவதைக் காணலாம். (ஒ-122)



யாழ்ப்பாணம், நல்லூர் பிரசித்தி பெற்ற அருள்மிகு ஸ்ரீ நல்லை நாயகி அம்பாள் சமேத ஸ்ரீ நல்லைநாதசுவாமி தேவஸ்தானம் நல்லூர் சட்டநாதர்கோயில் வருடாந்த பெருந்திருவிழா நிறைவு தின விழாவில் தேவஸ்தான ஓதுவார் மூர்த்திகளாகிய சி.கிருஷ்ணமூர்த்தியின் 40 ஆண்டுகால திருமுறைப் பணியை கருத்திற்கொண்ட தேவஸ்தான அறங்காவல் ஆலய அபிவிருத்தி சபையினர், பொன்னாடை போர்த்தி "அருட் துதிசெல்வன்" என்னும் கௌரவ விருது வழங்கிப் பாராட்டிக் கௌரவித்தனர். ஆலய சிவாச்சாரியார் வா.ஜெனார்த்தன சர்மாவும் காணப்படுகிறார். (ஒ)




சர்வதேச லயன்ஸ் கழக இலங்கைப் பிரிவின் 306 பி 1 வலயத்தின் இரண்டாவது உப ஆளுநராகத் தெரிவு செய்யப்பட்ட லயன் வி.தியாகராஜாவுக்கு யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்தால் பாராட்டு விழா நடத்தப்பட்டது. இவ்விழாவில் அவரது சேவையைப் பாராட்டி அங்கத்துவ நிறுவனங்களின் பிரதிநிதிகள் கருத்துரை வழங்கினர். (ஒ)



செஞ்சொற் செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகனின் 53 ஆவது பிறந்த நாள் கடந்த புதன்கிழமை மாலை துர்க்கையம்மன் ஆலய அன்னபூரணி மண்டபத்தில் துர்க்கா மகளிர் இல்லப் பிள்ளைகள் மற்றும் தெல்லிப்பழை வாழ் மக்களினாலும் மிகவும் எளிமையான முறையில் கொண்டாடப்பட்டது. நிகழ்வில் சில காட்சிகள். (ஒ-86)



பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற மாவட்ட மட்ட பாடசாலை உடற்பயிற்சிப் போட்டியில் மானிப்பாய் மகளிர் கல்லூரி முதலிடத்தைப் பெற்றது. பங்குபற்றிய மாணவிகளுடன் அதிபர், ஆசிரியர்கள். (ஒ)

## 8ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர் ஸ்ரீமான்

**வை.இராமசாமிப்பிள்ளை,வைத்திலிங்கம்**

மலர்வு 28 . 08 . 1932

உதிர்வு 01 . 06 . 2006



"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவர் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்"
இராமசாமிப்பிள்ளை வைத்திலிங்கம்
அவர்கள் இறைவனடி சேர்ந்து ஆண்டுகள் எட்டு
நிறைந்தாலும் அவர் நினைவுகள் என்றும் அழியாது
வாழக் கூடியவை, நற்பண்பும், நற்குணமும்,
சிறந்த சிந்தனையும் அறிவு ஆற்றல் அத்தனையும்
வாய்க்கப்பெற்றவர்.
பாசத்தின் உறைவிடமாய், அன்பின் திருவுருவாய்,
கருணையின் இருப்பிடமாய் குடும்பத்தின் ஒளிவிளக்காய்
எங்கள் அனைவரையும் வழிநடத்திய
எங்கள் அன்புத் தெய்வமே!
எட்டு ஆண்டு காலம் சென்றாலும்,
கவலைகள் மறையவில்லை
ஆண்டுகள் பல சென்றாலும் எம்மைவிட்டு நீங்காது
உங்களின் பிரிவு......

**உங்கள் ஆத்மசாந்திக்காக பிரார்த்திக்கின்றோம்.**
ஸ்ரீ இராகவேந்திரா நமகே.

*என்றும் உங்கள் நினைவுடன்*
மனைவி, மகன்மார், மகள், மருமகன், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
உற்றார், உறவினர்கள், ஸ்தாபன சேவையாளர்கள், சக ஊழியர்கள்.
RVG **ஸ்தாபனம், நல்லூர், யாழ்ப்பாணம்.**

(48589)(7.6.3)


# சமூக விஞ்ஞான படிப்பு வட்டத்தின் கருத்துரை

யாழ்ப்பாணம், ஜூன் 1

சமூக விஞ்ஞான படிப்பு வட்டத்தின் ஏற்பாட்டில் 'இன் றைய சமூகப் பிறழ்வுகளும் பொருளாதாரக் காரணி களும்' என்ற தலைப்பில் கருத்துரை நிகழ்வு இன்று ஞாயிற்றுக் கிழமை பி.ப.3.30 மணிக்கு ஆடியபாதம் வீதி, திருநெல்வேலியில் உள்ள செயல்திறன் அரங்க மண்டபத்தில் நடை பெறவுள்ளது. இந்த நிகழ்வில் தொடக்கவுரையை த.ஸ்ரீபிரகாஸ் நிகழ்த்தவுள்ளதுடன் கருத்து ரையை அகிலன் கதிர்காமர் வழங்க வுள்ளார். இந்தக் கருத்துரையைத் தொடர்ந்து கலந்துரை யாடல் இடம் பெறும். கலை, இலக்கிய , சமூக , விஞ்ஞான அறிவியல் ஆர்வலர்கள் நிகழ்வில் கலந்து கொள்ளலாம் என்று ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (ஓ-10)

# லயன்ஸ் கூட்டம்

நெல்லியடி, ஜூன் 1

வடமராட்சி லயன்ஸ் கழகத்தின் அங்கத்தவர் கூட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் நெல்லியடி செவிப்புலனற்றோர் நிலையத்தில் நடைபெறவுள்ளது. (ஓ-35)

# பொதுக் கூட்டம்

யாழ்.மாவட்ட கைப்பணி அபிவிருத்திச் சங்கத் தின் விசேட பொதுக் கூட்டம் நாளை திங்கட் கிழமை பிற்பகல் 2 மணிக்கு நாவலர் வீதியி லுள்ள நாவலர் மண்டபத்தில் நடைபெறும். சங்கத்தின் சிறந்த செயற்பாடுகளுக்கான கலந்துரையாடலில் அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா கலந்து கொள்வார் என்று சங்கம் அறிவித்துள்ளது.

◆◆◆

வரணி இயற்றாலை மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் பொதுக் கூட்டம் எதிர்வரும் வியாழக் கிழமை பிற்பகல் 3 மணிக்கு நடைபெறும் என்று சங்கச் செயலாளர் அறிவித்துள்ளார்.

இந்த நிகழ்வில் தென்மராட்சி பிரதேச செயலக கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர், பிரதேச கிராம அலுவலர் ஆகியோர் கலந்து கொள்வர். (ஓ-122)


## 16ஆம் நாள் நினைவஞ்சலி

எமது கல்லூரியின்
இரசாயனவியல் பாட ஆசிரியர்
செ. கலைச்செல்வன் அவர்களின்
அன்புத் தாயார்

**அமரர் செல்வராசா கலைநிலா**


அவர்களின் பிரிவினால் ஆறாத் துயருற்றிருக்கும் உறவுகளுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அவரின் ஆத்மாசாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நல்லுறவுக் கழகம்,
மு/மல்லாவி மத்திய கல்லூரி
யோகபுரம்.



(48628)(7.6.3)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



மலர்வு 07 ✿ 10 ✿ 1922

உதிர்வு 03 ✿ 05 ✿ 2014

**அமரர் இளையதம்பி ஞானப்பிரகாசம்**

(இளைப்பாறிய அரச உத்தியோகத்தர்-ஆஸ்திரேலியா)

என்றும் எம்மை அன்பாலும் பண்பாலும்
அரவணைத்து இனிய வாழ்வு தந்த தெய்வமே!
எங்கள் உயர்வுக்கு உறுதுணையாக அமைந்த
உங்கள் சிரித்த முகம் காண்பதற்கு ஏங்கித்
தவிக்கின்றோம் எம்முடன் சேர்ந்து வாழ்ந்த
ஒவ்வொரு கணமும் எமக்குச் சொர்க்கமாய்
இருக்குதப்பா உங்களை என்றும் எங்கள்
இதயக் கோயிலிலிருத்திப் பூஜிப்போம் அப்பா.

உங்கள் ஆத்மா சாந்தியடைப் பிரார்த்திக்கின்றோம்.

இல. 104, வெளிக்குளம்,
வவுனியா.
T.P : 024 222 7324

மனைவி, மகன்மார், மகள்மார்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

[43326][7.6.3]

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர் **புஷ்பவதி முத்துக்குமார்**

(தமிழ்ப் பட்டதாரி ஆசிரியை)

**திதி : 1 ஜூன் 2014**



முல்லைத்தீவு துணுக்காயைப் பிறப்பிடமாகவும், ஜேர்மனி Mönchengladbach ஐ வாழ்விடமாகவும், லண்டனை தற்காலிக வதிவிடமாகவும் கொண்டிருந்த புஷ்பவதி முத்துக்குமார் அவர்களின் முதலாம் ஆண்டு நினைவஞ்சலி.

தேடித் தவிக்கின்றோம்
தரையினிலே அம்மா!
காணாமல், கேளாமல்
கலங்குகின்றோம் அம்மா!
வேதனை புளுக்கத்தில்
புழுவாய் புரளுகின்றோம்
வேண்டாத தெய்வமில்லை - உங்கள்
பூமுகத்தைக் காண்பதற்கு

நெஞ்சம் வெடிக்குது - உங்கள்
நேசம் இல்லாமல்!
சிந்தை கலங்குது - உங்கள்
சீராட்டு இல்லாமல் !
இதயம் கொதிக்குது - உங்கள்
இறைமை இல்லாமல்!
உள்ளம் துடிக்குது - உங்கள்
உருவம் இல்லாமல்!

தந்தையின் பிரிவின் பின்
உன்னையே மறந்து, மெழுகாக உருகி -
எம்மை
தனிமரமாய் தாங்கினாய் அம்மா!
கரங்களை பிடித்து முத்தமிட்டு பேசிய
காலங்கள் கடந்து விட்டதா அம்மா?
நேற்றுப் போல் இருக்கிறதே-நீங்கள்
திருநீறிட்டு நெடுநீர் தைரியம் கூறியது!

பார்க்கும் இடமெல்லாம் உங்கள்
நினைவுகளே,
தூங்கும் போதெல்லாம் உங்கள் கனவுகளே,
வாழும் காலமெல்லாம் உங்கள் வாசனையே!
சாகும் வரை - உங்கள்
அடைக்கலம் வேண்டும் தாயே!!!

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

**ஆழ்ந்த துக்கத்தில்**

**பிள்ளைகள்**
**கண்ணன், மதன், ரேகா,**
**பானு, வேணு மற்றும்**
**உற்றார், உறவினர்கள்.**

**தொடர்புகளுக்கு:**
**கண்ணன் (மகன்) பிரித்தானியா.**
**செல்லிடப்பேசி: +447723389110**

பிறப்பு 6 ஜூன் 1947

இறப்பு 14 மே 2013

(C/13940)(10.6.3)


SINGER
SAMSUNG
வருட மத்தி
செல்வச் செழிப்பு
இலவச சலுகைகள்
நம்பமுடியா மாற்றுமுறை சலுகைகள்
மாபெரும் விலைக்கழிவுகள்
UA28F4100 LED TV
ரூ. 42,999/-
ரூ. 7,000/- மாற்றுமுறை விலைக்கழிவு
UA32F4100 LED TV
ரூ. 51,999/-
ரூ. 8,000/- மாற்றுமுறை விலைக்கழிவு
UA40F5100 LED TV
ரூ. 99,999/-
ரூ. 10,000/- மாற்றுமுறை விலைக்கழிவு
UA40F6400 SMART TV
ரூ. 159,999/-
ரூ. 15,000/- மாற்றுமுறை விலைக்கழிவு
Motion TV
UA46F8000 SMART TV
ரூ. 309,999/-
ரூ. 30,000/- மாற்றுமுறை விலைக்கழிவு
UHD TV
UA55F9000 SMART TV
ரூ. 899,999/-
ரூ. 50,000/- மாற்றுமுறை விலைக்கழிவு
255
ஸ்டாண்ட் மின்விசிறி இலவசம்
SMGRT26H3000
~ 255L Capacity
~ No Frost
~ 4 Star Energy Star Rating
ரூ. 71,999/-
320
10 YEAR WARRANTY
10% கழிவு
SMGRT33FAJF
~ 320L Capacity ~ Digital Inverter Compressor
~ Up To 20% More Saving ~ 5 Star Energy Star Rating
~ Cooling Feature: No Frost, Multi Flow ~ Deodorizer
ரூ. 95,999/-
190
வட்டியின்றி செலுத்துங்கள்
SMGRP1914
~ 190L Capacity ~ 4 Star Energy Saving
~ Stabilizer Free Operation ~ Direct Cool
ரூ. 43,999/-
ரூ. 8,000/- மாற்றுமுறை விலைக்கழிவு
SMGWA82BSLC
~ 6.2Kg Washing Capacity ~ Fully Auto
~ Eco Storm Technology Pulsator ~ Diamond Drum Tub
ரூ. 51,199/-
600
ரூ. 35,000/- மாற்றுமுறை விலைக்கழிவு
SMGRS21HSTWA
~ 600L capacity ~ Inverter Compressor
~ LED Display & Control ~ Twin cooling system ~ Colour - Camellia White
ரூ. 220,599/-
585
ரூ. 55,000/- மாற்றுமுறை விலைக்கழிவு
SMGRS21HZLMR
~ 585L capacity ~ Inverter Compressor
~ Water & Ics Dispenser ~ Home Bar ~ Colour - Black Mirror
ரூ. 322,799/-
ரூ. 18,000/- மாற்றுமுறை விலைக்கழிவு
SMGWF8558
~ 5.5 Kg Washing Capacity
~ Spin Speed 800 rpm ~ Diamond Drum ~ 8 Wash Programs
ரூ. 81,999/-
Samsung - சாம்சுங் விற்பனையும் விற்பனைக்குப் பிந்திய சேவையும் சிங்கரிடமிருந்து
(C/14294)
011 5 400 400
www.singersl.com
www.facebook.com/singersl
SINGER Plus
மற்றும் நாடளாவிய முகவர்களிடம்




# நீர் வற்றிய குளக்கரைகளில் கூக்குரல், சிரிப்பொலிகள்

## சாவகச்சேரி புறநகர்ப் பகுதி மக்கள் அச்சத்தில்

தென்மராட்சி, ஜூன் 1

சாவகச்சேரி புறநகர் பகுதியில் உள்ள பெருங்குளம், கல்வயல் ஆகிய தோட்ட நிலங்களில் நீரின்றி வறண்டு காணப்படும் குளங்களை அண்டிய பகுதிகளில் இரவு வேளைகளில் கூக்குரல் மற்றும் சிரிப்பு ஒலிகள் கேட்பதால் அயலில் உள்ள குடும்பங்கள் அச்சமடைந்த நிலையில் காணப்படுகின்றன.

இவ்வாறான சத்தங்களால் இரவு 8 மணிக்குப் பின்னர் சன நடமாட்டம் குறைவடைந்து வருவதாகவும், பகல் வேளைகளில் குளத்தை அண்டிய பகுதிக்குச் செல்லப் பொது மக்கள் அஞ்சுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

வறண்டு காணப்படும் குளங்களில் தினமும் ஒவ்வொரு குளப் பகுதியிலிருந்தே சத்தம் கேட்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

அதையறிந்த அயல் கிராம இளைஞர் குழு நேற்று முன்தினம் பகலில் குறித்த குளப் பகுதிக்குச் சென்று பார்த்த போது தாராளமாக பியர் ரின்களும், சாராயப் போத்தல்களும் காணப்பட்டதைக் கண்டு அயல்பகுதி குடியிருப்பாளகளுக்கு அது குறித்துத் தெரியப்படுத்தினர்.

காலாதிகாலமாக கால்நடைகளுக்கு குடிதண்ணீர் வழங்கிய இப்பகுதிக் குளங்கள், இந்த முறை வறண்டு காணப்படுவது மனதுக்குக் கவலை அளிப்பதாக அந்தப் பகுதி முதியவர் ஒருவர் தெரிவித்தார். (வ-9)


இலங்கைவங்கி BOC தேசத்தின் வங்கியாளர்

# இலங்கை வங்கி

இலங்கை வங்கியின் சட்டப் பிரிவில் பணியாற்ற தகைமை, அனுபவம், சுறுசுறுப்பு மற்றும் பெறுபேறுகளை அடையக்கூடிய இளம் நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

## பயிலுநர் உதவி சட்ட உத்தியோகத்தர்

(வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் மாத்திரம் வெற்றிடங்கள் காணப்படுகின்றன.)

**தேவையான தகுதி:**

**தகைமைகளும் அனுபவமும்**

★ சட்டத்தரணி மற்றும் பிரசித்த நொத்தாரிசாக இருத்தல் அத்துடன்

★ நீதிமன்றில் குடியியல் வழக்கு வழக்காடுதல், காணி மூல உறுதிகளை பரீட்சித்தல், நொத்தாரிசு வேலை, தொழில் மற்றும் கைத்தொழில் நீதிமன்ற வேலைகள் ஆகியவற்றில் 3 வருட செயலாற்றல் பயிற்சியும் அனுபவமும் பெற்றிருத்தல்.

**ஏனைய சிறப்பம்சங்கள்:**

★ ஆங்கில மற்றும் தமிழ் மொழியில் சிறந்த வல்லமையும், கணினி அறிவும் முக்கியமாகும்.

**ஏனைய இயல்புகள்:**

★ மிகச்சிறந்த தொடர்பாடல் திறமைகள்

★ தலைமைத்துவப் பண்புகள்

★ நபர்களுக்கிடையேயான தொடர்புத் திறமைகள்

**வயது :**

★ விண்ணப்ப முடிவு திகதியில் 30 வருடங்களுக்கு மேற்படாதிருத்தல்.

(மேற்குறிப்பிட்ட தகைமைகள் அற்றோர் விண்ணப்பிக்க வேண்டாம் என அறிவுறுத்துகின்றோம்.)

**விதிகளும் நிபந்தனைகளும்:**

★ இப்பதவியானது வங்கிச் சேவையின் பொதுவான விதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் அமைய காணப்படினும் வழமையான வங்கியியல் பணி முறைக்கு உட்பட்டதல்ல. (பகிரங்க சேவை அன்று)

★ பயிற்சிக் காலத்தினுள் பொதுவாக நடத்தை திருப்திகரமானதாயின், வங்கி நடத்தும் விஷேட பரீட்சையொன்றில் தகுதியானவர் எனத் தெரிவு செய்யப்படின் உதவி சட்ட உத்தியோகத்தராக நிரந்தர சேவைக்கு உள்ளீர்ப்பதற்கான முன்னேற்பாட்டுடன், ஒரு வருட பயிசிக்கால உடன்படிக்கையில் அமர்த்தப்படுவர்.

★ பயிற்சிக்காலத்தினுள் மாதாந்த பயிற்சிக் கொடுப்பனவாக ரூபா 31,000/= (சகலதும் உள்ளடங்களாக) செலுத்தப்படும். உதவிச் சட்ட உத்தியோகத்தர் தரத்துக்கு தெரிவு செய்யப்பட்டால் பின்வரும் சம்பள அளவுத் திட்டத்தில் அமர்த்தப்படுவர்.

ரூபா 23,510/= - ரூபா 34,310/=
ரூபா 540/= X 20

(2014 மே மாதத்தில் உள்ளவாறு ஆரம்ப மொத்தச் சம்பளமானது, மாற்றமடையக்கூடிய வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவு ரூபா 26,435/10 உட்பட ரூபா 60,111/81 ஆகும்)

★ ஒரு வருட பயிலுநர் காலத்தினுள் பயிலுநர்கள் 07 நாள்கள் அமைய லீவு மற்றும் 07 நாள்கள் சுகவீன லீவுக்கும் உரிமையுடையோராவர்.

**தெரிவு செய்யும் முறை:**

★ நேர்முகப்பரீட்சை மூலம் தெரிவு செய்யப்படுவர்.

**விண்ணப்பிக்கும் முறை:**

2014 ஜூன் 16இல் அல்லது அதற்கு முன்பு எங்களது இணையத்தளம் www.boc.lk ஊடாக விண்ணப்பிக்கவும். சமர்ப்பித்த விண்ணப்பத்தின் விண்ணப்பத் தொடர்பு இலக்கத்தை உங்களது எதிர்கால தொடர்பு களுக்காக வைத்திருக்கவும்.

மேற்குறிப்பிட்ட முறை தவிர்ந்த எவையேனும் ஏனைய முறை ஊடாக கிடைக்கும் விண்ணப்பங்கள் எச்சந்தர்ப்பத்திலும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

**மனிதவள பிரிவு,**
**இலங்கை வங்கி தலைமையகம்,**
**கொழும்பு - 01.**

தெரிவுகள் சம்பந்தமாக ஆதரவு கோருவோர் தகைமையை இழப்பர். தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரிகளை மட்டும் நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கும் உரிமை வங்கிக்கு உண்டு.



# வரிசையில் காத்திருந்து மருந்து பெறும் நோயாளர்

## சாவகச்சேரி மருத்துவமனையில்

சாவகச்சேரி மருத்துவமனை பொது மருத்துவக் கிளினிக்கில் சிகிச்சை பெற்ற நோயாளர்கள் மருந்துகள் வாங்குவதற்காக வரிசையில் காத்து நிற்கின்றனர்.

பொது மருத்துவ கிளினிக்கில் பொது மருத்துவ நிபுணர்கள் உட்பட ஆறு மருத்துவர்கள், நோயாளர்களைப் பார்வையிடுகின்ற போதிலும் இரண்டு மருந்தாளர்கள் கடமையில் இருப்பதால் காலை 8 மணி தொடக்கம் பி.ப. 2 மணி வரை நோயாளர்கள் மருந்துக்காக நீண்ட வரிசையில் காத்திருக்க நேரிடுகிறது.

சாவகச்சேரி மருத்துவ மனையில் கிளினிக் நோயாளர்களுக்கு நேரம் ஒதுக்கி உள்ளதால் குறுகிய நேரத்தில் மருத்துவரின் பரிசோதனை முடிவடைந்து வெளியே வந்தாலும் மருந்து பெறும் இடத்தில் நீண்ட வரிசை காணப்பட்டாலும் அங்கு கடமையில் உள்ள மருந்தாளர்கள் நோயாளர்களுடன் அன்பாகப் பேசி மருந்துகள் கொடுப்பதாகவும் நோயாளர்கள் தெரிவித்தனர். (வ-9)

www.pabcbank.com
(011) 4 667 222



வங்கித்துறையில் என் முன்னேற்றப் பாதை...

"விற்பனையினை அதிகரிப்பதற்காக வியாபார அபிவிருத்தி அதிகாரியாக நான் பான் ஏஷியா வங்கியுடன் இணைந்தேன், இது எனக்கு பல புதிய சந்தர்ப்பங்களை அமைத்துத் தந்ததுடன் விற்பனையையும் தாண்டி பிரதான வங்கித் துறையில் தொழில் செய்ய வாய்ப்பளித்துள்ளது".

பான் ஏஷியா வங்கியினரான நாம் இரண்டு தசாப்தங்களுக்கும் மேலாக வங்கித்துறையில் நிலைத்திருப்பதுடன் எமது 77 கிளைகளும் வலையமைப்பாக தொழிற்படுகின்றது. நாம் எம்மை மேலும் வளர்த்துக் கொள்ள தீர்மானித்துள்ளதால் எம்முடன் இணையக்கூடிய செயற்திறன் மிகுந்த, இலக்குகளை அடையும் தனி நபர்களை எதிர்பார்க்கின்றோம்.

வியாபார அபிவிருத்தி அதிகாரிகள் மற்றும்
பயிற்சி வியாபார அபிவிருத்தி அதிகாரிகள்

முக்கிய பொறுப்புகள்:

- பான் ஏஷியா வங்கியின் வைப்புகள், தனிப்பட்ட கடன்கள், கடனட்டைகள் மற்றும் லீசிங் வசதிகளைப் பற்றி விழிப்புணர்வை ஏற்படுத்தி விற்பனையை அதிகரித்தல்

எமது தேடல்:

- நெருக்கடியான சூழ்நிலைகளில் வேலை செய்யக் கூடிய, இலக்குகளை எட்டும், பேச்சுத் திறனும் மக்கள் தொடர்பும் கொண்ட தனிநபர்கள்
- விற்பனையில் ஆர்வம் கொண்ட சிநேகபூர்வமானவர்கள்
- வெற்றி நோக்கம் கொண்ட சுறுசுறுப்பானவர்கள்
- சிறந்த பேச்சு மற்றும் எழுத்துத் திறன் கொண்டவர்கள்
- மும்மொழித் திறன் கொண்டவர்களுக்கு முதலிடம் வழங்கப்படும்

தகைமையும் அனுபவமும்:

வியாபார அபிவிருத்தி அதிகாரி

- சா. த. பரீட்சையுடன் வர்த்தக வங்கியொன்றில் அல்லது அங்கீகரிக்கப்படும் நிதி நிறுவனம் ஒன்றில் குறித்த தொழிலில் ஆகக் குறைந்தது 1 வருட அனுபவம் கொண்டிருத்தல்.
- 30 வயதிற்கு குறைந்தவராயிருத்தல்

பயிற்சி வியாபார அபிவிருத்தி அதிகாரி

- சா. த. பரீட்சையில் நான்கு "C" சித்திகள்
- 24 வயதிற்கு குறைந்தவராயிருத்தல்

நேர்முகத் தேர்வுகள் - திகதி : 2014 ஜுன் மாதம் 2ம் 3ம் திகதிகளில்
நேரம் : காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரை
இடம் : பான் ஏஷியா வங்கி, நாரஹேன்பிட்டி கிளை (2ம் மாடி)
இல. 526, எல்விடிகல மாவத்தை, கொழும்பு 05.

தெரிவு செய்யப்பட்ட தனிநபர்களுக்கு கவர்ச்சிகரமான சம்பளமும் விற்பனைக்கான ஊக்குவிப்புச் சலுகைகளும் வழங்கப்படுவதுடன் பான் ஏஷியா வங்கியில் பிரதான வங்கித் துறையில் தொழில் வாய்ப்புகளும் வழங்கப்படும்.

குறித்த தினத்தில் நேர்முகத் தேர்வுகளுக்கு சமூகமளிக்க இயலாதோர் விண்ணப்பிக்கும் பதவியினை மின்னஞ்சலின் விரைத்தில் குறிப்பிட்டு உங்கள் முழு சுயவிவரக் கோவையினை உறவினரல்லாத இருவரின் விபரங்களுடன் கீழ்க்காணும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்புங்கள்:

மின்னஞ்சல் : careers@pabcbank.com
இணையத்தளம் : www.pabcbank.com

தெரிவுசெய்யப்பட்ட சிலருக்கு மாத்திரமே நாம் பதிலளிப்போம்

விபரங்களுக்கு - (011) 4 667 418

பான் ஏஷியா வங்கி

Company Reg No PQ48
www.sarva.lk

# வேகத்தடை அணைகளை அகற்றவும்

வரணி, ஜுன் 1

வரணி கொடிகாமம் பிரதான வீதியில், 52 ஆவது பிரிகேட் தளம் முன்னர் இயங்கிய காலத்தில் அதற்கு முன்னால் செல்லும் வீதியில் அமைக்கப்பட்டிருந்த வேகத்தடை அணைகளை வீதி அபிவிருத்தி அதிகாரசபையினர் அகற்றி வாகனங்களின் வசதியான போக்குவரத்துக்கு உதவ வேண்டும் என்று அந்தப் பகுதி மக்களால் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

குறித்த பிரிகேட் தளத்தின் பாதுகாப்புக் கருதி அமைக்கப்பட்டிருந்த வேகத் தடை அணைகள் குறித்த தளம் அங்கிருந்து அகற்றப்பட்டு சுமார் 3 மாதங்களுக்கு மேலாகியும் அகற்றப்படவில்லை.

மோட்டார் சைக்கிள்களில் பயணிப்போர் இத்தகைய வேகத்தடை அணைகளால் பல அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர். (வ-122)

# மண்டான் பொதுச் சந்தை வீதிகளை புனரமைக்க மதிப்பீட்டுப் பணிகள்

வடமராட்சி, ஜுன் 1

கரவெட்டி, வடமராட்சி தெற்கு மேற்குப் பிரதேச சபை எல்லைக்குள் இருக்கும் மண்டான் பொதுச் சந்தை மற்றும் நான்கு வீதிகள் ஆகியவற்றை புனரமைப்பதற்கான மதிப்பீட்டுப் பணிகள் நிறைவடைந்துள்ளன.

சரஸ்வதி வித்தியாலய வீதி, முடக்காடு வீதி, தக்குச்சம்பாதி வீதி, துன்னாலை ஆட்டுப்பட்டி கொலனி வீதி ஆகியவற்றையும், மண்டான் பொதுச் சந்தையையும் சபை நிதியில் திருத்தியமைக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தீர்மானத்துக்கு அமைய அவற்றைத் திருத்தி அமைப்பதற்கான மதிப்பீட்டுப் பணிகள் நிறைவடைந்துள்ளன. எனினும் வடக்கு மாகாண முதலமைச்சர் பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளரின் அனுமதி கிடைத்ததும் திருத்தப் பணிகள் மேற்கொள்ளப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ-173)

# பாஷையூர் வீதிகள் மிகவும் மோசம்

கொழும்புத்துறை, ஜுன் 1

பாஷையூர்ப் பகுதியில் உள்ள உள்ளக வீதிகள் நீண்டகாலமாக திருத்தங்களின்றி சேதமடைந்து காணப்படுவதாக மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். புனித அந்தோனியார் ஆலயத்துக்கு முன்பாகச் செல்லும் சென். செபஸ்தியன் வீதி, முதலாம் குறுக்கு வீதி, 2 ஆம் குறுக்கு வீதி, உள்ளிட்ட உள்ளக வீதிகள் அனைத்தும் சேதமடைந்து போக்குவரத்துக்கு இடையூறாகக் காணப்படுகின்றன. சென். செபஸ்தியன் வீதி முதலாம் குறுக்குச் சந்தியில் கழிவு நீர்க் கால்வாய் திருத்தம் மேற்கொள்ளப்பட்ட போது ஏற்பட்ட குழிகள் சீர்செய்யப்படாத நிலையில் காணப்படுகின்றன. சனசந்தடி மிகுந்த இந்தப் பகுதியிலுள்ள வீதிகள் சீரின்மையால் மக்கள் விபத்துக்களை எதிர்கொள்வதுடன் இரவு வேளைகளில் விழுந்தெழுந்து செல்வதாகவும் கூறப்படுகிறது. (ஒ-135)




## துர்நாற்றம் வீசும் கிளிநொச்சிச் சந்தை



**கிளிநொச்சி, ஜூன் 1**

கிளிநொச்சி பொதுச்சந்தையில் கழிவுகள் உரிய முறையில் அகற்றப்படாமல் காணப் படுவதுடன், கழிவு வாய்க்கால் துப்புரவு செய்யப்படுவதில்லை எனவும் சந்தை வர்த்தகர்களால் குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது.

கிளிநொச்சி சந்தைப் பகுதியில் தேங்கும் மரக்கறிக் கழிவுகள் மற்றும் ஏனைய கழிவு களை அகற்றுவதில் தாமதங்கள் ஏற்படுகின்றன. இதே போன்று சந்தையின் மீன் மற்றும் இறைச்சி விற்பனைப் பகுதிகளைச் சூழவுள்ள கழிவு வாய்க் கால் உரிய முறையில் துப்புரவு செய்யப் படாமல் காணப்படுவதால் கழிவு நீர் வடிந்து ஓட முடியாமல் தேங்கிக் காணப்படுகின் றது. இவ்வாறு கழிவு நீர் தேங்கிக் காணப்படு வதால் அந்தப் பகுதியில் துர்நாற்றம் வீசு கின்றது. அத்துடன் தற்போது இலையான் பெருக்கமும் அதிகரித்துக் காணப்படுவதாக சந்தை வர்த்தகர்களால் விசனம் தெரிவிக் கப்படுகிறது. (வ-55)

## இளைஞர் கழகத்தால் ஆலயத்துக்கு உதவி



வலி.வடக்கு, ஜூன் 1

ஆனைக்கோட்டை இளைஞர் கழகத்தின் ஏற்பாட்டில் ஆனைக்கோட்டை கரைப்பிரான் பிள்ளையார் ஆலயத்துக்காக ஒரு தொகுதி சிமெந்து வழங்கப்பட்டது.

ஆனைக்கோட்டை கரைப்பிரான் பிள்ளை யார் ஆலய பிரதமகுரு சோ.ம.சிவகுமரக் குருக்கள் ஆனைக்கோட்டை இளைஞர் கழகத்துக்கு விடுத்த வேண்டுகோளை ஏற்றே இந்த உதவிகள் ஆலயத்தில் வைத்து வழங் கப்பட்டன.

ஆனைக்கோட்டை இளைஞர் கழகத்தின் தலைவர் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் பிரதேச இளைஞர் நாடாளுமன்ற உறுப்பினர் க.உஷாந்தன், நவாலி வடக்கு இளைஞர் கழகத் தலைவர் அன்ரன் ரஜோ, கல்வளை இளைஞர் கழகத் தலைவர் நா.சுதர்சன், சண்டிலிப்பாய் மேற்கு இளைஞர் கழக பொருளாளர் நா.கஜீலன், ஆனைக் கோட்டை இளைஞர் கழகத்தின் உபதலைவர் ம.பனுஷா, விளையாட்டுத்துறைச் செயலாளர் அ.நிஷாங்கன் உட்பட்ட இளைஞர்கள் பலர் கலந்து கொண்டனர். (வ-86)



**ஹற்றன் நஷனல் வங்கி பீ எல் சி**
**மானிப்பாய்**

ஸ்ரான்லி வீதியில் பிரதான வியாபார, வதிவிட சொத்துக்கள் விற்பனைக்கு

**அமைவிடம்:** இல. 305/1, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்

**அளவு:** காணி - 5.82 kls.
கட்டடம் - 1,480 சதுர அடி

மேலதிக விவரங்களுக்கு அலுவலக நேரங்களில் அழைக்கவும்

021 225 5141, 0777 316487, 0112 661827

விலைக்கோரல்களை 2014 ஜுன் 16ம் திகதிக்கு முன்னர் பதிவுத்தபாலில் பின்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்

The Deputy General Manager (R & CQM)
Hatton National Bank PLC
Recoveries Department, Level 18, HNB Towers,
479, T.B. Jayah Mawatha, Colombo 10.

# நாளை கொடியேற்றம்

திருக்கேதீஸ்வர அருள்மிகு கௌரி இணை திருக்கேதீஸ்வரநாதர் திருக்கோயில் மஹோற்சவப் பெருவிழா நாளை திங்கட்கிழமை முற்பகல் 10 மணி முதல் 11 மணி வரையுள்ள சுபமுகூர்த்த வேளையில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும்.

தொடர்ந்து பத்துத் தினங்கள் இடம்பெறும் உற்சவத்தில் எதிர்வரும் 10 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை ஐந்து திருத் தேர்களின் திரு வீதியுலாவும், மறுநாள் புதன்கிழமை காலை தூய பாலாவித் தீர்த்தவாரியில் சுவாமி தீர்த்தமாடுதலும் இரவு கொடியிறக்கமும் இடம் பெறும். (ஓ)

◆ ◆ ◆

யாழ்ப்பாணம் நீராவியடி ஸ்ரீஜெயநீராவி வீரகத்தி விநாயகர் ஆலய வருடாந்த உற்சவம் நாளை திங்கட்கிழமை காலை 10.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி பதினொரு நாள்கள் நடைபெறும். எதிர்வரும் 10 ஆம் திகதி சப்பரமும் 11 ஆம் திகதி புதன்கிழமை காலை 8.30 மணிக்கு தேர்த் திருவிழாவும், 12 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9 மணிக்கு தீர்த்த உற்சவமும் இடம்பெறும். தொடர்ந்து மாலை 5 மணிக்கு வசந்த மண்டபப் பூசை நடைபெற்று கொடி இறக்கம் இடம்பெறும். (ஓ-7)

# இலட்சார்ச்சனை

கொக்குவில் நந்தாவில் கற்புலத்து மனோன் மணி ஆலயத்தின் வருடாந்த இலட்சார்ச்சனை நாளை திங்கட்கிழமை ஆரம்பமாகும். எதிர்வரும் 12 ஆம் திகதி வியாழக்கிழமை பௌர்ணமி தினத்தன்று இலட்சார்ச்சனை நிறை வடையவுள்ளது. தினமும் மாலை 4.30 மணிக்கு பூசைகள் ஆரம்பமாகும். (ஓ-10)

## மணிக்கோபுர கும்பாபிஷேகம்

அரியாலை மேற்கு ஸ்ரீ சிவகாமி அம்பாள் ஆலய மணிக் கோபுர கும்பாபிஷேகமும், அலங்கார உற்சவமும் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8.52 மணி தொடக்கம் 10.22 மணி வரையுள்ள சுப முகூர்த்தத்தில் நடைபெறவுள்ளது.

காலை 7 மணிக்கு விநாயகர் வழிபாட்டுடன் ஆரம்பமாகித் தொடர்ந்து கிரியைகள் நடைபெற்று முற்பகல் 10.22 மணிக்கு மணிக் கோபுரத்துக்கு கும்பாபிஷேகமும் இடம்பெறும்.

எதிர்வரும் 11 ஆம் திகதி புதன்கிழமை காலை 7 மணி தொடக்கம் நண்பகல் 12 மணி வரை 108 சங்காபிஷேகம் இடம்பெறும். மாலை 6 மணிக்கு விசேட பூசைகள் இடம் பெற்று அம்பாள் வீதியுலா வருவார். (ஓ)

**அறைகள் நாள் வாடகைக்கு**
ஒருவருக்கு 500/=, இருவர் 1000/=, நால்வர் 2000/=(Attached Bathroom)
Hotel Villa City
422 Galle Road, Wellawatte
T.P: 072 255 2222

**விற்பனைக்கு**
பெறுமதியான பொருள்களுடன்
Net Cafe விற்பனைக்குண்டு.
Photocopy Machine With Fax,
Computers, Canon Scanner, Designed
Cashier Table, Partition, Projector
மேலதிக விவரங்களுக்கு: 077 155 3144

**கைதேர்ந்த சமையற்காரர் தேவை**
நிறுவனத் தலைவர் ஒருவரின் கொழும்பிலுள்ள பங்களாவுக்கு, சுவை மணக்கும் அசல் யாழ் உணவு வகைகளைச் சிறப்பாக தயாரிப்பதில் கைதேர்ந்த ஒரு சமையற்காரர் தேவை. பொருத்தமான நபருக்கு கவர்ச்சிகரமான சம்பளமும், மேலதிகச் சலுகைகளும் வழங்கப்படும். விண்ணப்பியுங்கள்:
விளம்பரதாரர் - இல. 19, டிக்கல் வீதி, கொழும்பு - 08

**அகவை 51இல் அகமகிழ்ந்து வாழ்த்துகின்றோம்**
**உயர்திரு. சரா. புவனேஸ்வரன் அவர்கள்**
(பொதுச்செயலாளர், இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம்,
விரிவுரையாளர், கோப்பாய் ஆசிரிய கலாசாலை,
இயக்குநர், சயன்ஸ் அக்கடமி, நல்லூர் - அரியாலை)

01.06.2014 ஞாயிற்றுக்கிழமை (இன்று)
தனது 51வது அகவையினை
நிறைவுசெய்யும்
எமது இயக்குநர்
திரு. சரா. புவனேஸ்வரன் அவர்கள்
இன்றுபோல் என்றும்
சிறப்புற்று வாழ
அகமகிழ்ந்து
வாழ்த்துகின்றோம்.

உள்ளத்தால்!
உழைப்பால்!
உண்மையால்!
உயர்ந்த மனிதன்
வாழிய வாழிய சிறப்பெல்லாம் பெற்று.



01.06.2014
வாழ்த்துவோர்:
சயன்ஸ் அக்கடமி குடும்பம்

**வரவேற்பும் விருந்துபசார நிகழ்வும்**
சிவஸ்ரீ.உ.கிருபானந்தக்குருக்கள் (கணேசன்)
ஸ்ரீமதி.வசந்தகலா தம்பதிகளின் ஜேஷ்ட புத்திரி
குகப்ரியா (ப்ரியா)
சிவஸ்ரீ.கனகசபாபதிக்குருக்கள் (ராஜாமணி)
வடிவாம்பாள் தம்பதிகளின் ஜேஷ்ட புத்திரன்
சுந்தரேஸ்வர சர்மா (நிரஞ்சன்)
ஆகியோருக்கு 25.05.2014 அன்று
இந்தியா தஞ்சாவூரில் நடைபெற்ற
திருமண வைபவத்தினையொட்டிய வரவேற்பு நிகழ்வு
நாளை (02.06.2014) திங்கட்கிழமை
பிற்பகல் 4.30 மணிக்கு நல்லூர் நடராஜா பரமேஸ்வரி
மண்டபத்தில் நடைபெற உள்ளது. தாங்கள் தங்கள்
குடும்ப சகிதம் வருகை தந்து திருமணத் தம்பதிகளை
ஆசீர்வதிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.
சிவஸ்ரீ.கிருபானந்தக்குருக்கள் தம்பதிகள்
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

**Slotted Angle** Powder coated / **Rolling Shutters** Powder coated




NAFIS INDUSTRIES ( PVT )LTD
07777 21552, 011 4807252,
# 5A, Halgaswatte Lane, ( Off Nandamithra Road )
Balapokuna Road Colombo - 06
யாழ்ப்பாணம் 021, 4993060, 075 5279488
No. 54 அராலி வீதி பொம்மவெளி

ஓம் விராட் விஸ்வப்பிரம்மனே நமஹ
**திறப்பு விழா**
ஜய வருடம் வைகாசி மாதம் 19ஆம் திகதி நாளை (02.06.2014)
திங்கட்கிழமை நண்பகல் 12 மணி 6 நிமிடத்திலுள்ள சுப நேரத்தில்
திறந்து வைக்கப்படும் எமது ஸ்தாபனமாகிய
Whole Sellers and Retailer Manufacture of Radymade Garment
**Rainbow Garment**
74, Kannathite Road, Jaffna.



Tel: 076 669 4876
ஆண், பெண், சிறுவர்களுக்கான அனைத்துவித நவீன ஆடைகள் மொத்தமாகவும், சில்லறையாகவும் தைத்துக் கொடுக்கப்படும்.
74, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.

# இலங்கையின் No.1 குடும்ப சஞ்சிகை
## இதோ வெளிவந்துவிட்டது ஜூன் மாத இதழ்




**பத்து வகை போட்டிகள்**

200,000/-

- பட்டுச் சேலை கட்டுரைப் போட்டி
- குறுக்கெழுத்துப் போட்டி
- பேசும் படப் போட்டி
- விளையாட்டு அறிவுப் போட்டி
- பொது, சமய அறிவு, விவேகப் போட்டி
- வரைதல் போட்டி
- சொற்றொடர் ஆக்கப் போட்டி
- தரம் 4, 5 இற்கான கணித புதிர் போட்டி
- தரம் 5 இற்கான ஓவியக் கட்டுரைப் போட்டி
- மழலைகளுக்கான வர்ணம் தீட்டும் போட்டி

இலவச பிறந்தநாள் வாழ்த்துக்கள்

## மேலதிக உள்ளடக்கங்கள்

வெற்றிகரமான திருமணவாழ்க்கை (இரகசியம் - 06)
ஹனிமூனில் ஒரு கொலை
ஜோக்ஸ்
அரிவாற்றல் மூலம் பெண் உலகை ஆளலாம்
நவீன ஊடகங்களும் பள்ளிக் காதலும்
காதலி தேடிக் கொடுத்த மனைவி
பெண் மருத்துவம்
வாங்கா மாத்தாய் எனும் தலைவி
இலக்கியக் காதல்
துத்தாள் செருப்பு
ஆன்மீக துணுக்கு
பெண்கள் எதிர் நோக்கும் சமூக சவால்கள்
பொருத்தமான முதலீட்டை தெரிவு செய்யுங்கள்
வல்லவனுக்கு புல்லும் ஆயுதம்
தன்னம்பிக்கை தொடர்
காத்திருக்கப் போகிறாள் குறுந் தொடர்
ஜூன் மாத இராசி பலன்
சீட்டும் அவலமும் குறும் படம்
சமூகத்தை நேசிக்கும் இல்லத்தரசி
மருத்துவ ஆலோசனை
வெளிநாட்டு மாப்பிள்ளை
விளையாட்டு துணுக்கு
சமையல் குறிப்பு

தொடர்புகளுக்கு : 0714273035

**உங்கள் பிரதிக்கு பத்திரிகை முகவர்களை நாடுங்கள்**


## முன்பள்ளி சிறாரின் விளையாட்டு விழா

பண்டத்தரிப்பு, ஜூன் 1

பண்டத்தரிப்பு மலரும் மொட்டுகள் பகல் பராமரிப்பு நிலைய பாலர் பாடசாலையின் விளையாட்டு விழா இன்று ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது. (ஓ)


# சேவை நலன் பாராட்டு



அச்சுவேலி அஞ்சல் அலுவலகத்தில் கடந்த 10 வருடங்களுக்கு மேலாக அஞ்சல் அதிபராக சேவையாற்றி 31.05.2014 அன்று ஓய்வு பெற்றுச் செல்லும்

**புண்ணியர் சிவஞானம்**

அவர்களை வாழ்த்துவதுடன் ஓய்வுக் காலம் இனிதாக அமைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

Best Wishes

அஞ்சல் அதிபர், உதவி அஞ்சல் அதிபர்கள், உப அஞ்சல் அதிபர்கள் மற்றும் அஞ்சலக ஊழியர்கள்
அச்சுவேலி.



# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



மலர்வு 01.03.1936 — உதிர்வு 02.05.2014

## அமரர் நல்லம்மா பொன்னுச்சாமி

கடந்த 02.05.2014 எம்மைவிட்டுப் பிரிந்த எமது குடும்பத்தலைவியின் மறைவுச் செய்தியறிந்து ஓடோடி வந்து உதவி ஒத்தாசை புரிந்த உற்றார், உறவினர், நண்பர்கள் மற்றும் அன்புள்ளங்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதுடன்,

இன்று (01.06.2014) ஞாயிற்றுக்கிழமை மு.ப.11 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப்பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அழைக்கின்றோம்.

இவ் அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

மட்டுவில், சாவகச்சேரி வடக்கு, சாவகச்சேரி. (43652)(12.3.6) குடும்பத்தினர்.



# யாழ்ப்பாணம் - வடமராட்சி, கிழக்குக்கரவையம்பதி

## அருள்மிகு நுணுவில் குளக்கட்டு ஸ்ரீ சித்தி விநாயகர் தேவஸ்தான பஞ்சதள இராஜகோபுர




காலம்:- இன்று (01.06.2014) ஞாயிற்றுக்கிழமை
காலை 6.27 மணிமுதல் 8.25 மணிவரையுள்ள
சுபவேளையில்.....

Causeway Luxury Emulsion, Luxury Shield, Kenlux 24k Gold, Kenlux Enamel Paint and Pearlescent Gold Emulsion மூலம் வர்ணம் தீட்டப்பட்டு காட்சிதரும் ஆலயம்.




CAUSEWAY
PAINTS LANKA (PVT) LTD

No. 15, Noel Mendis Mawatha, Modarawila Industrial Estate, Panadura, Sri lanka.
T.P: 0382240040-5, 2243166-9, 038 5599800-8
www.causewaypaints.com

## தவறிவிட்டது

காராளசிங்கம் சுரேன் (861072649V) என்பவருடைய தேசிய அடையாள அட்டை கடந்த மாதமளவில் யாழ்நகரை அண்டிய பகுதியில் தவறவிடப்பட்டுள்ளது. கண்டெடுத்த வர்கள் கீழ்காணும் தொலைபேசியின் ஊடாக அறியத்தரவும்.

(48650) (12.3.6) தொடர்பு: 077 967 2613

## வான் விற்பனைக்கு

50 - 9932 செல் மொடல் வான் விற்பனைக்குண்டு.

தொடர்பு: 076 668 7662 (48626) (45.6.3)

## வீடு வாடகைக்கு

உரும்பிராய், கோப்பாய் வீதியில் போதிய வாகனத்தரிப்புடன் வீடு வாடகைக்குண்டு. காரியாலயம்/நிறுவனம்/வகுப்பு நடத்துவது விரும்பத்தக்கது.

(71125) (12.3.6) தொடர்பு: 077 915 3536

உதயன் விளம்பரத் தொடர்புகளுக்கு 021 567 11 11 advt@uthayan.com

## நீங்கா நினைவுகளுடன்.....

17th YEAR



BORN 14 . 07 . 1935 — DIED 23 . 10 . 1997

**LATE.MR.N.RATNAVEL**

FCMA, FPFA, Dip.in.Accy S.L.Ac.S.I

RTD CHIEF ACCOUNTANT

*(Ministry of Fisheries & Aquatic Resources /Dept of Police)*

Men may follow
Many a famous icon
But we need not
You're our unique idol

You wore white
A symbol of might
Your deeds were refined
Because of its kind

Your sympathy, simplicity
Virtue, wisdom and piety
Good examples of loyality
Sure guides us eternally.

என இவ்வாறு.....

G.P.S.வீதி, கல்வியங்காடு.

முதலாம் ஆண்டு



அவனியில் 08 . 07 . 1978 — அரண்டியில் 12 . 06 . 2013

அமரர் **இரத்தினவேல் செந்தூரன்** (SLTS 2-I)

(Sp.Trd in English Teachers College, Maharagama)

திதி: 01.06.2014

அப்பாவுக்கு நினைவஞ்சலி எழுதிய எமது செல்வமே!
அவனியில் அப்பாவின் வழிநின்று வாழாது
மாளாத் துயரை எமது உணர்வு அழியும்வரை
அளித்து அப்பாவைத் தேடிச் சென்றீர்களோ!
எமது உயிரே! உணர்வே! உம்மை இழந்து
நித்தம் நித்தம் நொந்து வாடும் விதியைக் கடவுள்
எங்களுக்கு ஏன் அளித்தாரோ?
எங்களுக்குத் தேவையானவற்றைப் பார்த்துப் பார்த்துச்
செய்த உங்களை நினைக்கவும் முடியாமல்
மறக்கவும் முடியாமல்
நாம் படும் வேதனையை அறிவீர்களோ?
உங்கள் இருவரின் ஆத்மசாந்திக்காகப்
பிரார்த்திப்பதொன்றே
எமது சிந்தனையாக வாழ்கின்றோம்.
எம் தெய்வங்களே!

மனைவி, அம்மா,
மகள், தங்கை-செவ்வந்தி

(48644)(7.6.3)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்மசாந்திப் பிரார்த்தனை அழைப்பும்

அமரர்
**யோகேஸ்வரி இராசரத்தினம்**



மலர்வு 29 ★ 02 ★ 1952

உதிர்வு 02 ★ 05 ★ 2014

கடந்த 02.05.2014 வெள்ளிக்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவி திருமதி யோகேஸ்வரி இராசரத்தினம் அவர்களின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (01.06.2014) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும். தொடர்ந்து இடம்பெறும் ஆத்மசாந்திப்பிரார்த்தனையிலும் மதியபோசனநிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

*இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.*

மானிப்பாய் வீதி.
உரும்பிராய் மேற்கு. உரும்பிராய்.

குடும்பத்தினர்.

(48572)(3.6.4)

## காணவில்லை



ஈச்சமோட்டை யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த **ஸ்ரெல்லா பிரான்சிஸ்** என்பவரைக் கடந்த 3 நாள்களாகக் காணவில்லை. இவரைக்கண்டவர்கள் உடனடியாகக் கீழ்க்கண்ட இலக்கத்தினூடாக எமக்கு அறியத்தரவும்.

தொடர்பு: 077 727 1645, 021 222 5349


## எரிவாயுவை 60% வீதம் சேமிக்க விரும்புகிறீர்களா?

விலை அதிகரித்துவரும் எரிவாயுவின் (Gas) அளவை 60% சேமிக்க விரும்புகிறீர்களா? நவீன பாதுகாப்பு வசதிகளுடன் வடிவமைக்கபட்ட எரிவாயுவின் (Gas) அளவினை அறிந்து கொள்ளவும். தற்செயலாக ஏதாவது ஒரு சந்தர்ப்பத்தில் (Gas) லீக் ஆகினால் தானாகவே (Gas) துண்டிக்கப்படும். இரண்டு வருட உத்தரவாதத்துடன் Quontam Gas Cooker. Reguletar High Pressure Reguletar யாழ் நகரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

- செரண்டிப் என்ரப்பிறைஸ்
- வாசீகன் சேல் சென்ரர்
- துளசி மாடம்
- சிற்றி எலெக்ரோனிக்
- ப்றைட் எலெற்றிக்கல்
- மங்களா சோவ் றூம்
- ஜேலக்சன் பான்சி
- வர்சன் எலெக்ரோனிக்



செரண்டிப் என்ரப்பிறைஸ்
இல. 179, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்.
071 664 7692, 021 320 2552



(48653)(7.6.3)

## மரண அறிவித்தல்

### திருமதி ராஜேஸ்வரி சுப்பிரமணியம்



வேலணையைப் பிறப்பிடமாகவும், வட்டக்கச்சி இராமநாதபுரத்தை வசிப்பிடமாகவும், பிரான்ஸைத் தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட திருமதி ராஜேஸ்வரி (ராசாத்தி) சுப்பிரமணியம் 29.05.2014 வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை -ராசம்மா தம்பதியரின் பாசமிகு மகளும், காலஞ்சென்றவர்களான தம்பிப்பிள்ளை - ராசம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், சுப்பிரமணியத்தின் (மணியம்) அருமை மனைவியும், கிருஷ்ணகுமாரி (வசந்தி - சுவிஸ்), விக்னேஸ்வரன் (நாதன்- ஜேர்மனி), ஜெயகுமாரி (ஜெயா - பிரான்ஸ்), ஜெகதீஸ்வரன் (ஜெகன் - பிரான்ஸ்), கேதீஸ்வரன் (கேதீஸ் - பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தாயும், காலஞ்சென்றவர்களான பராசக்தி, கந்தசாமி, தங்கராசா, துரைராசா மற்றும் மாரிதேவி ஆகியோரின் அன்புச்சகோதரியும், ஜெயராஜா (ஜெயன் - சுவிஸ்), சுபாஜினி (சுபா - ஜேர்மனி), குணசீலன் (குணம் - பிரான்ஸ்), டயானா (பிரான்ஸ்), சரண்யா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியும், கனகம்மா, கமலாம்பிகை, காலஞ்சென்றவர்களான செல்லம்மா, சுந்தரம்பிள்ளை ஆகியோரின், மைத்துனியும், நிஷானி, நிதுஷா, ஜெனுஷா, திவ்யா, திவ்யன், சருண், ஆருஷா, அஸ்வின், ஆதிஸ், டயான், டனோஜன் ஆகியோரின் செல்லப்பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (02.06.2014) திங்கட்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் (71 RUEDES - RONDEAUX 75020) பாரிஸ், பிரான்ஸில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :

விக்னேஸ்வரன் (மகன்- நாதன் - ஜேர்மனி),
சுபா (ஜேர்மனி),

தொ.பே.4917 3675 3919,
4971 1664 5223

(43333) (45.3.6)

# Immediate Vacancies

## SALES EXECUTIVES (AUTOMOTIVE PAINTS)

- More than 3 Years experience **in Paints or Hardware field.**
- Age below 30 Years.
- Should be a self-motivated and result oriented professional.
- Preference will be given to candidates who have previous **experience in selling Automotive paints.**
- Fluent in English language is essential and communicate in Tamil language would be an added advantage.
- Should have a valid Driving Licence and be to work any part of the Island.

Apply with complete CV and **indicating the post** on the top left hand corner of the Envelope to reach us within 7 days to the address below.

General Manager
Causeway Paints Lanka (Pvt) Ltd
15, Noel Mendis Mawatha,
Moderawila Industrial Estate,
Panadura

C.P.T. CAUSEWAY PAINTS

## மரண அறிவித்தல்



## ஐயம்பிள்ளை தம்பிமுத்து

( இளைப்பாறிய பிரதி கல்வி ஆணையாளர்–கல்வி வெளியீட்டு திணைக்களம் )

அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும், மட்டுவில் சாவகச்சேரி மற்றும் கொழும்பு கல்கிசையை வசிப்பிடமாகவும் கொண்ட ஐயம்பிள்ளை தம்பிமுத்து 30.05.2014 வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஐயம்பிள்ளை-முத்துப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், சின்னத்தம்பி-சின்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், சிவயோகத்தின் அன்புக் கணவரும், தேஜஸ்வினி, யஸஸ்வினி, சுசித்வினி ஆகியோரின் பாசமிகு அப்பாவும், தம்பிராஜா, வபீந்திரராஜன், அஜந்தன் ஆகியோரின் அன்பு மாமனும், ஷரோன், அமிர்தன், வாஜஸ்பதி, அகவரன் ஆகியோரின் செல்லத் தாத்தாவும், ராணியம்மா, சித்திரலேகா, ராமச்சந்திரன், ரூபவதி, சிவமணியம், காலஞ்சென்ற சிவமூர்த்தி ஆகியோரின் அன்புச் சகோதரரும், குணராஜா, சந்திரசேகரம் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.06.2014) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் நடைபெறும். அதனைத் தொடர்ந்து அன்னாரின் பூதவுடல் பிற்பகல் 5.00 மணியளவில் கல்கிசை பொதுமயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.
இல: 30/2, தக்சினராம வீதி, கல்கிசை.
+94 112739481, +94 773 289048

## ஓட்டோ விற்பனைக்கு

மிகவும் நல்ல நிலையில் உள்ள ஓட்டோ உடன் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: 077 579 0147 (48662) (10)

## வாடகைக்கு

கல்வியங்காடு பொதுச் சந்தைக்குப் பக்கத்தில் ஆடியபாதம் வீதியில் கடை ஒன்று வாடகைக்கு உண்டு.

(48657) (10) தொடர்பு: 077 110 7232

## வீடு வாடகைக்கு

நல்லூருக்கு அருகாமையில் வீடு வாடகைக்கு உண்டு. T.P:077 238 5894

Advance 200,000/= Rent - 7,000/= (48655) (10)

## காணி விற்பனைக்கு

பலாலி வீதி, பாம்ஸ்கூலுக்கு முன் கலைவாணி ஒழுங்கையில் இரண்டாம் காணி (8 பரப்பு தோட்டக்காணி) விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: 021 222 4298 (48658) (10)

## Vacancy

எமது யாழ். காரியாலயத்துக்கு கீழ்க் காணும் பதவி வெற்றிடங்களுக்கு துடிப்புள்ள. அனுபவம் வாய்ந்த. நற்பண்பும் தன்னம்பிக்கையுமுள்ள விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. Accountant - Female - 1
2. Customer Relation Officer - Female - 1
3. Sales Executive - Male - 3

வயது : 20 - 35

அனுகூலங்கள்: 1. மாதாந்த சம்பளம் (Basic Salary) 2. கொடுப்பனவுகள் (Allowance) 3. Bonus 4. EPF, ETF

தகைமையுடையவர்கள் உங்கள் சுயவிவரக்கோவையை (CV) கீழ்க்காணும் முகவரிக்கு அல்லது மின்னஞ்சல் முகவரிக்கு 07 நாள்களுக்குள் கிடைக்குமாறு அனுப்பி வைக்கவும்.

R. Rajeswaran,
Uduvil South, Saththiyapuram, Chunnakam.
T.P: 077 9856699 / 077 037 7710 - மேலதிக விவரங்களுக்கு
E.mail: qualityrow@gmail.com (48663) (10)

## வேலை வாய்ப்பு

மிகவும் குறைந்த முதலீட்டில் உயர விரும்பும் உங்களுக்கு அங்கீகாரம் பெற்ற ஆயுள்வேத நிறுவனத்தில், ஆயுள்வேத மருந்து மற்றும் அழகு சாதனப் பொருள்களை விநியோகிப்பதற்கு பிரதிநிதிகள் தேவை.

அழகுக் கலை நிபுணர்கள் மற்றும் சுய தொழிலில் (ஆயுள்வேத) ஆர்வமுடையோரும் தொடர்பு கொள்க.

9 AM - 5 PM 077 226 3216, 077 912 8944

(48665) (10) 45, Muneeswaran Veethy, Jaffna.

## மரண அறிவித்தல்

### திருமதி இலட்சுமி அண்ணாமலை



மட்டுவில் தெற்கு சிவன்கோயிலடியைப் பிறப்பிடமாகவும், நல்லூர் சங்கிலியன் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இலட்சுமி அண்ணாமலை 31.05.2014 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதி - வள்ளி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற அண்ணாமலையின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற கனகம்மா மற்றும் பொன்னம்மா ஆகியோரின் பாசமிகு சகோதரியும், மகேந்தி ரனின் (ஓய்வுபெற்ற வருமான பரிசோதகர் - யாழ்.மாநகரசபை) பாசமிகு தாயாரும், பாலநாகம்மாவின் அன்பு மாமியாரும், மயூரன் (பிரான்ஸ்), ரூபஜென்சி (பிரான்ஸ்), மதுராந்தன் (சுரேஸ் - நல்லூர் ரதி ஜூவெல்லறி - உரிமையாளர்), மயூரதி (காரைநகர் பிரதேச செயலகம்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.06.2014) ஞாயிற்றுக்கிழமை பி.ப.2.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக செம்மணி இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

31/29, சங்கிலியன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். (48633) (12.3.6)

தகவல்: அ.மகேந்திரன் (மகன்)

## மரண அறிவித்தல்

### திருமதி சண்முகம் கனகம்மா (ருக்குமணி)



விஸ்வகுல வீதி, பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சண்முகம் கனகம்மா நேற்று (31.05.2014) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற முருகன் சண்முகத்தின் பாசமிகு மனைவியும், வல்லிபுரம் (கொக்குவில்), கந்தசாமி (லண்டன்), பத்மலோசனா (பவானி), சந்திரலோசனா (கொழும்பு), சாந்தகுமாரி, சத்தியபாமா (ஜேர்மனி), நந்தினி (கைதடி), சிவகுமார் ஆகியோரின் பாசமிகு தாயும், தியாகேஸ்வரி, பிறேமலாதா (லண்டன்), காலஞ்சென்ற சப்பிரமணியம் மற்றும் மனோசயன், சிவானந்தராசா, தமிழ்ச்செல்வன், கந்தசாமி, சசீதா ஆகியோரின் அன்பு மாமியும், சுகிர்தா, குகன், மயூரன், மயூரி, மோதீஸ், காயத்திரி, கஸ்தூரி, தர்ஷன், லோகிதாசன், லோகிர்தா, ரிலோஜிதன், பரணிதரன், அபிதரன், அஜிதரன், மதுசன், விதுசன், மதுநிசா ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (01.06.2014) ஞாயிற்றுக்கிழமை நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் 2.00 மணிக்கு கோரியடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

விஸ்வகுல வீதி, புலோலி வடக்கு, பருத்தித்துறை. (C13951) (10)

தகவல்: R. துஸ்யந்தன் (பேரன்).

# மரண அறிவித்தல்



## இராமநாதர் மகாலிங்கம்

புங்குடுதீவு 2 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும். தற்போது கனடாவில் வசித்தவருமாகிய இராமநாதர் மகாலிங்கம் நேற்று (31.05.2014) சனிக்கிழமை புங்குடுதீவில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராமநாதர்-தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும். காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை-பெரிய தங்கச்சி தம்பதியரின் அன்பு மருமகனும். புவனேஸ்வரி (குணம்) அவர்களின் அன்புக் கணவரும். கேதாரகெளரி (கனடா) மகேஸ்வரன் (ஜேர்மனி) சத்தியபவானி, சுசீலாதேவி (கனடா) ஜெகதீஸ்வரன் (திலகா மல்ரி சென்ரர் பொற்பதி கொக்குவில்) சிவனேஸ்வரன் (கனடா) ஞானேஸ்வரன் (சுவிஸ்) காலஞ்சென்ற சதீஸ்வரன் மற்றும் வசந்தகுமாரி ஆகியோரின் பாசமிகு தந்தையும். சிவநேசன் (நேசன் புடைவையகம் புங்குடுதீவு-2) லதா (ஜேர்மனி) முத்துலிங்கம், சிவநேசன் (கனடா) திலகவதி, வசந்தி (கனடா) ரூபி (சுவிஸ்) ஸ்ரீகாந்தன் (பிரதேச சபை உப அலுவலகம் - புங்குடுதீவு) ஆகியோரின் அன்பு மாமானும், காலஞ்சென்றவர்களான விசுவலிங்கம், முத்தையா, நாகம்மா மற்றும் சின்னம்மா (யாழ்ப்பாணம்) அன்னம்மா (வேலணை) ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்றவர்களான துரைச்சாமி, சுப்பிரமணியம் மற்றும் தியாகராசா (ஜேர்மனி) பூரணம் காலஞ்சென்ற அன்னம்மா மற்றும் சபாரெத்தினம் (முழங்காவில்) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

2 ஆம் வட்டாரம், புங்குடுதீவு. (48660) (10)

தகவல் : மனைவி, பிள்ளைகள், மருமக்கள்.

# அரசியல் கெடுபிடிகளால் இலங்கையில் பணிகளை குறைத்துக்கொள்ளத் திட்டம்

## அமெ.அபிவிருத்தி உதவி நிறுவனங்கள் முடிவு

கொழும்பு, ஜூன் 01

இலங்கையில் நிலவும் கடும் அரசியல் நெருக்கடிகளால் தங்கள் பணிகளைப் பரவலாக மேற்கொள்ள முடியாதுள்ளது என அபிவிருத்திக்கான அமெரிக்க உதவி முகவர் நிறுவனங்கள் கவலை தெரிவித்துள்ளன. அதனால் தம் பணிகளை குறைத்துக்கொள்ள அவை முன்வந்துள்ளன.

அதேவேளை, இலங்கையில் இடம்பெற்ற இறுதிக்கட்டப் போரின் போது இழைக்கப்பட்ட குற்றங்கள் தொடர்பான முறையீடுகள் குறித்து, இலங்கையின் பொறுப்புக்கூறும் கடப்பாட்டை அமெரிக்கா சர்வதேச மட்டத்தில் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றது.

ஜனநாயகம், சட்ட நடைமுறை, கடைபிடிக்கப்படும் மனித உரிமைகள் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டே அமெரிக்கா இலங்கைக்கு நிதியுதவி அளித்து வருகிறது. இந்நிலையில், 2013ஆம் ஆண்டு இலங்கைக்கான அமெ ரிக்காவின் நிதி உதவியில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது என அறிக்கையொன்று சுட்டிக்காட்டியுள்ளது.

ஜனநாயகம், மனித உரிமைகள், நிர்வாகம், சமாதானம், பாதுகாப்பு ஆகியவை சம்பந்தப்பட்ட துறைகளைத் தவிர்ந்த ஏனையவற்றுக்கான அமெரிக்க உதவியில் விழுக்காடு ஏற்பட்டுள்ளது என்றும் மேற்படி அறிக்கை விவரித்துள்ளது.

இலங்கையில் நல்லிணக்கப்பாட்டுக்கும், பொறுப்புக் கூறல் கடப்பாட்டை மேற்கொள்வதற்கும் காத்திரமான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை என நிதியுதவி நல்கும் முகவர் நிறுவனங்கள் குறிப்பிட்டுள்ளன.

ஆசிய, பசுபிக் பிராந்தியத்துக்கான உப குழுக் கூட்டத்தில், அமெரிக்க அபிவிருத்தித் திட்டப்பதில் துணை நிர்வாகி டெனிஸ் ரோலின்ஸ் இது குறித்து பேசுகையில்; "இலங்கையிலுள்ள உள்ளூர் அமைப்புகளுக்கான முதலீடுகளை முகவர் நிறுவனம் நேரடியாக அதிகரிக்கின்றது. எனினும், கடுமையான அரசியல் கெடுபிடிகள் பரவலாக முகவர் நிறுவனப் பணிகள் இடம்பெற குந்தகமாக உள்ளன; பணிகளை வரையறுக்கின்றன" என குறிப்பிட்டுள்ளார்.

"இந்த இடர்பாடுகளால் அமெரிக்க அபிவிருத்தி உதவித் திட்ட நிறுவனத்தின் பணிகளை இலங்கையில் குறைத்துக் கொள்வதற்கு திட்டமிடப்படுகிறது" என்றும் ரோலின்ஸ் தெரிவித்துள்ளார்.

"நல்லிணக்கப்பாட்டையும், மக்களுக்கான பெறுமானமுள்ள நிகழ்ச்சித் திட்டங்களையும் ஊக்குவிக்கும் பொருட்டு, அமெரிக்க அபிவிருத்தி உதவி முகவர் நிறுவனம் தொடர்ந்தும் தனது பங்களிப்பை நல்கும்" என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அமெரிக்க அரசின் அனைத்து முகவர் நிறுவனங்களின் இலங்கைக்கான நிதியுதவியில், 2011ஆம் ஆண்டில், 151.6 மில்லியன் டொலர்களிலிருந்தும், 2012இல் 168.3 மில்லியன் டொலர்களிலிருந்தும், 2013இல், 46.6 மில்லியன் டொலர்களிலிருந்தும் விழுக்காடுகள் ஏற்பட்டுள்ளன என அமெரிக்க அரசின் வெளி உதவித் திட்ட அமைப்பு தகவல் வெளியிட்டுள்ளது.

மனிதாபிமான நிலக்கண்ணிவெடி அகழ்வுத் திட்டத்தைத் தவிர, இலங்கை விமானப் படை, இலங்கை இராணுவம் ஆகியவை சம்பந்தப்பட்ட தொடர்புகளில் அமெரிக்க அரசு தற்போது கட்டுப்பாடுகளைக் கடைபிடிக்கின்றது என அமெரிக்க தூதரக பேச்சாளர் ஒருவர் டெய்லி எப்டி நிறுவனத்திடம் தெரிவித்துள்ளார்.

(த-சி)

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### அனானை

இலங்கை அரசு தொடர்ச்சியாகத் தெரிவித்து வந்த போதும், இது தொடர்பில் ஐ.நா. சபைக்கு உத்தியோகபூர்வமாக எதுவும் தெரிவிக்கப்படவில்லை.

இவ்வாறானதொரு நிலையில் விசாரணைக் குழுவின் தலைவராக, முன்னாள் பொதுச் செயலாளர் கோபி அனான் நியமிக்கப்பட்டால் அவரை இலங்கைக்குள் அனுமதிப்பதற்கு அரச உயர் மட்டத்தின் ஒரு தரப்பினர் விருப்பம் தெரிவித்துள்ளனர் கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இலங்கையில் போர்க் காலத்தில் இடம்பெற்ற மனிதாபிமானச் சட்ட மீறல்கள், மனித உரிமை மீறல்கள் தொடர்பில், ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்தினால் சர்வதேச விசாரணை மேற்கொள்ளப்படவுள்ளது. இந்த விசாரணைக் குழுவை ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளையே நியமிக்கவுள்ளார்.

பெரும்பாலும், ஐக்கிய நாடுகள் சபையின் முன்னாள் பொதுச் செயலாளரும், நோபல் பரிசு பெற்றவருமான கோபி அனான் இதற்கு நியமிக்கப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. அவ்வாறு கோபி அனான் நியமிக்கப்படும் சந்தர்ப்பத்தில், விசாரணைகள் மேற்கொள்வதற்காக அவர் இலங்கைக்கு வருவதற்கான விசா வழங்குவதா? இல்லையா? என்பது தொடர்பில் அரச உயர் மட்டத்தில் கருத்து வேறுபாடுகள் தோன்றியுள்ளன.

ஐ.நா. விசாரணைக்கு எவரையும் அனுமதிக்கப் போவதில்லை என்ற இறுமாப்புடன் இருந்த அரச உயர் மட்டம் கோபி அனான் விடயத்தில் குழம்பிப் போயுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கோபி அனான் இலங்கைக்குள் வருவதற்கு விசா வழங்க வேண்டும் என்று ஒரு தரப்பினரும், முன்னரே தெரிவிக்கப்பட்டதைப் போன்று எவரையும் விசாரணைக்கு அனுமதிக்கக் கூடாதென்று அரசின் மற்றொரு உயர் மட்டத்தினரும் கருத்து வெளியிட்டுள்ளனர்.

இதனால் அரச தரப்பு கோபி அனான் விடயத்தில் குழம்பிப் போயிருப்பதாக கொழும்பு அரசியல் நோக்கர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். (த-5)

### முதல்

ணம் மேற்கொள்ளுவார் என்று அந்த வட்டாரங்கள் மேலும் கூறின.

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் பதவியேற்பு விழாவுக்குச் சென்ற ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, மோடியை இலங்கைக்குப் பயணம் செய்யுமாறு அழைத்திருந்தார். ஜனாதிபதி மஹிந்தவின் அழைப்பை இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி ஏற்றிருந்தார். இருப்பினும் எப்போது இலங்கைக்குப் பயணம் மேற்கொள்ளுவார் என்பது தொடர்பில் எதுவும் தெரிவிக்கப்பட்டிருக்கவில்லை.

இவ்வாறானதொரு நிலையில் புதுடில்லி இராஜதந்திர வட்டாரங்களின் தகவல்களின்படி, இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி நூறு நாள் வேலைத் திட்டத்தை நடைமுறைப்படுத்தியுள்ளார். அந்த வேலைத் திட்டம் முடியும் வரையில் அவர் எந்தவொரு நாட்டுக்கும் பயணம் மேற்கொள்ளமாட்டார். அதன் பின்னரே அவரது வெளிநாட்டுப் பயணங்கள் அமையும். இலங்கைக்கே முதலில் பயணம் மேற்கொள்வார் என்பதுடன் வடக்கு - கிழக்குப் பகுதிகளை நேரில் சென்று பார்வையிடுவார் என்றும், நுவரெலியாவிலுள்ள சீதா எலிய அம்மன் கோயிலில் அவர் விசேட வழிபாடு நடத்துவார் என்றும் தெரிய வருகிறது.

இந்தியப் பிரதமர் இலங்கைக்கு வருகை தருவதற்கு முன்னதாகவே, வெளிவிவகார அமைச்சர் சுஷ்மா சுவராஜ் இலங்கைக்குப் பயணம் மேற்கொள்வார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-5)

### மயங்கி

மாவை சேனாதிராசா திடீரென மயங்கிச் சரிந்தார். எனினும் அருகில் இருந்த ஏனைய நாடாளுமன்ற உறுப்பினர்களும் பிரமுகர்களும் அவரைத் தாங்கிப் பிடித்துக் கொண்டனர்.

சற்று நேரத்தில் தன்னை ஆசுவாசப்படுத்திய பின்னர் அவர் வழமை நிலைக்குத் திரும்பினார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினால் சமகால அரசியல் நிலைமைகள் தொடர்பில் மக்களை விழிப்புணர்வூட்டும் நடவடிக்கையாக அனைத்துலகச் சமூகமும் தமிழ் தேசிய அரசியலும் - ஒரு சமகாலப் பார்வை என்ற தலைப்பில் மட்டக்களப்பு கல்லடியில் கருத்தாடல் நிகழ்வு நேற்று பிற்பகல் 3 மணியளவில் இடம்பெற்றது.

இந்தக் கூட்டத்தில் தமிழ் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராசா, எம்.ஏ.சுமந்திரன், செல்வம் அடைக்கலநாதன், பா.அரியநேந்திரன், பொன்.செல்வராசா ஆகியோர் பங்கெடுத்திருந்தனர்.

இதன்போது நடாளுமன்ற உறுப்பினர் மாவை. சேனாதிராசா உரையாற்றினார். சுமார் 50 நிமிடங்களுக்கு மேலாகச் சமகால அரசியல் நிலைமைகள் தொடர்பில் அவர் உரையாற்றிக் கொண்டிருந்தபோது தீடீரென மயங்கிச் சரிந்தார். அருகிலிருந்தவர்கள் அவரைத் தாங்கிப் பிடித்து அருகில் கிடத்தினர்.

சிறிது நேரத்திலேயே அவர் இயல்பு நிலைக்குத் திரும்பினார். அதன் பின்னர் கூட்டம் இடம்பெற்றது.

இதேவேளை - கடந்த வருடம் கிளிநொச்சியில் இடம்பெற்ற மே தினக் கூட்டத்தின்போதும், உரையாற்றிக் கொண்டிருக்கையில் மாவை மயங்கிச் சரிந்தமை குறிப்பிடத்தக்கது. (த-5)

### வவுனியா

நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை தெரிவித்துள்ளார்.

சிறைச்சாலையில் இடம்பெற்ற கலவரத்தில் உயிரிழந்த டெல்றொக்ஷன் சார்பில் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மீறல் மனு மீதான விசாரணை உயர் நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்றது. இதன்போதே அரச தரப்பு சட்டத்தரணி இவ்வாறு தெரிவித்தார்.

கடந்த 2012 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 29ஆம் திகதி, வவுனியா சிறைச்சாலையிலுள்ள தமிழ் அரசியல் கைதிகள் தமது கோரிக்கைகளை நிறைவேற்றுமாறு கோரி சிறைக் காவலர்கள் மூவரைத் தடுத்து வைத்திருந்தனர். கைதிகளிடமிருந்து சிறைக் காவலர்களை மீட்பதற்காக பொலிஸ் மற்றும் விசேட அதிரடிப்படையினர் வரவழைக்கப்பட்டிருந்தனர்.

அவர்கள் மேற்கொண்ட நடவடிக்கையினால் சிறைக் காவலர்கள் மீட்கப்பட்டனர். இந்தச் சம்பவத்தின்போது தமிழ் அரசியல் கைதிகள் மீது மிக மோசமான தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன. இதில் பல கைதிகள் கடுமையான காயங்களுக்கு உள்ளாகினர். அந்தச் சம்பவத்தில் கடுமையான தாக்குதல்களுக்கு உள்ளான இரு தமிழ் அரசியல் கைதிகள் உயிரிழந்திருந்தனர்.

வவுனியாவைச் சேர்ந்த நிமலரூபனும், யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த டெல் றொக்ஷனுமே உயிரிழந்தவர்களாவார்.

டெல் றொக்ஷன் வவுனியா சிறைச்சாலையில் வைத்து மோசமாக தாக்கப்பட்டதுடன், அநுராதபுரம் சிறைச்சாலைக்கு மாற்றப்பட்டு அங்கும் தாக்கப்பட்ட பின்னர், கொழும்பு மகர சிறைச்சாலைக்குக் கொண்டு செல்லப்பட்டார். கோமா நிலையில் 38 நாள்கள் ராகம வைத்தியசாலையில், கை மற்றும் காலில் சங்கிலிகள் பிணைக்கப்பட்ட நிலையில் வைக்கப்பட்டிருந்தபோதே அவர் உயிரிழந்திருந்தார்.

சிறையிலிருந்தபோது உயிரிழந்த டெல் றொக்ஷன் சார்பில் தாக்கல் செய்யப்பட்ட மனு மீதான விசாரணை உயர் நீதிமன்றத்தில் தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்றது.

நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற விசாரணையின்போது மன்றில் முன்னிலையான அரச தரப்பு சட்டத்தரணி, டெல்றொக்ஷனே கைதிகளின் போராட்டத்துக்குத் தலைமை தாங்கியுள்ளார். அத்துடன் அவர் ஆயுதங்களையும் வைத்திருந்துள்ளார். அங்கு கண்ணீர்ப் புகைக் குண்டு களை வீசியே சிறைக் காவலர்களை மீட்டனர். இதன்போது சிறியதொரு பாதையினூடாகவே கைதிகள் வெளியேற்றப்பட்டிருந்தனர். இதனால் ஏற்பட்ட உரசல்களிலேயே டெல்றொக்ஷன் உடலில் காயங்கள் ஏற்பட்டன என்று தெரிவித்தார்.

இதன்போது மனுதாரர் சார்பில் சிரேஷ்ட சட்டத்தரணி ஜே.சி.வெலியமுன மன்றில் முன்னிலையாகியிருந்தார்.

அரச தரப்பு சட்டத்தரணி பல்வேறு ஆட்சேபங்களைத் தெரிவித்தமையால், நீதியரசர் குழாம், ஆட்சேபங்களை எழுத்து மூலமாகச் சமர்ப்பிக்குமாறு உத்தரவிட்டு வழக்கை அடுத்த மாதம் 11 ஆம் திகதிக்கு ஒத்தி வைத்தது. (த-5)

### ஐ.நாவின்

தெரிவித்தார்.

அவர் தனது உரையில் மேலும் கூறியதாவது:

"ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான இலங்கை அரசால் சர்வதேச சமூகத்துக்குக் கொடுக்கப்பட்ட வாக்குறுதிகள் எதுவும் இதுவரை நிறைவேற்றப்படவில்லை. இந்த நிலையில், ஐ.நாவின் இலங்கைக்கு எதிரான விசாரணை ஆரம்பமாகவுள்ளது.

இலங்கையில் இடம்பெற்ற போர்க் குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் உண்மைகள் வெளிப்படவேண்டும் என்பதே இந்த விசாரணையின் நோக்கமாகும்.

ஜூன் மாத நடுப்பகுதியில் சர்வதேச விசாரணை ஆரம்பமாகவுள்ளது. இந்த விசாரணை, குற்றத்துக்காகத் தண்டிக்கப்படுவதற்கப்பால் எமது தமிழின அரசியல் தீர்வுக்கான வழிவகையை உறுதி செய்யும். எனவே, தமிழினத்துக்கு நீதியான விடுதலை கிடைக்கும் என்ற நம்பிக்கை வீண்போகாது என்பதற்காகக் கட்டுக்கோப்புடனும், நிதானமாகவும் நாம் செயற்பட வேண்டும்" - என்றார்.

இந்தக் கூட்டங்களில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராஜா, நாடாளுமன்ற உறுப்பினர்களான பொன். செல்வராஜா, செல்வம் அடைக்கலநாதன், பா.அரியநேந்திரன், கிழக்கு மாகாண சபையின் கூட்டமைப்பின் மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களின் உறுப்பினர்கள் மற்றும் கூட்டமைப்பின் உள்ளூராட்சி சபைகளின் உறுப்பினர்கள் ஆகியோரும் கலந்து கொண்டு உரையாற்றினர். (த)

### மிதிவெடியினால்

சம்பவம் இடம்பெற்றுள்ளது.

அதே இடத்தைச் சேர்ந்த உதயகுமார் கவிதரன் (வயது-14) என்ற பாடசாலை மாணவனின் வலது கால் முழங்காலின் கீழ் சத்திரசிகிச்சையின் மூலம் அகற்றப்பட்டுள்ளது.

கிளாலி மகா வித்தியாலயத்தில் தரம் 9 இல் கல்வி பயிலும் குறித்த சிறுவன், பாடசாலை விடுமுறை தினமாகிய நேற்றுச் சனிக்கிழமை காலை தனது நண்பர்களுடன் கிளாலிக் கடற்கரையில் விளையாடுவதற்குச் சென்றுள்ளார்.

கடற்கரை ஓரமாக சிறிது தூரம் நடந்து சென்ற வேளை மணலில் புதைந்திருந்த மிதிவெடி வெடித்துள்ளது.

சம்பவத்தின்போது உடனிருந்த நண்பர்கள் சிறுவனின் அருகில் சென்று பார்த்தபோது அவன் இரத்த வெள்ளத்தில் கிடந்ததைக் கண்டு அவனை மீட்டு அருகில் இருந்த ஓட்டோ மூலம் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். அதன் பின்னர் சிறுவனின் பெற்றோருக்குத் தகவல் தெரிவித்துள்ளனர்.

சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் சிறுவனுக்கு முதலுதவி வழங்கிய பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா மருத்துவமனைக்கு அவர் மாற்றப்பட்டுள்ளார். யாழ். போதனா வைத்தியசாலையில் சிறுவனின் வலது கால் முழங்காலுக்குக்கீழ் சத்திரசிகிச்சையின் மூலம் அகற்றப்பட்டதாகச் சிறுவனின் பெற்றோரும் உறுதிப்படுத்தினர்.

அதேவேளை, கிளாலி பகுதியில் மிதிவெடி அகற்றும் பணி நிறைவடைந்து விட்டதாக மிதிவெடி அகற்றும் நிறுவனத்தினர் கூறி வருகின்ற போதிலும் அங்கு முழுமையாக மிதிவெடிகள் அகற்றப்படவில்லை.

அதனால் பல பகுதிகளுக்குச் செல்ல முடியாமல் பெரும் சிரமத்தை எதிர்நோக்குவதாகவும் அப்பகுதி மக்கள் விசனம் தெரிவித்தனர்.

(த-4-9-106)

### தெற்கு

யாழ். மாவட்டத்தில் சிலிண்டர் பயன்படுத்திக் கடல் அட்டை பிடிப்பதில் ஈடுபட முடியாதென்றும், முல்லைத்தீவு மாவட்டத்தின் கடற்கரையிலிருந்து 20 கிலோ மீற்றர் தொலைவிலேயே கடல் அட்டைப் பிடிக்கலாம் என்றும் நிபந்தனையுடன் அனுமதி வழங்கியிருந்தது.

இந்த அனுமதியைப் பயன்படுத்தி முல்லைத்தீவு மாவட்டத்தின் பேப்பாறைப்பிட்டியில் தங்கியுள்ள தென்னிலங்கை நிறுவனம், கடல்வழியாக யாழ். கடற்பரப்புக்குள் நுழைந்து சட்டவிரோத முறைகளைப் பயன்படுத்திக் கடல் அட்டைப் பிடிப்பதில் ஈடுபட்டுள்ளது.

யாழ்.மாவட்டச் சங்கங்களின் அனுமதியின்றி சட்டவிரோதமாக மேற்கொள்ளும் இந்த நடவடிக்கை தொடர்பில் யாழ். மாவட்டக் கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களத்தினால் பணிப்பாளர் நாயகத்துக்கு அறிக்கை அனுப்பப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(த-5)

# 19 வயது பெண்கள் கபடி நெல்லியடி மத்தி சம்பியன்



சம்பியன் பெற்ற அணியினர்

யாழ்ப்பாணம், ஜூன் 1

வட மாகாணப் பாடசாலைகளுக்கு இடையிலான 19 வயதுப்பிரிவு பெண்களுக்கான கபடிப் போட்டியின் இறுதியாட்டத்தில் நெல்லியடி மத்திய கல்லூரி அணி வெற்றி பெற்றுச் சம்பியன் ஆனது.

நெல்லியடி மத்திய கல்லூரி அணியை எதிர்த்து பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை அணி மோதிக்கொண்டது.

இதில் நெல்லியடி மத்திய கல்லூரி அணி 23:17 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி பெற்றது.

மூன்றாமிடத்துக்கான ஆட்டத்தில் முத்துஐயன்கட்டு அ.த.க. பாடசாலை அணியை எதிர்த்து கிளிநொச்சி சிவநகர் அ.த.க. பாடசாலை அணி மோதிக்கொண்டது. இதில் கிளிநொச்சி சிவநகர் அ.த.க. பாடசாலை அணி 17:10 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றிபெற்றுமூன்றாமிடத்தைத் தனதாக்கிக் கொண்டது. (த-23)

# இளையோர் கூடைப்பந்தாட்டம் இன்று யாழ்ப்பாணத்தில் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜூன் 1

யாழ்.மாவட்டக் கூடைப்பந்தாட்டச் சங்கம் முதன் முறையாக யாழ். மாவட்டத்தில் நடத்தும் இளையோருக்கானகூடைப் பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆரம்ப நிகழ்வுகள் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 6 மணிக்கு யாழ். மத்திய கல்லூரி கூடைப்பந்தாட்டத் திடலில் இடம்பெறவுள்ளது.

சிறப்பு நிகழ்வாக 15 வயதுப் பிரிவு ஆண்,பெண் இருபாலாருக்குமான நட்பு ரீதியான கூடைப்பந்தாட்டப் போட்டி இடம்பெறவுள்ளது.

ஆண்களுக்கான போட்டியில் மானிப்பாய் ஏஞ்சல் சர்வதேச பாடசாலை அணியை எதிர்த்து யாழ்.இந்துக்கல்லூரி அணியும் பெண்களுக்கான போட்டியில் உடுவில் மகளிர் கல்லூரி அணியை எதிர்த்து இராமநாதன் மகளிர் கல்லூரி அணியும் மோதவுள்ளது.

மேற்படி போட்டியில் 54 அணிகள் பங்குபற்றுகின்றமை குறிப்பிடத்தக்கது. (த-23-86)

# இன்றைய ஆட்டங்கள்



யாழ்ப்பாணம், ஜூன் 1

மன்னார் உதைபந்தாட்ட லீக்கினால் நடத்தப்படும் முதற் தர அணிகளுக்கு இடையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் தாழ்வுபாடு ஆயர் ஜோசப் ஆண்டகை விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.

இன்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெறும் ஆட்டத்தில் பனங்கட்டிக்கொட்டு புனித சூசையப்பர் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து தோட்டவெளி ஐக்கிய விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (த-23)

★ ★ ★

யாழ்ப்பாணம், ஜூன் 1

யாழ். மாவட்ட தாச்சிச் சங்கத்தின் அனுமதியுடன் தாவடி காளியம்பாள் விளையாட்டுக்கழகம் மின்னொளியில் நடத்தும் லீக் முறையிலான தாச்சிச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் தாவடி காளியம்பாள் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.

இன்று ஞாயிற்றுக்கிழமை இரவு 7.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் மடத்தடி வைகறை விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து மயிலிட்டி வள்ளுவர் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (த-23)

# யூனியன் கல்லூரி வெற்றி

வலி.வடக்கு, ஜூன் 1

யாழ்.மாவட்டப் பாடசாலைகளின் 15 வயதுப் பிரிவு அணிகளுக்கு இடையே யாழ். மாவட்டப் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் ஆதரவுடன் நடைபெறும போட்டி ஒன்றில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரிஅணி 07 இலக்குகளினால் வெற்றி பெற்றது.

தெல்லிப்பழை யூனியன் கல்லூரி மைதானத்தில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற ஆட்டத்தில் கோண்டாவில் இந்து மகா வித்தியாலய அணியும் யூனியன் கல்லூரி அணியும் மோதிக் கொண்டன.

முதலில் துடுப்பெடுத்தாடிய கோண்டாவில் இந்து மகா வித்தியாலய அணி 31.2 பந்துப் பரிமாற்றங்களில் அனைத்து இலக்குகளையும் இழந்து 96 ஓட்டங்களைப் பெற்றது. கவியரசன் 18 ஓட்டங்களையும், கேசவன் 06 ஓட்டங்களையும் பெற்றதுடன் உதிரிகளாக 43 ஓட்டங்களும் பெறப்பட்டன.

யூனியன் கல்லூரி அணியைச் சேர்ந்த சயனிடனிஸ் 2.2 பந்துப்பரி மாற்றங்கள் பந்து வீசி 02 ஓட்டமற்ற பந்துப் பரிமாற்றங்களுடன் 03 ஓட்டங்களுக்கு 02 இலக்குகளையும், மதீசன் 03 பந்துப் பரிமாற்றங்கள் பந்துவீசி 02 ஓட்டமற்ற பந்துப்பரி மாற்றங்களுடன் 10 ஓட்டங்களுக்கு 02 இலக்குகளையும், தேனுஜன், பமில்ரன், டில்சான், பிரசாந்தலா ஒரு இலக்கையும் கைப்பற்றினார்கள்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய யூனியன் கல்லூரி அணி 13 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 03 இலக்குகளை இழந்து 98 ஓட்டங்களைப் பெற்றது.

லவன்ராஜ் 31 ஓட்டங்களையும், பிரகாஸ் 24 ஓட்டங்களையும் பெற்றதுடன் உதிரிகளாக 26 ஓட்டங்களும் பெறப்பட்டன.

கோண்டாவில் இந்து மகா வித்தியாலய அணியைச் சேர்ந்த திலீபன், டிலக்சன், ரஜீபன் முறையே 03, 22, 37 ஓட்டங்களைக் கொடுத்து தலா ஒரு இலக்கைக் கைப்பற்றினார்கள். (த-86)

# ஆலடி சிந்து, வள்ளுவர்,பாரதி அணிகள் தாச்சியில் வென்றன

யாழ்ப்பாணம், ஜூன் 1

யாழ். மாவட்ட தாச்சிச் சங்கத்தின் அனுமதியுடன் தாவடி காளியம்பாள் விளையாட்டுக் கழகம் மின்னொளியில் நடத்தும் லீக் முறையிலான தாச்சி சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் தாவடி காளியம்பாள் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.

கடந்த புதன்கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் மயிலிட்டி கண்ணகி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து உடுவில் ஆலடிசிந்து விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது.

இதில் உடுவில் ஆலடி சிந்து விளையாட்டுக்கழக அணி 9:5 என்ற பழங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் கோண்டாவில் மறுமலர்ச்சி விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து மயிலிட்டி வள்ளுவர் விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது.

இதில் மயிலிட்டி வள்ளுவர் விளையாட்டுக்கழக அணி 14:3 என்ற பழங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் மடத்தடி வைகறை விளையாட்டுக்கழக 'பி' அணியை எதிர்த்து அளவெட்டி பாரதி விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது.

இதில் அளவெட்டி பாரதி விளையாட்டுக்கழக அணி 7:5 என்ற பழங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. (த-23)

# உதைபந்தாட்ட சுற்றுப் போட்டி

யாழ்ப்பாணம், ஜூன் 1

இலங்கை உதைபந்தாட்ட சிரேஷ்ட சங்கம் அகில இலங்கை ரீதியாக நடத்தும் 40 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டம் ஒன்று இன்று ஞாயிற்றுக்கிழமை மருதமுனை மசூர் மௌலானா விளையாட்டரங்கில் மாலை 4 மணிக்கு இடம் பெறவுள்ளது.

இதில் வதிரி டயமன்ஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து அம்பாறை ஈஸ்ரன் யூத் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (த-23)

# 15 வயது பெண்கள் கபடியில் வவுனியா பரக்கும்ப சம்பியன்

யாழ்ப்பாணம், ஜூன் 1

வட மாகாணப் பாடசாலைகளின் 15 வயதுப் பிரிவு பெண்களுக்கான கபடிப் போட்டியின் இறுதியாட்டத்தில் வவுனியா பரக்கும்ப மகா வித்தியாலய அணி வெற்றி பெற்றுச் சம்பியன் ஆனது.

கடந்த புதன்கிழமை முல்லைத்தீவு மகா வித்தியாலய மைதானத்தில் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் வவுனியா பரக்கும்ப மகா வித்தியாலய அணியை எதிர்த்து பண்டத்தரிப்பு ஜசிந்தா றோ.க.த.பாடசாலை அணி மோதிக்கொண்டது.

இதில் வவுனியா பரக்கும்ப மகா வித்தியாலய அணி 27:18 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி பெற்றது.

மூன்றாமிடத்துக்கான ஆட்டத்தில் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை அணியை எதிர்த்து இளவாலை கன்னியர்மட மகா வித்தியாலய அணி மோதிக்கொண்டது. இதில் மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை அணி 21:20 என்ற புள்ளி அடிப் படையில் வெற்றி பெற்று மூன்றாமிடத்தைத் தனதாக்கிக் கொண்டது. (த-23)


சம்பியன் பெற்ற அணியினர்

# சம்பியனானது தீருவில்

யாழ்ப்பாணம், ஜூன் 1

றேவதி ஐக்கிய இளைஞர் விளையாட்டுக்கழகம் வல்வைக்கு உட்பட்ட கழகங்களுக்கு இடையில் உதைபந்தாட்டத்தை ஊக்குவிக்கும் முகமாக நடத்திய 7பேர் பங்குபற்றும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் இறுதியாட்டத்தில் தீருவில் விளையாட்டுக்கழக அணி வெற்றி பெற்றுச் சம்பியன் ஆனது.

நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை றெயின்போ விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் இளங்கதிர் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து தீருவில் விளையாட்டுக் கழக அணி மோதிக்கொண்டது.

இதில் தீருவில் விளையாட்டுக் கழக அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

சிறந்த விளையாட்டு வீரனாக தீருவில் விளையாட்டுக்கழக அணி வீரர் மதன் தெரிவானார்.

சிறந்த கோல்காப்பாளராகத் தீருவில் விளையாட்டுக்கழக அணி வீரர் மயூரன் தெரிவானார்.

சிறந்த பின் களவீரராக இளங்கதிர் விளையாட்டுக்கழக அணி வீரர் ரஞ்சித் தெரிவானார். (த-23)

# ஸ்ருதி ஹாசனின் வலையில் ரெய்னா





நடிகை ஸ்ருதி ஹாசனும், கிரிக்கெட் வீரர் ரெய்னாவும் காதலிப்பதாக பொலிவூட்டில் செய்திகள் பரவியுள்ளன.

தமிழ், தெலுங்கு, இந்தி எனக் கலக்கும் நடிகை ஸ்ருதி ஹாசன் முதலில் நடிகர் சித்தார்த்துடன் இணைத்து கிசுகிசுக்கப்பட்டார்.

ஆனால் கடந்த 2011ஆம் ஆண்டு இருவரும் பிரிந்தனர். தற்போது கிரிக்கெட் வீரர் சுரேஷ் ரெய்னாவுடன் இணைத்து பேசப்படுகிறார்.

ஸ்ருதியும் ரெய்னாவும் நண்பர் ஒருவர் மூலமாக அறிமுகமானார்கள். அன்று முதல் இருவரும் நெருக்கமான நட்பில் இருக்கின்றனர். இருவரும் சந்தித்துப் பேச நேரம் கிடைக்காத போதிலும் தனிமையில் சந் திப்பதற்காக நேரம் ஒதுக்குகிறார்கள். இது பற்றி இருவரிடமும் கருத்துக் கேட்க முயன்றபோது இருவரையும் தொடர்பு கொள்ள இயலவில்லை என்று பொலிவூட் பத்திரிகை ஒன்று தகவல் தெரிவித்துள்ளது. (கு)



# மகனுக்காக அடித்த சதம்

சென்னை அணிக்கெதிரான ஆட்டத்தில் எனது அதிரடி ஆட்டத்துக்கு, நான் என் மகனுக்கு செய்து கொடுத்த வாக்குறுதி தான் காரணம் என்று ஷேவாக் கூறியுள்ளார்.

நேற்று முன்தினம் நடந்த 2ஆவது தகுதி ஆட்டத்தில் புயலாய் மாறிய பஞ்சாப் அணியின் அதிரடி வீரர் ஷேவாக் சென்னை அணியின் பந்து வீச்சுகளைப் புரட்டி எடுத்தார். இவர் 58 பந்தில் 12 நான்கு, 8 ஆறு உட்பட 122 ஓட்டங்கள் எடுத்தார். இந்த போட்டித் தொடரில் இது 2ஆவது சதமாகும்.

இவரது அதிரடி மூலம் பஞ்சாப் அணி சென்னை அணியை வீழ்த்தி இறுதிப்போட்டிக்குள் நுழைந்தது.

இது பற்றி ஷேவாக் கூறுகையில்; நான் ஓட்டங்கள் எடுக்காமல் மோசமாக விளையாடுவதால் எனது மகனை அவனது சக மாணவர்கள் கிண்டல் செய்துள்ளனர். அதனால் நான் அவனிடம் சிறப்பாக விளையாடி ஓட்டங்கள் குவிப்பேன் என்று உறுதியளித்தேன். அதன்படி அதிரடியாக விளையாடி ஓட்டங்கள் குவித்தேன். மேலும் எனது ஆட்டம் மூலம் பஞ்சாப் அணி வெற்றி பெற்றமை மகிழ்ச்சியளிக்கிறது என்று கூறியுள்ளார். (கு)

# மகிழ்ச்சியில் கங்குலி




நீண்ட இடைவெளிக்கு பின் இந்திய அணியில் கம்பீருக்கு இடம் கிடைத்தது மகிழ்ச்சி அளிக்கிறது என்று கங்குலி தெரிவித்துள்ளார்.

இந்திய அணி வரும் ஜூலை மாதம் இங்கிலாந்துக்குச் சுற்றுப்பயணம் செய்து அந்நாட்டு அணிக்கெதிராக ஐந்து டெஸ்ட் போட்டிகளில் விளையாட உள்ளது. இந்த அணியில் நீண்ட இடைவெளிக்குப் பின்னர் தொடக்க ஆட்டக்காரரரான கௌதம் கம்பீர் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இது குறித்து சவுரவ் கங்குலி கருத்து வெளியிட்டபோது, கடந்த டிசெம்பர் 2012 முதல் இந்திய அணிக்காக விளையாட தெரிவு செய்யப்படாமல் விலக்கி வைக்கப்பட்ட கம்பீருக்கு தற்போது மீண்டும் வாய்ப்பு வழங்கியிருப்பது மகிழ்ச்சி அளிப்பதாக உள்ளது என்றும் தேர்வாளர்களின் இந்த முடிவு வரவேற்கத்தக்கது எனவும் கூறியுள்ளார்.

இதுவரை 54 டெஸ்ட் போட்டிகளில் பங்கேற்று 4021 ஓட்டங்களைக் குவித்துள்ள கம்பீர் 9 சதத்தையும் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (கு)

# புற்றுநோய் பீடித்த சிறுவர்களுக்கு நம்பிக்கையளித்தார் யுவராஜ் சிங்



புற்றுநோய்ப் பாதிப்பில் இருந்து மீண்டு வந்த இந்திய அணியின் கிரிக்கெட் வீரர் யுவராஜ் சிங் மும்பையில் புற்றுநோய் பாதித்த குழந்தைகளைச் சந்தித்து பேசினார். புகழ்பெற்ற புற்றுநோய் சிகிச்சை மையமான டாடா நினைவு மருத்துவமனை, முதல் முறையாக மாஸ்கோவில் அடுத்த மாதம் நடைபெற உள்ள புற்றுநோயில் இருந்து உயிர்பிழைத்த குழந்தைகளுக்கான உலக தடகளப் போட்டியில் பங்குபெற 11 குழந்தைகளை அனுப்புகிறது. இந்தக் குழந்தைகள் நீச்சல், ஓட்டப்பந்தயம், டேபிள் ரென்னிஸ் மற்றும் துப்பாக்கி சுடுதல் ஆகிய போட்டிகளில் பங்கேற்கவுள்ளனர். இவர்களைச் சந்தித்து வாழ்த்துத் தெரிவித்த யுவராஜ் சிங், அவர்களுக்கு ஆலோசனைகளை வழங்கினார்.

இது குறித்து யுவராஜ் சிங் கூறுகையில்; நான் புற்றுநோயில் இருந்து குணமடைந்து மீண்டும் விளையாடத் தொடங்கியபோது, இந்தக் குழந்தைகளுக்கும் அதே அளவு நம்பிக்கை கிடைத்தது. அதே போல் கடுமையாகப் போராடி அவர்கள் விரும்பியபடி விளையாட்டுக்குத் திரும்பியுள்ளனர். இதன்மூலம் அவர்கள் சமுதாயத்துக்குச் சிறந்த பங்களிப்பைச் செய்துள்ளனர்.

நான் புற்றுநோயில் இருந்து குணமடைந்து மீண்டும் விளையாடத் தொடங்கிய போது, இந்தக் குழந்தைகளுக்கும் அதே அளவு நம்பிக்கை கிடைத்தது.

மேலும், இந்தத் தொடரில் விளையாடும் போது தடுமாற்றம் இருக்கும். அது விளையாட்டில் கவனத்தை அதிகரிக்க செய்யும். ஆனால் தைரியத்துடன் இந்த தொடரில் சிறப்பாக விளையாடுவார்கள் என்று நம்புகிறேன் என்று கூறியுள்ளார். (கு)

# கோபத்தில் டோனி



ஐ.பி.எல். தொடரில் நேற்று முன்தினம் நடந்த தகுதிப் போட்டியயில் சென்னை தோல்வி யடைய அனுபவம் வாய்ந்த வெளிநாட்டு வீரர்களே காரணம் என டோனி கூறியுள்ளார்.


இந்தத் தோல்வி குறித்து சென்னை அணியின் தயைலவா டோனி கூறுகையில், ரெய்னாவின் அதிரடியான ஆட்டத்தால் நாங்கள் ஓட்ட இலக்கை எட்டி இருக்க வேண்டும். ஆனால் அணியில் உள்ள அனுபவம் வாய்ந்த வெளிநாட்டு வீரர்கள் பொறுப்பு இல்லாமல் விளையாடினார்கள். இதுவே தோல்விக்குக் காரணமாகும். மேலும் எங்களது சுழற்பந்து வீரர்கள் ஓட்டங்களை வாரிக் கொடுத்து விட்டனர். துடுப்பாட்டத்துக்கு ஏற்ற இது போன்ற ஆடுகளத்தில் சுழற்பந்து வீச்சில் முன்னேற்றம் தேவை. அது மட்டுமல்லாது ஷேவாக்கின் ஆட்டம் மிகவும் அதிரடியாக இருந்தது. அவர் விளையாட ஆரம்பித்து விட்டால் எந்த ஒரு பந்து வீச்சாளராலும் அவரைத் தடுத்து நிறுத்த முடியாது என்று கூறினார். (கு)

முதலீடு ஒரு முறை மட்டும் !!

## விரைவான வேலை மூலம் அதிக இலாபம் பெற

### ஜூஸ் பக்கெட் மெசின்






பெறுமதியான பரிசுகளுடன்

1 மணித்தியாலத்தில் 2000 பக்கட்டுகளை தயாரிக்கும் திறன்

- 1 வருட உத்தரவாதம்
- இலவச செயல்முறைகளுடன் கூடிய பயிற்சி வழங்கப்படும்
- விற்பனைக்கு பின் சேவை
- இலவச விநியோகம்

ரூ.2 /=
ரூ.5 /=
ரூ.10 /=
பக்கட்டுகளை தயாரிக்கலாம்

தமிழில் தொடர்பு கொள்ள

**077 391 8870**

WINRICH INTERNATIONAL(PVT)LTD
No.18,Ground Floor,Lucky Plaza,St.Anthony's Mawatha,Kollupitiya,Colombo - 03

---

பனை ஆராய்ச்சி நிறுவனம்
பனை அபிவிருத்தி சபை
பாரம்பரிய கைத்தொழில்கள்
மற்றும்
சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சு

## பனை ஆராய்ச்சி மாநாடு

பனைவள ஆராய்ச்சி ஊடாக பனைவளம் சார்ந்த கைத்தொழில்களை அபிவிருத்தி செய்தல் இம்மாநாட்டிற்கு கல்வியாளர்கள், பனம் பொருள்கள் உற்பத்தியாளர்கள், விற்பனையாளர்கள் மற்றும் பனங் கைத்தொழிலில் பங்கு பெறுவோர் அனைவரும் கலந்து பயன்பெற அன்புடன் அழைக்கின்றோம்.

**பிரவேசம் இலவசம்**

திகதி - நாளை (02.06.2014) திங்கட்கிழமை
நேரம் - காலை 9.00 - மாலை 3.00
இடம் - யாழ் வீரசிங்கம் மண்டபம்
தொடர்புகளுக்கு: பனை ஆராய்ச்சி நிறுவனம்
கண்டி வீதி, கைதடி.
யாழ்ப்பாணம்.
தொ.இல. 021 205 7065
தொலைநகல் இல. 021 205 7066

(சி/13930) (7.6.3)

---

## நவீன உல்லாசமனை நாள், மாத வாடகைக்கு

யாழ் நகரில் உங்கள் உல்லாசமான விடுமுறையை கழிப்பதற்குத் தரமான தங்குமிட வசதிகள் செய்து கொடுக்கிறார்கள் சங்கென் ஸ்தாபகத்தினர் (துளசி மஹால் தொடர் மாடி மனையில் கச்சேரி அருகில்) சகல விதமான தளபாடங்களுடன் ஒரு அறை மற்றும் 2 அறை மனைகள் நாள், மாத வாடகைக்கு விடப்படுகின்றது.

(C/14098)(7.6.3)

சுகாசினி - 021 320 2868, பாஸ்கரன் 021 221 9539

---

## வீடு / கட்டடம் வாடகைக்குத் தேவை

நிறுவனமொன்றின் பாவனைக்கு வீடு அல்லது கட்டடம் வாடகைக்குத் தேவை. ஆகக் குறைந்தது 1800 சதுர அடி விஸ்தீரணமும், வாகனம் நிறுத்தக் கூடிய வசதியும் எதிர்பார்க் கப்படுகிறது.

யாழ். நகரை அண்மித்த பகுதி விரும்பத்தக்கது.

தொடர்பு : 076 6688288

---

Wisdom Business Academy
The Specialist in CIMA Education
WISDOM BUSINESS ACADEMY

CIMA
Chartered Institute of Management Accountants

# OPERATIONAL & MANAGEMENT LEVELS

## மாணவர்கள் எதிர்பார்த்த புதிய மாற்றங்களுடன் சிறப்பு விரிவுரைகள்...

*Starts on 07th of June 2014(Saturday)*

# Wisdom Jaffna

**No - 154 A/1, Navalar Road, Jaffna.**
**Tel : 021 222 0727, 021 720 0777**
**Email : wisdomjaffna@gmail.com**

ஒருதருணம் ! ஒருவாய்ப்பு ! ஒருவேட்கை ! ஒருவாழ்க்கை !

---

# CIMA

## Operational & Management level

அனுபவமும் திறமையும் மிக்க எமது விரிவுரையாளர் குழு

**FO**



**Rajaram Purusothamakuru**
- Lecturer CIMA 2yrs Experience
- Undergraduate University of Sri Jayewardenepura Department of Accounting (B.Sc Accounting).
- District First 2010 A'Level in Commerce.

**EO & EM**



**Pathmanathan Ragasuthan**
- BBA
- CIMA Passed Finalist.
- National Field Finance Officer (UNOPS South Asian Operational Hub).
- More than 3yrs lecturing Experience.

**FM**



**Sivagnanamoorthy Siva Mayuran**
- BA [ Hons] Accounting and Finance.
- CIMA Passed Finalist.

**PO & PM**



**Logendran Mayuran**
- CIMA passed Finalist
- BBA (Hons 1st Class)
- Corporate Experience: Financial Risk Analyst and Internal Auditor for 1.5 years at Union Bank of Colombo Plc
- CIMA Lecturing Experience: 4 years

Starts on 7th June 2014 (Saturday)

# SPECTRA SKILLS

**No.19, STANLEY ROAD, JAFFNA**
**Tel :- 0212221422 / 0212221423 / 775748095**

---



உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் உயர் சம்பளத்துடனான வேலை வாய்ப்பு

**CIMA@MCS** Highest Pass rate!
Certificate, Operational, Managerial
Operational level November தோற்றுவோருக்கு
Certificate level fast track classes
For Schol.type CIMA< Name>& sent 772395895

**MCS IT CAMPUS** (யாழ் பல்கலைக்கழகத்திற்கு அருகாமையில்)

கொழும்பு பல்கலைக்கழக வெளிவாரி பட்டப்படிப்பு
CCNA,Computer Engineering-USA
அனைத்தும் ஒரே கட்டணத்தில்
Degree+ BCS,MCSE,CCNA,IEEE
அடிப்படைத் தகைமை: G.C.E(O/L)
For schol.type BIT + <Name>&sent 772395895

BIT
Batch1: Weekdays
Batch2: Week ends
Batch3: Sunday only

சிறந்த பெறுபேற்றுக்காக கொழும்பு பல்கலைக் கழகத்திடமிருந்து விருதினை வென்ற நிறுவனம்

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 1.06.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.